அறைவு 03 இயம் 45 May 30-June 05, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

SPONSOR VISA
IELTS @ VBC
VEAL BUSINESS COLLEGE
026 2227622 - 07702 03 201

HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# சம்பூர் காணிகளுக்குச் செல்லத் தடை



கேட்வே நிறுவனத்தின் வதிவிடக் கொள்கலன்கள்

விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சம்பூர் காணிகளுக்குள் மக்கள் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவுடன் உரிய இடத்திற்கு வருகை தந்திருந்த காவல்துறை ஆய்வாளர் சவாஹிர் இந்தத் தகவலை மக்களுக்கு வழங்கியதுடன் இன்று முதல் எதிர்வரும் 16ம் திகதி வரைக்கும் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பொது மக்கள் பிரவேசிப்பதைத் தடைசெய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சம்பூர்மக்களின் மீள்குடியேற்றம் 17



## சம்பூர் மக்கள் ஆதங்கம்

### எங்களைத் தவறாக வழிநடத்தி விட்டார்கள்

சம்பூரில் முதலீட்டு ஊக்குவிப்புச் சபைக்கென ஒதுக்கப்பட்ட காணிகளை மீண்டும் மக்களுக்கே கையளிக்கும் ஆணையைக் கொண்ட வர்த்தமானியின் மீது விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை நீடிப்பதில்லை என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்ற தகவலை மட்டுமே எமக்குத் தந்தவர்கள் விடுவிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள நிலம் முன்னர் உள்ளது போலவே இருக்க வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை ஏன் மறைத்தார்கள் என்ற கேள்வியை மக்கள் எழுப்பியுள்ளனர்.

விடுவிக்கப்பட ஏற்பாடாகியுள்ள நிலத்தின் உரிமையாளர்களிற் சிலரைச் நேற்று (29) 17

## கிழக்கு முதல்வரின் வாக்குறுதிகள் நீரில் எழுத்து! கல்வி அமைச்சரைச் சந்திப்பதால் பயன் இல்லை!!!

# தொண்டராசிரியர்கள் உணவொறுப்புப் போருக்கு முனைவு

கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கான நியமனம் வழங்கப்படும் வரை சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த தயாராகியுள்ளனர்.

இப்போராட்டம் தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் அமைப்- பாளர்கள் அனைவருக்கும் 17



## தேசிய மட்டத்தில் மாணவி சாதனை

# கிழக்கிற்கு ஒரு பதக்கம்



தேசிய கனிட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் பங்குபற்றிய மாணவி நுஸ்ரத் பானு பதக்கமொன்றை வென்று கிழக்கிற்கே 17

# வாகரையில் இராணுவம் கையகப்படுத்திய காணிகளை மீட்பது தொடர்பாக ஆராய்வு

வாகரையில் படையினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை மீள தங்களிடம் வழங்குமாறு வாகரை மக்கள் கோரிக்கைகளை விடுத்துள்ளனர்.

சுமார் 40 ஏக்கர் காணிகளை இழந்துள்ள முருக்கைமுனை கிராம மக்களே தமது காணிகளை மீட்கும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக தமிழ்த்தேசிய மக்கள் முன்னனியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்களுடன் மலைமுரசின் 17



- விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் உண்மையை மட்டும் உலகிற்கு வெளிப்படுத்தும் கிழக்கின் வார இதழ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# மக்கள் எழுச்சியும் தடைகளும்

**யு**த்தம் ஓய்வுக்கு வந்த பின்னர் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் போராட்ட வடிவமொன்றுக்குள் ஒட்டுமொத்தமாக ஈர்க்கப்பட்ட நிகழ்வாக வித்தியாவின் கோரக்கொலை பதிவாகிவிட்டது.

2009ன் பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் தனித்தனியாக பல போராட்டங்களை மக்கள் பதிவு செய்துள்ளனர். காணிச்சுவீகரிப்பு, நியமனங்கள், காணாமற்போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பகிஸ்கரிப்பு போன்றவற்றை இப்போராட்டங்களுக்கு உதாரணமாகக் கூறலாம்.

எனினும் இப்போராட்டங்கள் குறித்த ஒரு பிரதேசத்திற்குள் அல்லது மாவட்டத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. அவை வெகுசன போராட்டங்களாகவோ அல்லது தமிழ் மக்களை புள்ளியொன்றில் இணைக்கும் போராட்டமாகவோ உருவாகவில்லை.

ஆனால் வித்தியாவின் கொலையை அடுத்து தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைக்கப்பட்ட புள்ளியொன்றில் தமது போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இவ்வெகுசன போராட்டமானது ஒரு புள்ளியில் தனது கட்டுப்பாட்டை இழந்து வன்முறையாக மாறியது. இவ்வாறு வன்முறை முகத்தைக் கொண்ட அப் போராட்டமானது பேரினவாதத்திற்கு ஓர் எச்சரிக்கை மணியை ஒலிக்க வைத்துள்ளது என்பது இங்கு முக்கியமாக கவனிக்கத்தக்கது. அவ் எச்சரிக்கை மணியூடாக பல விடயங்கள் வெளிவந்துள்ளன.

அவ்விடயங்களுள் மிக முக்கியமானது அஹிம்சைப் போராட்டமானது உரியமுறையில் உரியவர்களால் கருத்திலெடுக்கப்பட்டு பதிலளிக்கப்படும் செயற்பாடு நடைபெறவில்லையாயின் போராட்டத்தின் அடுத்த கட்டத்திற்கு மக்கள் தள்ளப்படுவார்கள் என்பதாகும்

இரண்டாவதாக தமிழ் மக்கள் தமது வெகுசனப் போராட்டத்தின் வலுவை தற்போதும் தக்கவைத்-துள்ளனர் என்ற செய்தியாகும்.

தமிழ்மக்களின் ஆயுதப் போராட்டமானது மௌனிக்கப்பட்ட பின்பு அம்மக்களின் வெகுசன போராட்ட வலுவானது ஒட்டுமொத்தமாக மழுங்கடிக்கப்பட்டு விட்டது என்ற அசையாத நம்பிக்கை பேரினவாத சக்திகளிடையே கட்டியெழுப்பப் பட்டிருந்தது.

அது போலவே தமிழ் மக்களிடையேயும் வெகுசனப் போராட்டம் சார்ந்த தமது வலு தொடர்பான சந்தேகமே மேலோங்கியிருந்தது.

வித்தியாவின் கொலையுடன் மேலோங்கிய வெகுசன போராட்டமானது பேரினவாத நம்பிக்கையை சிதரடித்ததுடன் தமிழ் மக்களின் கூட்டுமனச் சாட்சியை தட்டியெழுப்பி ஒருமுகப்படுத்தப்பட்ட போராட்ட-மொன்றை முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கையை மீள உருவாக்கியுள்ளது.

ஒரு முகப்படுத்தப்பட்ட இப் போராட்டத்தில் உருவாகிய வன்முறைகளை அடுத்து வடக்கு கிழக்கு எங்கும் பேரணிகளை தடுத்து நிறுத்திவிடும் முடிவைக் காவல்துறை பின்பற்றுகின்றது.

தமிழ் மக்களின் ஒரு முகப்படுத்தப்பட்ட போராட்டத்தை அடுத்தே இந்தத் தடையுத்தரவு வடகிழக்கெங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

போரோய்வின் பின்னர் தமிழர்களின் ஒருமுகப்பட்ட குரல் ஓங்கியொலித்திருப்பது அச்சத்தை விதைத்துள்ளதாலேயே இத்தடை உருவாகியுள்ளது. மிக அவசரமாக முன்மொழியப்பட்டுள்ள இந்தத் தடையால் நினைத்ததை அடைந்துவிட முடியுமா என்பது பற்றி உரியவர்கள் சிந்திக்க வேண்டும்.

# களவுச் சந்தேக நபர் மூவர் கைது

**தி**ருகோணமலை மாவட்டத்திலுள்ள வீடுகளை இரவு வேளைகளில் உடைத்து பொருட்களை கொள்ளையிட்டு வந்த சந்தேகத்தின் அடிப்படையில் மூவர் கைதாகியுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்கள் தொடர்புபட்டுள்ளதாக எனத் தெரிவித்த காவல்துறையினர் இவர்கள் மீது ஏற்கெனவே உப்புவெளி, திருகோணமலை துறைமுக மற்றும் திருகோணமலை தலைமையகப் காவல் நிலையங்களில் சுமார் 13 குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள், கணினி, மடிக்கணினி, தொலைக்காட்சி, கையடக்க தொலைபேசி, கைக்கடிகாரம், சிகையலங்கார உபகரணங்கள் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன.

# வலய மட்டத்தில் சாஹிறா கல்லூரி முதலிடம்

**க**டந்த வருடம் நடைபெற்ற க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் திருமலை சாஹிரா கல்லூரி 92 வீத பெறுபேற்றை பெற்று திருகோணமலை கல்வி வலய பாடசாலைகளுள் முதலிடத்தை பெற்றுள்ளது.

கடந்த வருடம் சிறந்த பெறுபேற்றை பெற்ற மேற்படி பாடசாலையானது இம்முறையும் திருமலையின் பல முன்னணிப் பாடசாலைகளையும் பின்தள்ளி முதலிடத்தை பெற்றுள்ளது. இம்முறை வெளிவந்த பெறுபேறுகளின் அடிப்படையில் சாஹிரா கல்லூரி 92 வீதம், சண்முகா இந்து மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) 89.85 வீதம் கோணேஸ்வரா இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை) 77.07 வீதம், விவேகானந்தா கல்லூரி 75.57 வீதம், புனித மரியாள் கல்லூரி (தேசிய பாடசாலை ) 75.16 வீதம், புனித சூசையப்பர் கல்லூரி (தேசியப் பாடசாலை) 65.63 வீதம் மெதடிஸ்ட் பெண்கள் கல்லூரி 65 வீதம் ஆகிய பெறுபேறுகளை மேற்படி பாடசாலைகள் பெற்றுள்ளன.

வளர்ந்து வரும் பாடசாலையான சாஹிரா கல்லூரியானது அனைத்து பாடங்களிலும் சிறப்பான பெறுபேறுகளை பெற்றுள்ளது. ஏ.ஆர்.அலானா, டி.எப்.ருசைதா என்.எப்.நுஸ்கா, ஏ.அப்ரனா ஆகியோர் 8ஏ-1பி சித்திகளையும், எம்.கே.ரிப்னா என்.சகானா ஆகியோர் 8ஏ-1சி சித்திகளையும், ஐ.குர்சித் 8ஏ-1எஸ், எம்,பா.பாத்திமா ஹனானியா 7ஏ-2பி சித்திகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஏ.ஜே.எம்.சாலி)

# கல்வி அமைச்சர் கிழக்கில் பயணம்

**கி**ழக்கு மாகாண கல்வி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் சி.தண்டாயுதபாணி அவர்கள் 28.05.2015 வியாழக்கிழமை காலை 7.30மணிக்கு இருதயபுரம் தமிழ் வித்தியாலயத்திற்கு திடீர் வருகை மேற்கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார் பின்பு அதிபரை சந்தித்து பாடசாலையின் தேவைகள் சம்பந்தமாக கேட்டறிந்தார்.

மட்டக்களப்பு ஏறாவூர் அல் அசார் முஸ்லீம் பெண்கள் கல்லூரியில் வாசிகசாலை கட்டிடத்திட்கான அடிக்கல் வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

அன்று காலை 10.30 மணிக்கு பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பயிற்சிகளை நிறைவு செய்த 115 ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்து உரையாற்றினார். தனதுரையில் இனிவரும் காலங்களில் க்லிவ அமைச்சின் அனுமதியின்றித் தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் எந்த வித நடவடிக்கைகளையும் பாலர் பாடசாலைகளில் மேற்கொள்ள முடியாது எனத் தெரிவித்ததுடன் முன்பள்ளி ஆசியர்களுக்கான ஊதியம் வழங்குவதற்கு தன்னால் முடிந்த முயற்சியை செய்வேன் என்றும் தெரிவித்தார். இந்நிகழ்வில் கல்வி அமைச்சருடன் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஷீர் அகமட் அவர்களும் கலந்து கொண்டார்.

பின்னர் யுனிசெவ் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அமைச்சர் சம்பூர் குடியேற்றம் சம்பந்தமாகவும் தேவைப்படும் அடிப்படை தேவைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடினார்.

அன்று மாலை ஜிஜஇசட் பிரதிநிதிகளுடனான சந்திப்பு அமைச்சரின் பிரத்தியேக இல்லத்தில் நடைபெற்றது. (அச்சுதன்)

# காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**ம**ட்டக்களப்பு மாவட்ட கோறளைப் பற்று மேற்கில் ஐம்பத்தைந்து காணி உரிமையாளர்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கி வைக்கப் பட்டது.

இந்நிகழ்வு கோறளைப்பற்று பிரதேச செயலக உப செயலாளர் தலைமையில் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

(யாசின்)



# வைகாசிப் பொங்கல் விழா

**வ**ரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசி விசாக பொங்கல் விழா 25.05.2015 திங்கட்கிழமை மாலை ஆலயத்தில் இடம்பெற்றது. (அச்சுதன்)



# நிரந்தர நியமனங்கள்

**தி**ருகோண்மலை மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களில் நீண்டகாலமாக நிரந்தர நியமனமின்றி கடமையாற்றியவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு திருகோணமலை கமநல அபிவிருத்தி திணைக்கள மண்டபத்தில் 26.05.2015 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு காணி அமைச்சர் எம்.கே.ஏ.பி.எஸ். குணவர்த்தன அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந் நியமனம் வழங்கும் நிகழ்வில் இருபத்தொன்பது ஊழியருக்கு நிரந்தர நியமனங்கள் அமைச்சரால் வழங்கப்பட்டன. (அச்சுதன்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## சமூக சேவை உத்தியோகத்தர் சுட்டுக்கொலை

வெள்ளாவெளி, மண்டூர் பகுதியில் இடம்பெற்ற சமூக சேவை உத்தியோகத்தரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவரால் 42 வயதான சமூக சேவை உத்தியோகத்தர் கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் அமைதியான முறையில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை வழங்குமாறு வலியுறுத்தும் சுலோகங்களை ஏந்தியிருந்தனர்.

## நிரந்தர நியமனம் தேவை

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிகமாகப் பணியாற்றிய ஊழியர்களின் தொழில்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தி முடிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் நிறைவடையவுள்ள நிலையில், சம்பந்தப்பட்டவர்களுக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத சிலர் 180 நாட்களுக்கு மேல் கடமையாற்றியவர்களின் பட்டியலில் தமது பெயர்களையும் புகுத்தி அரசியல்-வாதிகளினூடாக குறுக்கு வழியில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு முயற்சித்து வருவதாக சந்தேகிக்கப்படுகிறது. இவ்வாறானதொரு நிலைவரம் காணப்படு-கின்றமையினால் தான் தகுதியானவர்-களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்-பட்டு வருவதாக அறிய முடிகிறது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் 180 நாட்களுக்கு மேல் தற்காலிகமாகப் பணியாற்றி வரும் நிலையில், நிரந்தர நியமனத்தினைப் பெறுவதற்காக நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றியவர்-களுக்கு இன்னும் காலத்தினை இழுத்தடிக்காமல் உடனடியாக நிரந்தர நியமனங்களை வழங்கி வைக்குமாறு சம்பந்தப்பட்ட ஊழியர்கள் கேரிக்கை விடுக்கின்றனர்.

## ஆதரவுக்கான கையெழுத்து சேகரிப்பு

மியன்மார் அகதிகளுக்கு ஆதரவு தேடும் வகையில் கையெழுத்து வேட்டை ஒன்றை தேசத்தின் நண்பர்கள் அமைப்பு மட்டக்களப்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளது. இந்த கையெழுத்துப் பத்திரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான பிரதிநிதிகள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. இலங்கைப் பிரஜைகள் என்ற வகையில் மியன்மாரில் நடைபெற்றுவரும் வன்முறைகளை கண்டிப்பதுடன், அம்மக்கள் படும் துயரத்தினை எண்ணி மனம் வருந்துகிறோம். அம்மக்களின் மரணத்தினைத் தடுத்து நிறுத்த வேண்டும். அத்துடன், ஐக்கிய நாடுகள் மனிதாபிமானத்தினைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான தற்காலிக தங்குமிடத்துக்கான ஏற்பாடு செய்தாக வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள், தேசத்தின் நண்பர்கள் அமைப்பினால் முன்வைக்கப்பட்டுள்ளன.



## மீண்டும் ஆயுதக் கலாச்சாரம்

மட்டக்களப்பில மீண்டும் ஆயுதக் கலாசாரம் தலைதூக்கியுள்ளது போன்ற பதற்ற நிலையினை ஏற்படுத்தியுள்ள மண்டூர் சூட்டுச் சம்பவத்தின் பின்னணி தொடர்பாக பொலிசார் துரித விசாரணை நடத்தி குற்றவாளிகளை அடையாளப்படுத்த வேண்டும் என கிழக்கு மாகாண உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மண்டூரில் இடம்பெற்ற துப்பாக்கிசூடு தொடர்பில் கடந்த வியாழக்கிழமை ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான ஒன்றுகூடல்

மாவட்டத்திலுள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளின் எதிர்கால செயற்பாடுகளை முன்னெடுப்-பதற்காக வேலையற்ற பட்டதாரிகளுக்கான கூட்டம், இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அதன் தலைவர் உ.உதயவேந்தன் தெரிவித்தார். எனவே, மாவட்டத்திலுள்ள அனைத்து வேலையைற்ற பட்டதாரிகளும் கலந்துகொள்வது மட்டுமின்றி, பட்டதாரிகளின் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதால் அனைத்து வேலையைற்ற பட்டதாரிகளும் தவறாது கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வெளிநாடு செல்வதை விடுத்து சுயதொழில் முயற்சி

பெண்கள் தொழிலுக்காக வெளிநாடு செல்வதால் பல குடும்ப பிரச்சினைகள், பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பாக ஏற்படுகின்ற துஸ்பிரயோகங்கள் மற்று வெளிநாடுகளில் இவர்கள் முகம் கொடுகின்ற பல துன்புறுத்தல்களை ஒழிப்பதற்காக மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயுலகத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்திப் பிரிவினால் பெண்கள் விவகார அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் வெள்நாட்டு வேலை வாய்ப்ப்பினை எதிர்பார்த்து இருக்கும் பெண்களின் மனநிலையினை மாற்றி வருமானத்தினை பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டம் தொடர்பான ஒரு நாள் விழிப்புணர்வு பயிற்சி கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு மண்முனை பிரதேச செயலாளர் வி. தவராசா தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் கீழ் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் வெளிநாட்டு வேலை வாய்ப்பினை எதிர்பார்த்து இருகின்ற பெண்களில் தெரிவு செய்யப்பட பெண்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி வேலைத்திட்டம் நடாத்தப்பட்டது.





## சீர்பாத தேவி சிலை திறந்து வைப்பு

உலகெங்கும் வாழும் சீர்பாத குலத்தினை தோற்றுவித்தவராக சீர்பாததேவி அரசு இருந்து வருவதுடன் நூறு வீதம் சீர்பாததேவியின் வழித்தோன்ற-ல்கள் வாழும் பிரதேசமாக துறைநீலாவணை இருந்து வருகின்றது. களுவாஞ்சிகுடி பிரதேசத்துக்குட்பட்ட துறைநீலா-வணையில் கிழக்கிலங்கையின் சிற்றரசியாக இருந்த சீர்பாததேவி-க்கு அமைக்கப்பட்ட சிலையை திறந்துவைக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

துறைநீலாவணை இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனின் சொந்த நிதி-யொதுக்கீட்டில் நிறுவப்பட்டுள்ள இந்த சிலையை திறந்துவைக்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இந்த சிலை திறப்பு விழாவில் பெருமளவான பொதுமக்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.





## முதலுதவிப் பயிற்சி முகாம்

அனர்த்த முகாமைத்துவ உபகுழுக்களில் ஒன்றான முதலுதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுவரும் முதலுதவிப்பயிற்சி வகுப்பொன்றை காக்காச்சிவட்டை சுகாதார நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்ப-ட்டிருந்தது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ பிரதான குழுக்களும் அவற்றின் கீழ் இயங்கிவருகின்ற முதலுதவிக் குழு முதலான உபகுழுக்களும் மிகவும் பொறுப்பு வாய்ந்தவை. அக்குழுக்கள் ஒவ்வொன்றும் தங்கள் பொறுப்புக்களை விளங்கிக்கொள்வதோடு அப்பொறுப்புக்களை நிறைவேற்றக்கூடிய இயலுமையையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் தலைவர் த.வசந்தராஜா தெரிவித்தார்.



## புகையிரத விபத்து

ஏறாவூர் பற்று பிரிவுக்குப்பட்ட மாவடிவேம்பு பிரதேசத்தில் வைத்து மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இரவுநேர கடுகதி புகையிரத்தில் மோதுண்டு இளைஞன் உயிரிந்துள்ளதாக தெரியவருகின்றது. மாவடிவேம்பு பிரதேசத்திலுள்ள செல்வம் மகேந்திராஜா (வயது 24) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

கடந்த 26.05.2015 (செவ்வாய்க்-கிழமை) இரவு சுமார் 8.30க்கும் 9.00 க்கும் இடைப்பட்ட நேரப்பகுதியில் இடம்பெற்றிருக்கலாம் என காவல் துறையினர் தெரிவிக்கின்றனர். உயிரிழந்தவரின் தந்தை செல்வம் மரவேலை கூலித்தொழிலாளி. உயிரிழந்த இளைஞன் கொழும்பில் கடற்படையில் தொழில் புரிவதாக தெரிவருகின்றது. புகையிரத்தில் மோதுண்டு உயிரிழந்த இளைஞனின் சடலத்தை புகையிரம் மூலம் வாழைச்சேனைக்கு கொண்டு சென்றுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# தேசிய செய்திகள்

## போலி ஆணங்களுடன் நிதி திரட்டியோர் கைது

சிறுவன் ஒருவனுக்கு சிகிச்சையளிக்க வேண்டும் என பொய் கூறி சட்ட விரோதமான முறையில் பொதுமக்களிடம் நிதி சேகரித்த பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அநுராதாபுரம் ஞானகுலம பகுதியில் ஒரு விகாரையில் 1500 ரூபா பணம் கொடுத்து இவ்வாறு நிதியை சேகரிப்பதற்காக போலியான ஆதாரங்களை தயாரித்ததாகவும் ஒரு நாளுக்கு 5000 ரூபா தொடக்கம் 10000 ரூபா வரை தாங்கள் பணம் சேகரிப்பதாகவும், தங்களுக்கு எந்தவிதமான தொழில் வாய்ப்பு இல்லையெனவும் குடும்ப கஷ்டத்துக்காகவே இவ்வாறு செயற்பட்டதாகவும், இவர்கள் வாக்குமூலம் அளித்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இவ்வாறான நிதியை சேகரிப்பதற்கு முன் நகர சபை அனுமதியையும், பொலிஸாரின் அனுமதியையும் பெறவில்லை என்பது குறிப்பிடதக்கது.

## புதிதாக ஐவர் பதவியேற்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தில் மேலும் ஐவர் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுள்ளனர்.

லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும், பண்டு பண்டாரநாயக்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஹேமால் குணசேகர ஆகியோர் இராஜாங்க அமைச்சர்களாகவும் சந்திரிசிறி சூரியாராச்சி பிரதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

## கடந்தகாலம் குறித்து திருப்தியில்லை

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட சில நிர்மாணங்கள் தொடர்பில் திருப்தியடைய முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். 2015 வீடமைப்பு மற்றும் கட்டடக் கண்காட்சியை இன்று திறந்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

## உடன் பணி நீக்கம்

கடமை நேரத்தில் மது போதையில் இருந்த கண்டி காவல் நிலையத்தைச் சேர்ந்த கடந்த வியாழன் இரவு மது போதையில் இருந்த பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் காண்ஸ்டபிள்கள் இருவரே நேற்று இரவு கைது செய்யப்பட்டு உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

## ஒருபோதும் வாய்ப்பில்லை

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் 'வை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார் பில் போட்டியிடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

## சரத் பொன்சேகாவின் வழக்கு எதிர்வரும் 15ல்



பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற உறுப்புரிமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பிரதம நீதியரசரிடம் சமர்ப்பிப்பதற்கு உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது.

மனு மீதான விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதிகள் குழாமிலிருந்து புவனேக அலுவிகார தனிப்பட்ட காரணங்களுக்காக விலகிக்-கொண்டுள்ளார். அடிப்படை ஆட்சேபனை குறித்து நீதிபதிகள் குழாமில் ஏனைய இரண்டு நீதிபதிகளும் வெவ்வேறு கருத்துக்களை கொண்டிருந்தமையால் மனு மீதான விசாரணையை முன்னெடுப்பதற்கு வேறு நீதிபதிகள் குழாத்தை நியமிக்கும்படி பிரதம நீதியசரிடம் கோருவதாக தீர்மானித்தனர்.

இதனடிப்படையில், வேறு ஒரு நீதிபதிகள் குழாம் முன்னிலையில் அடுத்த மாதம் 15ம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## சடலமாக மீட்பு

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓல்டன், கிங்கோரா பகுதியில் ஓல்டன் சாமிமலை தோட்டத்தைச் சேர்ந்த சுந்தர்ராஜ் விஸ்வலிங்கம் (வயது 31) என்ற இளைஞனின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக மஸ்கெலிய காவல்துறையினர் தெரிவித்தனர்.

## தமிழ் மக்களுக்குச் சொந்தமான கணிகளை அபகரித்து தேரரால் விகாரை நிர்மாணிப்பு

முல்லைத்தீவு கொக்கிளாயில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணியில் சட்ட விரோதமாக விகாரை அமைக்கப்பட்டு வருவதாக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார். முல்லைத்தீவு கொக்கிளாய் வைத்தியசாலைக் காணியின் ஒரு பகுதியையும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளையும் அபகரித்து தேரர் ஒருவரால் படையினர் துணையுடன் குறித்த விகாரை அமைக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொது மக்களின் தகவலையடுத்து கொக்கிளாய் சென்று விகாரை அமைக்கப்படும் காணிக்குச் சொந்தமானவர்களில் ஒருவருடனும் ஆவணங்களுடனும் குறித்த இடத்திற்குச் சென்றபோது 20 க்கும் அதிகமான படையினர் விகாரை கட்டும் பணிகளில் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்ததாக தெரிவித்தார். குறித்த தேரரை சந்திக்க முடியாது போனதாகவும் தெரியவருகின்றது.



## கஹவத்தையில் பதட்டம்

கஹாவத்தை கொட்டகெத்தன பிரதேசத்தில் தாயும் மகளும் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மூன்று பேர் நிரபராதிகள் என கடந்த 2805.2015 அன்று வியாழக்கிழமை தீர்ப்பளித்த கொழும்பு மேல் நீதிமன்றம் அம்மூவரையும் விடுதலை செய்யப்பட்டதையடுத்து அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கஹாவத்தை நகரில் கொட்டகெத்தன பிரதேசவாசிகள் உட்பட கஹாவத்தை பிரதேச பொது மக்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தினர்.

இதில் சுமார் 2,000க்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டிருந்தனர். தண்ணீர் தாரை பியோகம் செய்த வண்டியின் மீதும் ஆர்ப்பாட்டத்தை தடுக்க முற்பட்ட காவல்துறையினர் மீதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசி தாக்குதல் மேற்கொண்டனர். இதனால் இரண்டு கா.துறையினர் காயமடைந்த நிலையில் காஹவத்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். இன்று ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டதுடன் தடுப்பபுகளால் மறைக்கப்பட்டிருந்த காவத்தை நகர பிரதான வீதியும் திறக்கப்பட்டது. இதனையடுத்து இடைநிறுத்தப்பட்டிருந்த இரத்தினபுரி – எம்பிலிப்பிட்டிய போக்குவரத்துச் சேவை எட்டு மணித்தியாலங்களுக்கு பின்பு வழமைக்கு திரும்பியது. ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டாலும் காஹவத்தை நகரில் தொடர்ந்து பதற்றம் நிலவுவதுடன் காவல்துறையினர் மற்றும் விசேட அதிரடி படையினரும் இணைந்து பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

## 5 வயது சிறுமியை 60தால் பலாத்காரம்




5 வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்திய 60 வயதுடைய முதியவர் ஒருவர் கால்துறையினரால் 28.05.2015 அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

வழமை போன்று கடந்த வியாழக்கிழமை குறித்த வீட்டுக்கு சென்ற சிறுமியை, உரிமையாளரான 60 வயதுடைய முதியவர் ஒரு மாங்காயினை பறித்து அந்த சிறுமிக்கு கொடுத்து சிறுமியை பயமுறுத்தி வீட்டின் கதவுகளை மூடி விட்டு பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இதனையடுத்து குறித்த சிறுமிக்கு நூறு ரூபாய் பணத்தினை கொடுத்து யாரிடமும் சொல்ல வேண்டாமென கூறி சிறுமியை வீட்டுக்கு அனுப்பியுள்ளார்.

வீட்டுக்குச் சென்ற சிறுமி அழுது கொண்டு நடந்த விடயத்தினை தனது தாயிடம் கூற, தாய் அயலவர்களை அழைத்து விடயத்தைக் கூறியுள்ளார். அவரை தேடிச் சென்ற அயலவர்கள் அவரை மடக்கிப்பிடித்து காவல்துறையினரை சம்பவ இடத்திற்கு வரவழைத்து சந்தேக நபரான முதியவரை ஒப்படைத்துள்ளனர்.

## "வித்தியா கொலைக்கு மஹிந்தவே காரணம்"

"வடக்கில் சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்தி இன்று அது விஸ்வரூபமாகி புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல், பலாத்காரம் செய்யப்பட்டு கொலைசெய்யும் நிலை ஏற்படுவதற்கான பொறுப்பை மஹிந்த ராஜபக்ஷவே ஏற்றுக்கொள்ள வேண்டும்" எனக் குற்றஞ்சாட்டும் ஜனநாயக மக்கள் முன்னணியின் உப பொதுச்செயலாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான சண்.குகவரதன், "வடக்கின் வசந்தம்" என்ற பெயரில் ராஜபக்ஷ குடும்பம் திட்டமிட்டு தமிழ் கலாசாரத்தைச் சீரழித்துள்ளது அந்த பாவத்திற்கான சம்பளத்தை இறைவன் வழங்குவான் அது நிச்சயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## டொனி பிளேயர் பதவி இழக்க தயார்



மத்திய கிழக்கில் சமாதானத் தூதுவராகப் பணியாற்றி வரும் முன்னாள் இங்கிலாந்துப் பிரதமர் டொனி பிளேயர் தனது பதவியை இழக்கத் தயாராகி விட்டார்.

கடந்த எட்டு வருடங்களாக இப்பதவியை வகித்து வரும் டொனி தனது பதவி விலகும் விருப்பை கடிதம் மூலம் ஐ.நா வின் செயலாளருக்கு தெரியப் படுத்தியுள்ளார். மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த அவர் தொடர்ந்தும் தனிப்பட்ட முறையில் இயங்குவார் என்றே தெரிகின்றது.

## பழமைகளை அழிக்க மாட்டோம்

சிரியாவின் வரலாற்றுக் கால நகரங்களில் ஒன்றான பல்மேரா நகரிலுள்ள வரலாற்றுக்கால விடயங்களை நாம் அழிக்க மாட்டோம் என தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அங்கு காணப்படும் மதம் சார்பான சிலைகள் அழிக்கப்படும் என ஐ.எஸ் தெரிவித்துள்ளது. ரோமானியப் பேரரசின் வரலாற்றுக்கால அரங்கமொன்றில் கடந்த வாரமளவில் இருநூற்றுக்கும் மேற்பட்ட அரச தலைவர் பஷீர்-அல்-சதாத்தின் ஆதரவாளர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 39 இந்தியர்கள் ஐ.எஸ்.ஐ இடம்

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்திவரும் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான படை தாக்குதல் நடத்திவருகிறது. இரு நாடுகளிலும் கிளர்ச்சி ஏற்பட்ட போது இந்திய அரசு பெரும் நடவடிக்கை எடுத்து இந்தியர்களை மீட்டு வந்தது. இருப்பினும் இந்தியர்கள் சிலர் அங்கு சிக்கியிருப்பதாக கூறப்பட்டது. இந்தியாவில் இருக்கும் அவர்களது உறவினர்களும் இவ்விவகாரம் தொடர்பாக அரசிடம் கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 39 இந்தியர்களும் உயிருடன் உள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் தெரிவித்துள்ளார். இந்த 39 பேரும் கொல்லப்பட்டு விட்டதாக இவர்களுடன் பிடிபட்டு பின்னர் தப்பி வந்த ஒருவர் தெரிவித்திருந்த நிலையில், அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## குவிக்கப்படும் ரசியப் படைகள்

உக்ரேனிய எல்லை நோக்கி ரஸ்யப்படைகள் கனரக ஆயுதத்தளவாடங்கள் உட்பட பல பேரியக்க உபகரணங்களை நகர்த்தி வருவதாக செய்திகள் வெளிவருகின்றன.

## 40,000 கோரிக்கையாளர்களுக்கு அனுமதி



லிபியாவிலிருந்து இத்தாலிய கரையோரப்பகுதிகளுக்கு கடல் ஊடாக பயணிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்குமாறு ஐக்கிய நாடுகள் சபையாலும், மனித உரிமை அமைப்புகளாலும் கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாக ஐரோப்பிய ஒன்றியம் இவ்வருடம் ஏப்ரல் 15ஆம் திகதிக்கு பின் வந்தடைந்த புகலிடக்கோரிக்கையாளர்கள் 40,000 பேரை ஏற்குமாறு தனது உறுப்புரிமை நாடுகளை கேட்டுள்ளது. இதில் புகலிடக்கோரிக்கையாளர்களை ஏற்கும் நாடுகளுக்கு ஒருவருக்கு தலா 6,500 டொலர்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்படுள்ளது.

## ரோங்கியா முஸ்லீம்கள் புறக்கணிக்கப்பட்டனர்

மியான்மாரில் கடந்த 30 ஆண்டுகளில் முதன்முறையாக நடந்த சனத்தொகை மதிப்பீட்டில் சிறுபான்மை சமூகமான ரோகிங்கியா முஸ்லீம்களின் இனக்குழுவை சேர்க்காமைக்கு மனிதஉரிமை ஆர்வலர்கள் அமைப்புக்கள் மியான்மார் அரசாங்கத்தையும், ஐக்கிய நாடுகள் சபையையும் சாடியுள்ளன.

50 மில்லியன் டொலர்கள் செலவழிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட சனத்தொகை மதிப்பீட்டில் மியான்மாரில் உள்ள 135 இனக்குழுக்களில் இருந்து ரோகிங்கியா முஸ்லீம்களை விடுவித்ததன் மூலம் அவர்களுக்கு ஒருபோதும் குடியுரிமை வழங்கப்போவதில்லை என்ற சமிக்ஞையை மியான்மார் அரசாங்கம் கொடுத்துள்ளது.



## கோடை வெயில் 1826 பேர் பலி

இந்தியா முழுவதும் கோடை வெயிலுக்கு பலியானோர் எண்ணிக்கை 1826 ஐ தாண்டியுள்ளது. இதில் ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் மட்டும் 960 பேர் பலியாகி உள்ளனர்.

கோடை வெயில் நேற்றோடு முடிவடையும் நிலையில் கடந்த ஒரு வாரமாக உச்சகட்ட வெயில் வாட்டி வதைத்து விட்டது. இதில் கடந்த வியாழக்கிழமை ஒருநாளில் மட்டும் 60 பேர் உயிரிழந்துள்ளனர். ஆந்திரா, தெலுங்கானா பகுதிகளில் பலி எண்ணிக்கை அதிகளவு காணப்படுவதால் காலை 11.30 மணி முதல் மாலை 4 மணி வரை வேலை செய்ய வேண்டாம் என தொழிலாளர்களை மாநில அரசுகள் கேட்டுக்கொண்டுள்ளன.

## விமான என்ஜின்கள் தொடர்பான விசாரணை

சராசரியாக 39000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த விமானத்தின் இயந்திரங்கள் இரண்டும் இயங்க மறுத்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் ஆரம்பித்துள்ளது. கடந்த 23ம் திகதி சிங்கப்பூரிலிருந்து சுங்காய் நோக்கி பறந்த விமானத்தில் இரண்டு இயந்திரங்களும் இயங்க மறுத்ததையடுத்து விமானம் 13000 அடிகளுக்கு பதிந்தது. இரண்டு இயந்திரங்களும் தற்காலிகமாக இயங்கி வலுவைப்பெற மறுத்ததை-யடுத்து இந்நிலை உருவாகியிருந்தது, எனினும் மீண்டும் பின் அந்த இயந்திரங்கள் இயங்கத்தொடங்கியதை அடுத்து விமானம் சுங்காய் நகரை நோக்கி சென்றமை குறிப்பிடத்தக்கது.

## சீனத்தீவு தொடர்பாக அமெரிக்கா காட்டம்

தென்சீனக்கடலில் உருவாகிவரும் சீன செயற்கை தீவு தொடர்பாக காட்டமான நடவடிக்கைகளை எடுக்க அமெரிக்கா முயல்வதாகத் தெரிவிக்கிறது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான ஆசியான் அமைப்பின் ஊடாக செயற்கைத் தீவினை எதிர்பதற்கான ஒன்றுபட்ட செயற்பாட்டை அமெரிக்கா எதிர்பதாக தெரிவிக்கின்றது.

கடந்த வாரம் அமெரிக்க உளவு விமானம் ஒன்று தென்சீன சர்வதேச கடற்பரப்பில் பறந்து செயற்கைத் தீவு நிர்மாணிப்பதை படமெடுத்த போது சீன விமானப்படையால் எச்சரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கற்பழிப்புக்கு மரண தண்டனையே தீர்வு



சீனாவின் ஹானசு மாகாணத்தில் தொடக்கப்பள்ளி ஆசிரியராக பணியாற்றி வந்தவர் லிஜிஷுன். இவர் மீது 26 சிறுமிகளிடம் பாலியல் வன்முறை மற்றும் கற்பழிப்பு போன்றவற்றில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. 4 வயது முதல் 11 வயது உடைய சிறுமிகளிடம் தவறாக நடந்து கொண்டு உள்ளார். வகுப்பறையில் வைத்தே தனது கற்பழிப்பு சம்பவங்களை நிகழ்த்தி உள்ளார்.

கடந்த 2011 முதல் 2012ம் ஆண்டுகளில் இந்த மோசமான சம்பவங்களை அரங்கேற்றியுள்ளார். இதுதொடர்பாக நடைபெற்று வந்த வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அது கடந்த வியாழன் அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

## உயிருடன் ஆந்த்ராக்ஸ் கிருமிகள் அமெரிக்காவால் அனுப்பி வைப்பு

அமெரிக்க ராணுவத்தின் தலைமையகமான பென்டகனிலிருந்து டெக்சாஸ், விஸ்கான்சின், நியூ ஜெர்ஸி, டென்னசிஸி, நியூயோர்க், கலிபோர்னியா உட்பட 9 மாகாணங்களுக்கு உயிருடன் உள்ள ஆந்த்ராக்ஸ் நோய் கிருமிகள் தவறுதலாக அனுப்பியதாக தெரியவந்திருப்பதை பென்டகன் பாதுகாப்பு அமைச்சகமும் ஒப்புக்கொண்டது.

அமெரிக்க இராணுவம், உயிருடன் இருக்கும் ஆந்த்ராக்ஸ் கிருமிகளை பல்வேறு ஆய்வு மையங்களுக்கும், தென் கொரியாவில் உள்ள இராணுவ தளத்துக்கும் தவறுதலாக அனுப்பிவிட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத அளவுக்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறதாக பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஸ்டீவ் வாரன் தெரிவித்துள்ளார். இதனால் தென் கொரியாவில் உள்ள 22 அமெரிக்க ராணுவ அதிகாரிகளுக்கும் நோய் தொற்று ஏற்படாமல் இருப்பதற்கான சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

## மீள விசாரணை

ஜெனீவாவில், இலங்கைக்கு எதிராக பிரேரணையை முன்வைத்துள்ள அமெரிக்கா, எதிர்வரும் 18 ஆம் திகதியன்று அவை ஆதரவு அமர்வு ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது. இதேபோன்று ஒரு ஆதரவு தேடும் அமர்வை, ஐ.நா மனித உரிமை பேரவையில் கடந்த 7 ஆம் திகதியன்றும் அமெரிக்கா நடத்தியது.

அந்த அமர்வில், இலங்கை பிரச்சினையில் அக்கறை கொண்ட 30 நாடுகள் பங்கேற்றன. அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை வரைபின்படி மனித உரிமைகள் மீறல் தொடர்பில் சர்வதேச விசாரணை கோரப்பட்டுள்ளது. அத்துடன் வெலிவேரியா துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பிலும் சமய நிறுவனங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்பிலும் பக்கசார்பற்ற விசாரணை கோரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# விணையடி நீ எனக்கு.. 17



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

– தேவி காதல்
எந்த கடவுளர்களும்
தந்த இருள் அல்ல
இது
மனிதர்கள்
மனிதர்களுக்கு
கொடுத்த வரம்–

– பிரபஞ்ச பிரியன்–

ஒருசில வாத்தியக் கருவிகளின் துணையுடனேயே அவ் இசைநிகழ்வு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. முழுக்க முழுக்க அதில் பல்கலைக்கழக மாணவர்களே பங்கேற்றிருந்தனர்.

ரதன் மைக்கை வாங்கி தனது குரலை செருமிக் கொண்டு பாடத் தொடங்கினான்.

“வான் நிலா நிலா அல்ல
உன் வாலிபம் நிலா
தேன் நிலா எனும் நிலா
என் தேவியின் நிலா
நீ இல்லாத நாளெல்லாம் நான் தேய்ந்த வெண்ணிலா
வான் நிலா நிலா அல்ல
உன் வாலிபம் நிலா...
மான் இல்லாத ஊரிலே
சாயல் கண்ணிலா -
பூவில்லாத மண்ணிலே
ஜாடை வெண்ணிலா
தெய்வம் கள்ளிலா
ஒரு தோகையின் சொல்லிலா
பொன்னிலா பொட்டிலா
புன்னகை மொட்டிலா...
அவள் காட்டும் அன்பிலா
இன்பம் கட்டிலா
அவள் தேககட்டிலா
தீதிலா, காதலா
ஊடலா, கூடலா
அவள் மீட்டும் பண்ணிலா
வாழ்க்கை வழியிலா
ஒரு மங்கையின் ஒழியிலா
ஊரிலா நாட்டிலா
ஆனந்தம் வீட்டிலா
அவள் நெஞ்சின் ஏட்டிலா
சொந்தம் இருளிலா
ஒரு பூவையின் அருளிலா
எண்ணிலா ஆசைகள் என்னிலா கொண்டதேன்
அதைச் சொல்வாய் வெண்ணிலா...”

ரதனின் பாடலைத் தொடர்ந்து கைதட்டல் ஓய வெகுநேரமாகியது. தொடர்ந்து இன்னும் சில மாணவர்களும் மாணவிகளும் பாடல்கள் பாடுவதற்கு அழைக்கப்பட்டனர். பாடல் நிகழ்ச்சியைத் தொடர்ந்து சீனியர்ஸ் மாணவர்கள் இருவர் தொகுத்து வழங்கும் 'இசையும் கதையும்' என்ற நிகழ்வு இடம்பெற்றது.

அந்த இசையும் கதையும் நிகழ்வில் இருவர் கதையை வாசிக்க மூன்று பேர் அதற்கேற்ற பாடலைப் பாடுவதற்கு தயாராக இருந்தனர்.

அந்த இசையும் கதையும் நிகழ்வில் ரதன் நிவேதாவின், கதையே சிறுகதையாக சொல்லப்பட்டது.

ரதனும் நிவேதாவும் ரயிலில் சந்தித்துக் கொண்டது இருவரும் ஒன்றாக மட்டக்களப்பிற்கு வந்தது ரதன் கவிதைகள் எழுதுவதும் நிவேதா அவனது ரசிகையாக இருப்பது... என அவர்களை சுற்றியே அக்கதை பின்னப்பட்டிருந்தது. இடையிடையே பொருத்தமான சில சினிமாப் பாட்டுகளுடன் இசையும் கதையும் நன்றாகவே இருந்தது.

கதை ஆரம்பித்தவுடன் அது தம்மைப் பற்றியே சொல்கிறது என்பது ரதனுக்கும் நிவேதாவுக்கும் புரிந்துவிட்டது. நிவேதா ரதனைப் பார்த்து சிரித்துவிட்டு தலையைக் குனிந்து விட்டாள்.

பவித்திராவும் சுகந்தியும் நிவேதாவுக்குப் பக்கத்திலிருந்ததால் அவளை சீண்டிக் கொண்டே இருந்தனர்.

பல புதிய சினிமாப் பாடல்களுடன் தொடர்ந்த அந்த இசையும் கதையும் பல்கலைக்கழக காதலை மட்டும் சொல்லிவிட்டு முடிக்க முடியாமல்... 'இறுதியாக இருவரும் இணைந்தனர்' என்ற வகையில் மொட்டையாகவே முடிந்தது.

அந்தக் கதையிலிருந்து அதில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் 'யார்...யார்' என்பதைப் புரிந்து கொண்ட விரிவுரையாளர்களும் ரதனைப் பார்த்து சிரித்துக் கொண்டனர்.

இசையும் கதையும் முடிந்ததைத் தொடர்ந்து கலாநிதி குருமூர்த்தி எழுந்து “இசையும் கதையும் முற்றுப் பெறவில்லை அது தொடரும்” எனக் கூற அங்கு சிரிப்பொலி களைகட்டியது. அனைவரும் கைதட்டி சிரித்துக் கொண்டனர். சில மாணவர்கள் எழுந்து வந்து ரதனுக்கு கரத்தை நீட்டி 'விஸ்' பண்ணினர்.

இசையும் கதையும் நிகழ்வை அடுத்து கவிதைவாசிப்பு இடம்பெறவுள்ளதாக அறிவித்ததை தொடர்ந்து ஒரு ஜுனியர்ஸ் மாணவன் அழைக்கப்பட்டான். அவன் தனது கவிதையில் தாம் வளாகத்திற்கு வந்தது முதல் தமக்கு நடைபெற்ற ராக்கிங் அவலங்களையும் விபரித்து நகைச்சுவை ததும்ப ஒரு அழகிய கவிதையாக்கியிருந்தான். அவனைத் தொடர்ந்து ஒருசில ஜுனியர், சீனியர் மாணவர்களும் கவிதை பாடினர். இறுதியாக நிவேதாவும் கவிதை பாட அழைக்கப்பட்டாள். சபைக்குத் தன் வணக்கங்களைத் தெரிவித்துவிட்டு தனது கவிதையை வாசிக்கத் தொடங்கினாள் நிவேதா. ஏற்கனவே இனிமையான குரலைக் கொண்ட அவளது குரல் ஒலிவாங்கி மூலம் வெளியே வருகையில் மேலும் இனிமையாக இருந்தது.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

'கவியரங்கத் தொட்டிலுக்கு
கன்னி நான் கைக்குழந்தை
கையிலொரு கவியெடுத்து
பாட வந்தேன் புதுக் கவிதை'

என ஆரம்பித்த நிவேதா தனது கவிதையைத் தொடர்ந்தாள். அவளது கவிதை வளாக வாழ்க்கைக்கு வெளியே சென்று இன்றைய இளைஞர் சமுதாயம் பற்றி பேசியது.

'இளைஞர்களே
உங்கள் நைலான் கனவுகளை
சுட்டெரித்து விட்டு
நடைமுறை
வாழ்க்கையோடு கைகுலுக்க
வாருங்கள்
இன்றைய இளைஞர்கள்
நாளைய தலைவர்கள்
என்ற
வார்த்தைகளை
தூர வீசுவோம்
இன்றைய இளைஞர்கள் நாம்
இன்றே தலைவர்களாவோம்
காதல் பற்றிய
நினைவுகளை மட்டும்
கனவுகளாக்கும்
இளையோரே...
தேசம் பற்றி
சிந்திக்க வாருங்கள்
விழிகளுக்குள் பாய்ந்து
இதயம் நுழையும்
நேசம் பற்றி
கதைகதையாய்
கதைத்தது போதும்
இனிமேலாவது
வாழ்க்கை பற்றி பேசுவோம்
எம் எதிர்கால
வாழ்வுக்காய்
இன்று
சிந்தப்படும்
கண்ணீர் துளிகள் பற்றி
கருத்தரங்கு நடத்துவோம்.
வெறுமனே
பாடபுத்தகங்களும்
விரிவுரை வகுப்புகளும் மட்டும்
எம் அறிவை
புடம் போடாமல்
நிஜ உலகில்
யதார்த்தம் பார்ப்போம்
நாளை
நாம்
சுயமாய் சிந்திக்க
எம் தேடலை
விசாலப்படுத்துவோம்...



இப்படியாக கவிதை தொடர்ந்தது. சில இடங்களில் வெறும் கோஷங்களாக இருந்தாலும் இளைஞர் சமுதாயம் நோக்கிய அந்த கந்தக வரிக் கவிதை அனைவரையும் ஈர்த்தது.

வெறுமனே... ஒரு களியாட்ட நிகழ்வாக இருந்த அந்த சோஷல் பங்ஷன் நிகழ்வில் ஒரு சீரியஸ்தனத்தை அக்கவிதை கொடுத்தது.

நிவேதா கவிதையை வாசித்து முடித்த பிறகும் சில நிமிட நேரங்களுக்கு அதன் தாக்கம் மறையவில்லை. மீண்டும் அந்த நிகழ்வு [illegible] நேரங்கள் சென்றன. நிவேதாவின் கவிதை வாசிப்பு முடியவும் நேரம் சரியாக 12 மணியை காட்டவும் சரியாக இருந்தது.

தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டு மதிய போஷனம் வழங்கலுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றன. அதே நேரத்தில் தனிப்பட்ட கவனிப்பு என விரும்புகிற-வர்களுக்கு மதுபான வகைகளும் வழங்கப்பட்டன.

ஒரு சில ஜுனியர் மாணவர்களும் விரிவுரையாளர்களும் சேர்ந்து பாட்டியில் கலந்து கொண்டனர். அங்கு விரிவுரையாளர்கள் மாணவர்கள் என்ற பேதம் இருக்கவில்லை. பொதுவாகவே இப்படியான நிகழ்வுகளில் இவை சகஜமாக இருக்கும்.

அந்த இடைவேளை நிகழ்வுகளில் பல ஜுனியர் மாணவிகள் தமக்கு மிகவும் பிடித்த சீனியர் மாணவர்களுடனும் மாணவிகளுடனும் விரிவுரையாளர்களுடனும் இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

நிவேதாவிடம் சொந்தமாகவே ஒரு கமரா இருந்ததால் அவள் தயாராகவே கொண்டு வந்திருந்தாள். நிவேதாவின் கமராவில் ரதனும் நிவேதாவும் பல புகைப்படங்களை எடுத்துக் கொண்டார்கள். அப்படியே தமக்குப் பிடித்த விரிவுரையாளர்களுடனும் சீனியர் மாணவர்களுடனும் மாணவிகளுடனும் இணைந்து புகைப்படம் எடுத்தனர்.

குறிப்பாக கலாநிதி குருமூர்த்தியுடன் புகைப்படம் எடுக்க முயலும்போது அவர் சிரித்துக் கொண்டே “ஆ... இவ்வருட வெற்றி ஜோடிகளுடன் படம் பிடித்துக் கொள்வது மகிழ்ச்சிதான்”. என்றார். தொடர்ந்து ரதன் நிவேதா பவித்திரா சுகந்தி என குழு போட்டோவும் தனி போட்டோவும் என பல பேருடன் போட்டோக்களை எடுத்துக் கொண்டனர்

மதிய உணவை முடித்துக் கொண்டு மீண்டும் நிகழ்ச்சிகளை ஆரம்பிக்க பி.ப.1.30 தாண்டிவிட்டது. மாலை 3.00 மணியுடன் நிகழ்ச்சிகளை முடிக்க வேண்டும் என்ற அவசரம் அனைவர் முகங்களிலும் இருந்தது. அதற்கொரு பிரதான காரணமும் இருந்தது.

அன்றய தினம் சோஷல் பங்ஷன் முடிய 'பக்கட்டிங்' நிகழ்வு நடைபெற இருந்தது. இவ்வளவு நாளும் தமக்கு ராக்கிங் செய்த சீனியர் மாணவர்களுக்கு பதிலடியாக பக்கட்டிங் நிகழ்வில் அவர்கள் மீது கலர் கலராக தண்ணீரை ஊற்றும் நிகழ்வு அது. ஆனால் அதற்கு எந்தவொரு சீனியர் மாணவர்களும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. அதனை ஆமோதித்து ஏற்றுக் கொள்ளவே வேண்டும். இது ஒரு சம்பிரதாய நடைமுறையாகவே இருந்தது.

ஆனால் வெறுமனே சாயம் கலந்த தண்ணீர் என்றில்லாமல் முதல் நாளே ஜுனியர் மாணவர்கள் சேற்று அழுக்கு தண்ணீரையும் சாணம் கலந்த தண்ணீரையும் சிறு சிறு பொலித்தீன் பெக்கட்டுகளில் அடைத்து வைத்து விடுவர். அதில் சேறும் சகதியும் கலந்த அழுக்கு நீரும் இருக்கும். ஒரு பெக்கட்டை எடுத்து ஒருவர் மீது எறிந்தால் அவர் மீது சிந்தும் அந்த அழுக்குத் தண்ணீரின் மணத்தில் கிட்டவே போக முடியாது. சில ஜுனியர் மாணவர்கள் தமது பங்குக்கு அழுகிய பழுதடைந்த முட்டைகளையும் சேகரித்து வைத்திருந்தனர்.

மதியபோசன இடைவேளைக்குப் பின்னர் நிகழ்வு அவ்வளவாக களைகட்டவில்லை. அனைவரும் பக்கட்டிங் தாக்கத்தில் இருந்ததால் எப்போது பங்ஷன் முடியும் என்ற ஆர்வம் காணப்பட்டது. மணி மூன்றை நெருங்கவும் சில விளையாட்டுக்களுடன் மட்டும் நிகழ்வு முடிவடைந்தது.

பக்கட்டிங் நிகழ்வின்போது கலந்து கொள்ளவென சீனியர் ஜுனியர் மாணவிகள் என அனைவரும் தமது ஹொஸ்டலை நோக்கி விரைய ஜுனியர் மாணவர்கள் தாம் ஏற்கனவே ரெடியாக வைத்திருந்த தண்ணீர் பக்கெட்டுகளை எடுத்து சீனியர் மாணவர்கள் மீது வீசத் தொடங்கினர். இதனை எதிர்பார்த்தோ என்னவோ சீனியர் மாணவர்களும் மதிய உணவின்போதே ஹொஸ்டலுக்கு சென்று தமது ஆடைகளை மாற்றிவிட்டு சாதாரண உடையில் வந்திருந்தனர்.

லேடீஸ் ஹொஸ்டலுக்கு சென்ற சீனியர் ஜுனியர் மாணவிகளும் வெளியே வந்து பக்கட்டிங் நிகழ்வில் கலந்து கொள்ள...

சீனியர் மாணவ மாணவிகளை விரட்டி விரட்டி ஜுனியர் மாணவர்கள் பக்கட்டிங் செய்ய அந்த இடம் கலகலப்பாக இருந்தது. சில சீனியர் மாணவர்கள் மீது வீசப்பட்ட கழிவு நீரும் அழுகிய முட்டைகளுமாக சேர்ந்து ஒருவித துர்நாற்றத்தை அப்பகுதியில் ஏற்படுத்தியது.

ரதனும் நிவேதாவும் ஆளுக்கு இரண்டு தண்ணீர் பக்கட்டுகளை எடுத்துக் கொண்டு தமக்கு ராக்கிங் செய்த மாணவ மாணவிகளை நோக்கி வீசப்புறப்பட்டனர்.

**மேவும்.. .. ..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## மனிதம்

பல நாட்களாய்க்
காண்கின்றேன் நான்
அவனை..
திருமலையின் தெருவழியில்

இன்றோர் நாள்
நிறுத்தாமற் சென்ற
பேருந்தின்
நிறுத்தமொன்றில்
குதித்திறங்கிய போது

விழியிரண்டில்
பொருத்தியிருந்தான்
தேடலை - இரு
விரலிடுக்கில் பொருத்திக்
கொண்ட
சிகரட்டைப் போல்

மறு நாளின்
மாலைப்பொழுதில்
கடலலைகள் கால் தொட
கனவுகளை
வாங்கிக்கொண்டு..

மறுநாளும்..
மறுநாளும்..
திருமலையின் தெருவழியில்
நானும்.. அவனும்

எனினும்
அன்று கண்ட அவனை
நான் என்றுமே
காணவில்லை

விழியிரண்டும் தொலைத்தது
தேடலை
இரு விரலிடுக்கில் புகைந்தது
துண்டு பீடி

தமிழன் தானே
சோகத்தை விழுங்கவோ
துப்பவோ துணிவின்றி

மென்று கொண்டே - அவன்

காத்திருத்தலின் விளைவாய்
கண்களின் இருப்பிடம்
குழியாய்..

அழுக்கடைந்து
ஆறஇடமின்றிக்
களைப்படைந்து
கடல் காற்றினை அருந்தி
மெலிவடைந்து
உடைந்து..
உடைந்து..
அதோ.. அதோ..
அவனேதான்

துறைமுக வாசலின்
போதி மரத்தின் கீழ்
கப்பலுக்காய்க்
காத்திருக்கின்றான்
அவன்

காற்றழைத்த காகிதமாய்
கூட்டியொதுக்கிய
குப்பையாய்..

-- மாயன் --

வடக்கிற்கும் கிழக்கிற்குமான பயணம் கப்பல் மூலம் தடைபெற்ற காலத்தில் திருகோணமலையில் நிறைய பயணிகள் கப்பலுக்காகக் காத்துக் கிடப்பதை நினைவுபடுத்திய கவிதை

## முயலுமின்

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு)

உண்ணுமின்பம் உடுக்குமின்பம்
உலவுமின்பம் மட்டுமோ?
பெண்ணின்பம் பேச்சின்பம்
பிள்ளையின்பம் யாவினும்..?

பண்ணமைந்த தமிழினின்பம்
பாட்டினிபம் பெரிதலோ?
மண்ணிலுள்ள இன்பமெல்லாம்
மடியில் கட்டி கொணரினும்..?

பழமையான தமிழைத்தேடிப்
பயிலுமின்பம் போன்றிரா!
இளமை குன்றிடாமலின்றும்
என்னுமின்பம் ஊட்டுமே!

சலிப்பிலாத தமிழின்பம்
தன்னைத்துய்க்கப் பாருமின்!
வலிமையுள்ள தமிழை நாளும்
வாழ வைக்க முயலுமின்!



## வெளியேறல்

வெளியில் நச்சு வாயு
பூச்சியினம் ஈசல்கள் போல

பயிர் பச்சைகளெல்லாம்
கறுப்பு கறுப்பாய் தெரிந்தது..
படர்ந்திருந்த சிலந்தி வலைகளில்
மானிட முண்டங்கள் கறுண்டு

நிலமெல்லாம் ஊர்வன
மிதிக்கவும் முடியாமல்
விஷயந்துக்களின் ஆட்சி
துர் நாற்றமும் மூக்கில்

வெளியே வர முடியாமல்
முடங்கி கிடக்க முடியாமலும்

திருமலை சுந்தா

## தலை போக நேர்ந்தாலும் நிலை போகக் கூடாது

பழிவாங்கும் அரசியல்
தொடர்வது கூடாது
பகை கொள்ளும்
உணர்வுகள் வளர்வது கூடாது

துளிகூட அரசியல் தூய வாழ்க்கையில்
ஊழல்கள் கூடாது
அழிவை ஏற்படுத்தும் அரசியல்
ஆகாது

நல்லாட்சி நுகர்விற்கு எவரேனும்
தடைசெய்யக்கூடாது
பொல்லாப்பு புரிந்தோரை
நல்லாட்சி தர்பாரில் ஒரு போதும்
சேர்க்கக்கூடாது

சலுகைக்கு ஒரு போதும்
விலைபோகக் கூடாது
அலைபாயும் மனதுக்கு
ஆளாகக் கூடாது
தலை போக நேர்ந்தாலும்
தமிழர் பண்பாடு தன்மானத்தை
இழக்ககூடாது,

கவிக்குயிலன்
சேனையூரான்

## தந்தவை ...

இருந்தாள் இதயத்தில் இருந்தாள்
இன்னொருன் இடத்திலும் இருந்தாள்
இதனால் இவனை இழந்தாள்
இம்சை தரும் நினைவுகள் மட்டும்
இழக்கவில்லை இரகள்
இறந்த உறவோடு ஏன் இறக்கவில்லை
இலவசமாய் அவள் தந்த
வலிகள் . . .

சீ.வீ.லக்ஸ்

# ஆலங்கேணி என்னும் அழகிய கிராமம்

அந்தத் தொழில் அபாயம் நிறைந்த கஷ்டமான தொழிலாயினும் அவர்கள் தயங்கவில்லை. தொடர்ந்து செய்து தங்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டனர்.

தெற்கே 'கொய்யாம்புளி' என்ற கடலாற்றைத் தோணியில் கடந்து 'கண்டக்காடு' என்ற மாரி வயல் வெளிகளையும் கடந்து 'சாந்தப்பணிக்கன்' என்னும் கானக நுழை வாயிலூடாக வானைத்தொட்டு நிற்கும் மராமரங்கள் அடர்ந்த காட்டில் எட்டு மைல் தூரம் நடந்து மகாவலிகங்கைக் கருகில் 'வாளைமடு' 'வண்ணாத்திபாலம்' போன்ற காட்டுப்பிரதேசங்களைக் கடந்து கங்கையோரம் உள்ள 'பொன்னாங்கேணிப் பிரதேசத்தில் எருமை பசு மந்தைகளை வைத்துப் பாதுகாக்கும் வருவாய் மிக்க தொழிலை உருவாக்கிக் கொண்டனர்.

புத்திசாலிகளான இவர்கள் திருகோணமலைக்கு கொண்டுபோய் பால் விநியோகம் செய்யும் வியாபாரத்தை தொடங்கியதும் இத்தொழில் பெரும் இலாபகரமாக மாறியது. 'காவ' தடிகளில் பாற்குடங்-களை வைத்துச் சுமந்து நடந்து கிண்ணியாவுக்கூடாக 'நீரோட்டுமுனை' என்னும் கடலாற்றைக் கடந்து 'வெள்ளைமணல்' சீனன்வாடிக்கூடாக திருகோணமலை நகருக்குச் சென்று அங்குள்ள கடைகளுக்கு பால் தயிர் நெய் போன்ற பொருட்களை விற்றுவந்தனர்.

இந்தக் கடினதொழில் தினமும் தவறாமல் நடந்தது. இன்று வாகனங்கள் மூலமாக இலாபகரமாக நடக்கும் பால் வியாபாரத்தை திருகோணமலை மாவட்டத்திற்கு அறிமுகப்படுத்தியவர்கள் ஆலங்கேணி மக்களேயாவர். இந்தக் கடினதொழில் மூலம் ஆலங்கேணியில் வாழும் சிலர் மாட்டு மந்தைகளின் சொந்தக்காரர்களாகவும் செல்வந்தர்களாகவும் விளங்கி வந்தனர். காலப் போக்கில் கங்கையோரக் காடுகளை அழித்து நெல் வயல்களாகவும் கத்தரி மிளகாய் பயிரிடும் காணிகளாகவும் பயன்படுத்தினர். இயந்திரங்களால் நீர் இறைத்து தோட்டப்பயிர்களும் நெல்லும் அமோகமாக விளையச் செய்தனர்.




ஆலங்கேணியில் பாடசாலைகள் குறைவாக இருந்த போதிலும் இம்மக்கள் கற்றலிலும் அரிய சாதனைகளைப் புரிந்துள்ளனர். அரச திணைக்களங்களில் இம்மக்களில் கணிசமான தொகையினர் பொறுப்பான பதவிகளை வகித்து வருகின்றனர். கலை கலாச்சார நிகழ்ச்சிகளிலும் ஈடுபாடு உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். புகழ் பெற்ற காவியமாகிய இராமாயணத்தை 'இராமநாடகம்' என்ற பெயரில் பழக்கி நாட்டுக் கூத்தாக மேடையேற்றியுள்ளனர். 'அல்லி அர்ச்சுனா' போன்ற நாடகங்களும் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன,

குமாரவேல் போன்ற பிரசித்த ஆயுள்வேத வைத்தியர்களும் சோதிட சாஸ்திர வல்லுனர்களும் தேர்ந்த அண்ணாவிமார்களும், கவிஞர்களும் ஆலங்கேணியில் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. தாமரைத்தீவான், கேணிப்பித்தன், கௌரிதாசன், தங்கராசா, தவராசா, யோகேஸ்வரன், சுந்தரம் போன்றோர் இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

ஆலையூரான்' என்ற புனைப்பெயரில் எழுதிய அமரர் திரு.க.தங்கராசா அவர்கள் திருகோணமலை வலயக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றியவர். நாடறிந்த நல்ல எழுத்தாளர்.

தொடரும்..

தம்பலகாமம் க.வேலாயுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்வுகள் ஏதுமற்ற ஈழத்தமிழ் சமூகம்




எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் முடிவுகள் இரண்டு விதமாய் அமையக்கூடும்.

1. மகிந்த அணி வெற்றி பெற்று மகிந்த அவர்கள் பிரதமராவது.
2. ஐ.தே.க வெற்றி பெற்று உதிரி கட்சிகளின் உதவியுடன் ரணில் அவர்கள் பிரதமராவது.

மகிந்த அவர்களின் வெற்றியின் மூலம் ஈழத்தமிழரின் அபிலாசைகளை சர்வதேசத்தின் உதவியுடன் அல்லது மறுவிதமாக கூறின் அமெரிக்க அணியின் உதவியுடன் வெற்றி கொள்ள முடியும் என்பது மாற்று சிந்தனையாளர் அல்லது த.தே.கூ தவிர்ந்த தேர்வாளர்களின் முடிவாக உள்ளது. இது எந்தளவில் சாத்தியம் என ஆராய்வோமாயின் இன்று சர்வதேசத்தில் அமெரிக்காவின் எதிர்க்கடை ஒன்று பலம் பெற்று வருதலை நாம் காண்கிறோம். ஒரு புறத்தில் சீனாவின் அசுர எழுச்சி மறு புறத்தில் ரசியாவின் மீள் எழுகை. அண்மையில் ரசியாவானது ஆப்பகானுடன் தனது எல்லையை பகிர்ந்து கொண்டுள்ள மூன்று மத்திய ஆசிய நாடுகளுடன் சேர்ந்து அவற்றின் எல்லைகளில் (கசகஸ்தான், தஜிகிஸ்தான், துருகிஸ்தான்) தலிபான்கள் மற்றும் I.S.A அமைப்பின் ஊடுருவல்களுக்கு எதிராக நடாத்திய ஒத்திகை என்பது ரசியாவின் இராணுவ வல்லமையின் மீள் எழுகையினை எமக்கு பறைசாற்றி சென்றது. சோவியத் உடைவின் பின்னர் ரசியா தனக்கு ஆதரவான ஒரு அணியை உருவாக்குவதில் முனைவதனை நாம் காண்கிறோம். மறு புறத்தில் ஈரான் அணு ஆயுத பூசலில் தற்போது அமெரிக்காவுடன் நெருங்குவது போல தென்படினும் அது ரசிய-சீன-ஈரான் முக்கூட்டில் ஒரு முக்கிய உறுப்பினராய் உள்ளது. ஆக சர்வதேசத்தில் அமெரிக்க-ஐரோப்பிய கூட்டுக்கு எதிரான ஒரு கூட்டணி தயார்.

இது அடுத்த தேர்தலில் வெற்றி பெறப்போகும் மகிந்தவின் அணிக்கு மிக சாதகமானதே. ஐ.நா சபையின் தீர்மானங்களுக்கு எதிராய் இந்த கூட்டணி மகிந்தவுக்கு



கை கொடுக்க முனையும். இது ஈழத்தமிழரின் நலன்களுக்கு பாதகமாய் அமைவதுடன் இந்திய-அமெரிக்க அணியை இலங்கையிலிருந்து ஓரங்கட்ட முனையலாம். இலங்கையின் அண்மைக்கால அரசியல் செயல்நெறிகள் மகிந்தவின் வெற்றியை உறுதிப்படுத்துவது போன்றே தோன்றுகின்றன. ஏனெனில் மகிந்த அணிக்கெதிரான ஊழல் குற்றசாட்டுகளை சிங்கள சமூகம் பொருட்படுத்தவில்லை என்பதையே அந்த அணியின் கூட்டங்களுக்கு வருகை தரும் பொது மக்களின் எண்ணிக்கை சுட்டிக்காட்டுகிறது. ஆளுமையற்ற தற்போதைய அரசினை வீட்டுக்கு அனுப்பி மகிந்த என்ற தங்களின் தலைவனை ஆட்சிக்கு கொண்டு வருவதில் பெரும்பான்மை சமூகம் முனைவதனை நாம் காணலாம்.

மறு புறத்தில் அடுத்த தேர்தலில் அறிமுகப்படுத்தப்படவுள்ள தொகுதி வாரியான தேர்தல் முறையானது மகிந்த அணிக்கு மிக சாதகமானதே. கடந்த சனாதிபதி தேர்தலில் சிங்கள-பௌத்த மக்கள் பெரும்பான்மையினராய் வாழும் அநேக தொகுதிகளை மகிந்த ராஜபக்ச அவர்களே வெற்றி கொண்டார். மகிந்த அணியினர் தொகுதி முறை தேர்தலுக்கு வரிந்து கட்டி கொண்டு நிற்பதற்கான காரணங்கள் தங்களுக்கு சாதகமான முறையில் பாராளுமன்றை அமைப்பதுவும் சிறுபான்மையினரின் நலன்களை நசுக்குவதுமேயாகும். ஆக கொண்டு வரப்படவுள்ள இருபதாம் திருத்த சட்டத்தின் சாரம் என்பது நாடு சனாதிபதி சர்வாதிகாரத்திலிருந்து நாடாளுமன்ற சர்வாதிகாரத்துக்கு மாறப்போகிறது என்பதே. தற்போதைய நிலையின் பிரகாரம் தொகுதி வாரி தேர்தல் நடைபெறின் தொங்கு நாடாளுமன்றத்துக்கான வாய்ப்பில்லை. ஏனெனில் சிங்கள மக்கள் பெரும்பான்மை உள்ள தொகுதிகளில் ஐ.தே.க வுக்கு சார்பான தொகுதிகள் குறைவே. கொழும்பு மற்றும் மலையக பகுதிகள் தவிர்ந்தவற்றில் ஐ.தே.க மண் கௌவுவதற்கான சாத்தியங்கள் மிக அதிகம். ஆகவே ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றி கணக்கெடுக்காத சிங்கள கிராமங்கள் மத்தியில் மகிந்தவுக்கான வாய்ப்புக்கள் மிக அதிகம். நகர்ப்புறங்களில் வேண்டுமானால் அவருக்கான வாக்களிப்பு விகிதத்தில் சற்று சரிவு ஏற்படலாம். எனவே அவர்து அடுத்த பிரதமர் கனவென்பது பெரும்பாலும் சாத்தியமாக கூடியதே.

தமிழர் தரப்பை பொறுத்தவரை அவர்களின் ஆசனங்கள் மூலம் பாராளுமன்றில் எதையும் பெரிதாக சாதிக்க முடியாது. சுமார் பதினைந்து முதல் இருபது ஆசனங்களை வைத்து கொண்டு எதுவும் சாதிக்க முடியாது. இந்தியா அமெரிக்கா கூட்டணியை பொறுத்தவரை இங்கு எதையும் சாதிக்க முடியாமல் போகலாம். இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையத்தில் சீனாவுக்கான வாய்ப்புக்கள் அதிகமாகலாம். மத்திய கிழக்கு நாடுகளில் இடம்பெற்றது போல வசந்தகால புரட்சிகளை இங்கு உருவாக்க முடியாது. மகிந்த ஒன்றும் கடாபியோ அல்லது சதாமோ அல்ல. அவர் இலங்கையின் பெரும்பான்மை மக்களின் அபிமானம் பெற்ற ஒரு மக்கள் தலைவர். மஹிந்த மீண்டும் பிரதமராயின் இலங்கையை கையாள்வதென்பது அமெரிக்காவுக்கு ஒரு தலையிடியாய் அமையும். அவரின் தரப்பு இப்போதே அமேரிக்கா சார் மேற்கு உலகுக்கும் இந்தியாவுக்கும் எதிரான பிரசாரங்களை தொடக்கி விட்டுள்ளதை நாம் காண்கிறோம். ஆக ஈழத்தமிழரின் இறுதி தெரிவான சர்வதேசமும் கைவிடும் நிலையில் எதிர்காலத்தில் தமிழர்களும் பர்மாவின் றோஙஹிய மக்கள் குழுமம் போல் கையறுநிலைக்கு செல்லலாம். அப்போது சர்வதேச சமூகம் வெறும் கண்டன அறிக்கைக்கு மேலாக எதையும் சாதிக்க முடியாது. விடுதலைப்புலிகளின் மகிந்தவை தெரிவு செய்யும் திட்டம் தமிழ் சமூகத்தை எங்கு நிறுத்தியுள்ளது என்பதை இங்கு நினைவு கூரல் பொருத்தமானதே.

மறுபுறமாய் ஐ.தே.க தலைமையில் அரசு அமையின் உறவாடி கெடுத்த நண்பனின் கதையை தமிழர்கள் மீண்டும் கேட்கும் பாக்கியத்தை பெறலாம். உண்மையில் அடுத்த செப்டெம்பரில் புதிய பாராளுமன்றம் அமையும் என்ற இலங்கை சனாதிபதி அவர்களின் கூற்றில் அர்த்தங்கள் ஆயிரம் உண்டு. நூறு நாள் திட்டம் நிறைவுற்றதும் நாடாளுமன்றை கலைத்திருக்க முடியும். ஆனால் செப்டெம்பர் மாதத்தில் புதிய பாராளுமன்ற அமர்வை திட்டமிடுதல் என்பது போர்க்குற்ற விசாரணை அறிக்கையினை மீண்டும் தள்ளி போடுவதற்கே. இந்த அரசு மீண்டும் தெரிவு செய்யப்படின் அமெரிக்காவே புளுகத்தில் இந்த காரியத்தை முன்னெடுக்கும். போர் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜெகத் டயஸ் அவர்கள் இராணுவ தலைமை அதிகாரியாக் நியமிக்கப்பட்டதன் பின்னணி இந்த அரசின் தூய்மை பற்றி தமிழ் மக்களிடம் கேள்விகளை எழுப்பி உள்ளது. தமிழர்களுக்கான தீர்வு பற்றியோ அல்லது போர்குற்ற விசாரணை குறித்தோ இலங்கை தீவில் யாரும் கதைத்தால் அவரின் செல்வாக்கு மழுங்கி போகும். அரசியலில் தற்கொலைக்கு ஒப்பான மேற்குறித்த விடயங்கள் குறித்து விவாதிக்க எந்த அரசியல்வாதிகளும் இங்கு தயாரில்லை.

ரணில் அவர்களின் தலைமையில் மீண்டும் அரசு அமையின் அமெரிக்க-இந்திய நலன்கள் பாதுகாக்கப்படும். அப்போது தமிழர் நலன் குறித்த நாடகங்களும் முடிவுக்கு வரும். ஈற்றில் கூறப்போனால் எதிர்காலத்தில் ஈழத்தமிழருக்கான தெரிவுகள் என்பது முயற்கொம்பே. 2009 இன் பின்னான வரலாற்று இடைவெளி மிகக்கிட்டிய காலத்தில் நிரப்பப்படப்போவதில்லை.

**தேத்தாமரத்தான்**

# சிறி லங்காவில் தமிழர்கள் மீது தொடரப்பட்டுள்ள மௌனப் போர்

சிறிலங்காவில் போர் முடிந்து ஆறு ஆண்டுகள் கடந்திருக்கும் நிலையிலும், அங்கு மௌனமான போர் ஒன்று தொடர்ந்து கொண்டிருப்பதாக, கலிபோர்னியாவை தளமாக கொண்ட அமெரிக்க ஆய்வு மையமான ஓக்லண்ட் நிறுவகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'போரின் நீண்ட நிழல்' என்ற தலைப்பில், 'சிறிலங்கா -போரின் பின்னரான நீதிக்கான பாடுகள்' என்ற உபதலைப்புடன் வெளியாகி இருக்கும் இந்த அறிக்கையில்-

தமிழர் உள்ளிட்ட சிறுபான்மையினர் மீது சிறிலங்கா அரசு திட்டமிட்ட வகையில் மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுதந்திரமான ஆய்வுகளின் அடிப்படையில் அங்கு தமிழர் நிலங்களில் இராணுவக் குடியிருப்புகள் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தொடர்ந்தும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். இராணுவப் பிரசன்னத்துக்கு அவர்கள் தொடர்ந்தும் முகம் கொடுக்க வேண்டியு-ள்ளதுடன், பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களின் புறந்தள்ளலுக்கும் உள்ளாகிறார்கள்.

போர் முடிந்து ஆறு ஆண்டுகள் முடிந்துள்ள போதிலும் தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களில் 160,000 இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

மக்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நிலங்களில் இராணுவத்தினர் பெருமெடுப்பிலான கட்டுமானப் பணிகளிலும், உல்லாச விடுதிகள் அமைப்பது உள்ளிட்ட வியாபாரப் பணிகளிலும் ஈடுபடுகிறார்கள். நிலம் இழந்த மக்கள் இடப்பெயர்வு வாழ்வில் தவிக்கிறார்கள். ஒரு சில பௌத்தர்களே இருக்கக் கூடிய தமிழர் வாழ்விடங்களில் போர் வெற்றிச் சின்னங்களையும் பௌத்த விகாரைகளையும் அரச அனுசரணையோடு அமைப்பதன் மூலம் தமிழர்களின் பண்பாடு, கலாசாரம், வரலாறு ஆகியன திட்டமிட்ட வகையில் நசுக்கப்படுகிறது.

இதுவும் மௌனப் போரின் ஒரு அறிகுறியே. அரச படையினராலும், பிரிவினை கோரிய தீவிரவாதிகளாலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் நில அபகரிப்பு உள்ளிட்ட போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் எடுத்த முயற்சிகளுக்கு சிறிலங்கா அரசு ஒத்துழைக்கவில்லை.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட அமைதியான அரசாங்க மாற்றத்தின் பின்னர் புதிய அதிபராகப் பதவியேற்ற மைத்திரிபால சிறிசேன இப்பிரச்சினைகளுக்குத் தீர்வளிக்கும் அரசியல் ஆளுமை கொண்டவரா என்ற கேள்வியும் உள்ளது.

பல தீவிர மனித உரிமை மீறல்களை இறுதிப்போரில் மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்படும் 57வது டிவிசனை வழி நடத்திய மேஜர் ஜெனரல் ஜெகத் டயசுக்கு இராணுவத்தின் உயர் பதவிகளில் ஒன்றான, இராணுவத் தலைமை அதிகாரி பதவியை வழங்கி இருப்பதானது, புதிய அரசாங்கம் போர்க்குற்றங்கள் குறித்த உள்நாட்டு விசாரணைகளை பொறுப்போடும் ஜனநாயக வழியிலும் நடத்துமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கை அதன் வடக்கு, கிழக்குப் பகுதிகளின் பலவந்த குடியேற்றங்களை நிறுத்தவும், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டவற்றை மீளப்பெறுவதற்கும், குற்றங்களுக்கு பொறுப்புக்கூறவும் நடவடிக்கை எடுக்கப்படும் வரை தமிழர் உள்ளிட்ட சிறுபான்மையினர் நியாயப்படி நடத்தப்படுவதற்கான சாத்தியங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருக்கும்

அரசியல் நாடகங்களை நிறுத்தி சர்வதேச சமூகம் சிறிலங்கா சிறுபான்மையினருக்கு மனித மற்றும் [illegible] உரிமைகளை பெற்றுக் கொடுப்பது [illegible] அனைத்துலக சமூகத்தின் பொறுப்பாகும்." என்று கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை மனித உரிமைகள் மற்றும் காணி விவகாரங்களில் அனைத்துலக நிபுணத்துவம் பெற்ற அனுருத்த மிட்டல் மற்றும், ஓக்லண்ட் மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆகியோரால், 2014 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள், களப் பணிகள் மற்றும் நூற்றுக்கணக்கான நேர்காணல்களை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுவே சிறிலங்காவில் போர் முடிவுக்குப் பின்னர், சுதந்திரமாக நடத்தப்பட்டுள்ள முதலாவது ஆய்வாக அமைந்துள்ளது.




**திரு.நடேசன் (முகப்புத்தக பதிப்பு)**
**அமெரிக்க ஆய்வு அறிக்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## மூலக்கூறுகள் உருவாக்கம்

மனிதன் உட்பட விலங்குகள், பறவைகள் போன்ற உயிர்வாழும் அங்கிகளின் கலங்களில் மூலக்கூறுகள் தொடர்ச்சியாக இயங்க வேண்டியது அவசியமாகும். இவ்வாறு கலங்களின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கு அவசியமான புரதச் சத்துக்களை வழங்கக்கூடிய மூலக்கூறுகளை உற்பத்தி செய்யக்கூடிய உலகின் முதலாவது மூலக்கூற்று பம்பினை உருவாக்கி Northwestern பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அசத்தியுள்ளனர்.



## தானாக இயங்கும் செயற்கைக் கை

மனிதர்கள் தமது மூளையைக் கொண்டு நினைக்கும் செயல்களை அறிந்து செயற்படக்கூடிய இலத்திரனியல் கை உருவாக்கப்பட்டுள்ளது. மூளை நரம்புகளால் இலத்திரனியல் சைகைகளாக பரிமாற்றப்படும் கணத்தாக்கங்களின் ஊடாகவே இக் கை கட்டளைகளைப் பெற்றுக்கொள்கின்றது.



மேலும் இக் கையில் ஒரே நேரத்தில் 100 வரையான நரம்புகளின் செயற்பாடுகளை துல்லியமாகக் கண்காணிக்கக்கூடிய மிகவும் சிறிய இரு சென்சார்கள் இணைக்கப்பட்டுள்ளது.


## முகம் மட்டும் பார்க்க வேணாம்

தற்போது முகம் பார்க்கும் கண்ணாடிகிலும் ஸ்மார்ட் தொழில்நுட்பம் புகுத்தப்பட்டுள்ளது.

அதாவது முகம் பார்க்கும் போதே அன்றைய நாள் தொடர்பான காலநிலை, நேரம், நாள்காட்டி, செய்திகள், ஜோதிடம், விளையாட்டு தகவல்கள், போன்றவற்றினை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

Ian Seyler என்பவரால் உருவாக்கப்பட்ட இந்த ஸ்மார்ட் கண்ணாடி தற்போது Kickstarter தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதுடன்.

## இலத்திரனியல் கேத்தல்




சாதாரண கோப்பைகளினூடாக நீரை வெப்பமேற்றக்கூடிய புதிய தலைமுறை இலத்திரனியல் கேத்தலை MIITO எனும் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இலகுவாக எடுத்துச் செல்லக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த கேத்தலின் உதவியுடன் கண்ணாடி கோப்பைகளிலும் நீரை வெப்பமேற்றக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

இதன் மூலம் 200 மில்லி லீற்றர் நீரை. 60 செக்கன்களிலும், 500 மில்லி லீற்றர் நீரை 2.5 நிமிடங்களிலும் கொதிக்க வைக்க முடியும். மேலும் இதனை சார்ஜ் செய்து பயன்படுத்தக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

## பறக்கும் கமெரா

Drone எனப்படும் சிறிய வகை பறக்கும் சாதனங்கள் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு அறிமுகம் செய்யப்பட்ட சாதனங்கள் பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருவதனால் தற்போது வெகுவாக பிரபலமடைந்து வருகின்றன.

இவற்றின் தொடர்ச்சியாக Sprite Drone எனப்படும் குழாய் வடிவிலான புதிய பறக்கும் சாதனம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இலகுவாக எடுத்துச் செல்லக்கூடிய இச்சாதனம் 1080p கமெராவினை உள்ளடக்கியுள்ளதுடன், பிரதானமாக வீடியோ மற்றும் புகைப்படங்கள் எடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.



OTHER

## சுயமரியாதையை இழக்காதீர்கள்

சமூகவலைத்தளங்களின் வரிசையில் தொடர்ச்சியாக முன்நிலையில் காணப்படும் பேஸ்புக்கினால் பல ஆபத்துக்களும் வரிசை கட்டி நிற்கின்றன. புதிய ஆய்வு ஒன்றில் பேஸ்புக் பயன்படுத்துவதனால் தனி நபர்களின் சுயமரியாதைக்கு களங்கம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு ஐக்கிய இராச்சியத்தின் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த உளவியலாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின்போது 555 பேஸ்புக் பயனர்களிடம் சில கேள்விகள் வழங்கப்பட்டு விடையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக அதிகளவான பேஸ்புக் பாவனையாளர்கள் தற்பெருமைக்காக பேஸ்புக் Post, Status என்பவற்றினை இடுவதாகவும், இதற்காக தமது குழந்தைகள் தொடர்பான விடயங்களை அப்டேட் செய்தல், அனைத்து வகையான விடயங்களையும் வெளிப்படையாக பகிர்தல், போன்ற செயற்பாடுகளால் சுயமரியாதைக்கு களங்கம் ஏற்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.




## மணிநேரம் பாவிக்கும் ஃபோன்

உலகின் முதல் முறையாக உபயோகித்தபின் தூக்கி எறியப்படும் செல்போனை நியூஜெர்சியை சேர்ந்த பெண் ராண்டிஸ் லிசா ராண்டி அல்ட்ஸ்சல் பேப்பரில் தயாரித்து சாதனை படைத்துள்ளார்.

இந்த செல்போனில் இருந்து ஒருவர் மறுமுனையில் இருந்து பேசுவதை மட்டுமே கேட்க முடியுமே தவிர பதிலுக்கு டயல் செய்து பேச முடியாது.

இதில் 60 நிமிடம் அதாவது ஒரு மணி நேரம் மட்டுமே பேச முடியும். இந்த செல்போன் 3 கிரீடிட் கார்டு அளவு பருமன் ஆனது. பேசி முடித்ததும் குப்பையில் வீசாமல் வாங்கிய கடையிலேயே திருப்பி கொடுத்தால் குறித்த பெறுமதி திரும்ப வழங்கப்படுகிறது. அது 2 முதல் 3 இஞ்ச் நீளம் வரை உள்ளது.

# குறுக்கெழுத்து புதிர் 062

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 18 | | ம் | 2 | ப | |
| 3 | ன | | | | | ■ | ■ | ■ |
| 4 | 17 | ன | | ■ | 5 | | 6 | |
| | | ■ | ■ | 7 | | தி | | |
| | ப் | 8 | | | | | ■ | 22 |
| ய் | 9 | | 19 | ய | 10 | | 21 | க |
| ■ | | 11 | | | ■ | 20 | | |
| ■ | ■ | 12 | க | | ■ | 13 க | | |
| 14 | | | 15 | ள | 16 | | | ர் |

விடையை அனுப்ப வேண்டிய முகவரி :

முடிவுத்திகதி : 05.06.2015

மலைமுரசு. இல - 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## இடமிருந்து வலமாக

1. சௌகரியம் - எதிர்ச்சொல்
2. விளையாட்டுகளுள் ஒன்று
3. கணவன், மனைவி குறித்த வரலாற்று காவியம் - திரும்பியுள்ளது.
4. இராசிகளுள் ஒன்று
5. மாலைப்பொழுது
6. இறந்தவர்களுக்காக செய்யப்படுவது
7. கடவுளை நம்பாதவன்
8. பத்துத் தலைகள் கொண்ட இலங்கையன்
9. ஒன்றில் மேல் பணம் இட்டு ஆடுவது
10. பனை ஓலையால் பின்னப்படுவது - திரும்பியுள்ளது
11. 24 மணித்தியாலங்களைக் கொண்டது
12. தவசிகளால் செய்யப்படுது
13. பார்க்க உதவுவது
14. குதிரைக்கு இடப்படுவது
15. உடலில் காணப்படும் இரத்தத்தை கொண்டு செல்வது - திரும்பியுள்ளது.
16. கலகத்தை தோற்றுவிப்பவர்

## மேலிருந்து கீழாக

1. திருமணத்தின் போது இதை மிதித்தே மெட்டி இடுவர்.
4. உறைப்பு சுவையை உடையது
5. குதிரை
6. வேகத்தைக் குறிக்கும் விஞ்ஞான பெயர் - திரும்பியுள்ளது
7. இரு பக்கத்தைக் கொண்ட பெறுமதி மிக்கது
8. சம்பந்தர் அடிக்கடி செல்லும் நாடு
17. கால் துடைக்கப் பயன்படுவது
18. மழை காலம் - திரும்பியுள்ளது
19. இந்து மயானத்தில் இது செய்யப்படும் - குழம்பியுள்ளது
20. வகை
21. குற்றத்திற்காக அறவிடப்படுவது - குழம்பியுள்ளது
22. இவ்வளவு சூட்டிற்குக் காரணமானவர்.

## புதிர் 061 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 15 ம | ர் | ■ | ■ | 2 பௌ | ர் | ண | 16 மி |
| ந் | ம் | ■ | ■ | ■ | த் | ■ | ■ | ச் |
| 3 தி | மி | ங் | 17 க | ல | 4 ம் | ன | 20 ல | ச |
| 5 ர | 18 க | 6 வ | ல | ம் | 7 த | ஞ் | ச | ம் |
| ன் | தி | ள் | 8 க | ங் | 19 கா | ரு | 9 ம் | 21 ப |
| 24 த் | ர் | ள் | ம் | ■ | ஞ் | 22 த | கு | த் |
| ரௌ | 10 கா | ல் | 23 தை | ■ | 11 ச | ந் | த | தி |
| ப | ம | ■ | 12 மெ | ரி | ணா | த | ■ | னி |
| தி | ம் | 13 கா | த் | தா | 14 டி | ம் | ■ | ■ |

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

திருமதி. கே. ஸ்ரீதியா
105, லோவர் வீதி, திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

## இயக்குனர் ரோஷன் ஆன்ட்ரியூஸின் ஜோதிகா நடிக்கும் 36 வயதினிலே



ஒரு பெண்ணின் குறைவான சுதந்திரம் என்பது அவள் திருமணம் ஆகும் வரை தான், அதிலும் குழந்தை என்று வந்து விட்டால் அவ்வளவு தான். வீட்டு வேலை, சீரியல், அழுகை என 4 சுவர்களில் அவர்களுடைய வாழ்க்கை அடைந்து விடும். அப்படி ஒரு பெண் தான் ஜோதிகா. ஆனால், விதிவிலக்காக அரசு வேலை பார்க்கிறார். அரசு வேலை என்றால் எந்த கணவர் தான் அனுப்பாமல் இருப்பார்கள். ஜோதிகா கல்லூரியில் தைரியமான பெண்ணாக இருந்து குடும்பம் என்று வந்தவுடன் அவர்களுக்காக வாழ ஆரம்பிக்கின்றார். கணவர் (ரகுமான்), குழந்தை என எல்லோருமே ஜோதிகாவிற்கான மரியாதையை தர மறுக்கிறார்கள். ஒரு கட்டத்தில் ஜோதிகாவின் மகள் தன் பள்ளிக்கு சிறப்பு விருந்தினராக வரும் இந்திய குடியரசுத்தலைவரிடம் ஒரு கேள்வி கேட்க, அந்த கேள்வியை அம்மா தான் கேட்க சொன்னார் என்று சொல்ல ஜோதிகாவை பார்க்க இந்திய குடியரசுத்தலைவர் விருப்பம் தெரிவிக்கின்றார். குடியரசுத்தலைவரை பார்க்க செல்லும் இடத்தில் ஜோதிகா உயர் ரத்த அழுத்தத்தால் மயக்கம் போட்டு விழ, ஊர் முழுவதும் கிண்டலுக்கு ஆளாகின்றார். இதனால் மீண்டும் கணவர், மகள் மட்டுமில்லாமல் ஜோதிகாவை பேஸ்புக் வரை கிண்டல் செய்ய ஆரம்பிக்கின்றனர். இதற்கிடையில் தன் கணவர் வேலை விஷயத்திற்காக அயர்லாந்து செல்ல, ஜோதிகாவை இங்கேயே விட்டு மகளை மட்டும் அழைத்து செல்கிறார். அப்போது தான் 'உன்னால முடியும் பாஸ்கர், நம்மலால சாதிக்க முடியாதது ஏது இல்லை' என்று பூஸ்ட் ஏற்றும் கதாபாத்திரத்தில் கல்லூரி தோழியான அபிராமி தோன்றி ஜோதிகாவிற்கு ஊக்கம் கொடுக்க, பேஸ்புக் கிண்டலுக்கு பதிலடி கொடுக்கின்றார். ஜோதிகா தன் வீட்டு மொட்டை மாடியிலேயே காய், கனிகளை உற்பத்தி செய்கிறார். ஒரு நாள் இதை தன் வீட்டின் அருகில் இருக்கும் ஒரு பாட்டிக்கு கொடுக்க, அவர் தன் முதலாளியிடம் ஜோதிகாவை கொண்டு செல்கிறார். அவருக்கு இந்த சுத்தமான காய், கனிகள் பிடிக்க தன் மகள் திருமணத்திற்கு ஜோதிகா தான் சமையல் காய்களை தரவேண்டும் என்று கூறுகிறார். ஒரு மனதாக சம்மதித்து தன் வீட்டில் அருகில் இருக்கும் எல்லோர் உதவியையும் கேட்கிறார். அவர்களும் சம்மதிக்க, இந்நிலையில் ஜோதிகாவின் கணவர் அயர்லாந்து வரசொல்லி வற்புறுத்துகிறார். ஜோதிகா இதை எல்லாம் சமாளித்து சாதனை பெண்ணாக மாறினாரா என்பதே மீதிக்கதை.

ஒரு வெகுளி அம்மாவாக, மனைவியாக, சமுதாயத்தில் மதிப்பு எதிர்ப்பார்க்கும் பெண்ணாக ஒவ்வொரு காட்சிகளிலும் சிக்ஸர் அடிக்கின்றார்.

'ஆண்களின் கேள்விகளாக இருந்து விட்டோம். நாம் விடைகளாக மாற வேண்டும்' என இன்றைய பெண்களின் மனநிலையை அப்படியே வெளிப்படுத்துகிறார்.

மொத்தத்தில் 36 வயதினருக்கு மட்டுமில்லை அனைத்து வயது பெண்களுக்கும் ஒரு எனர்ஜி டானிக் தான் இந்த 36 வயதினிலே...



### லியோன் கைது



இணைய தளத்தில் ஆபாசப் படங்கள் வெளியிட்டுள்ளதாக கூறப்பட்ட புகாரைத் தொடர்ந்து நடிகை சன்னி லியோன் தானே காவல்துறையினரிடம் சென்று விளக்கம் அளித்துள்ளார். அப்போது அவரைப் பார்க்க பெரும் கூட்டம் திரண்டதால் பரபரப்பான நிலை ஏற்பட்டது. பாலிவுட் சினிமா பத்திரிகை ஒன்றில் சன்னி லியோன் ஆபாசமாக இருப்பதாகவும், அதில் கொடுக்கப்பட்டுள்ள லிங்கில் அவரது பல ஆபாசப் படங்கள் மற்றும் ஆபாச வீடியோக்கள் உள்ளதாகவும், கூறியே புகார் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**மிஷ்கினின் இயக்கத்தில் வெளியான "திறந்திடு சீசே" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......**



### ஆப்பு

தமிழகத்தின் முன்னணி தொ.காட்சி நிறுவனம் ஒன்று பிரபல நடிகர்களை மாத்திரம் தன் கைக்குள் வைத்துக் கொண்டு சாதாரணமான-வர்களை ஒதுக்குதாக தயாரிப்பாளர் சங்கம் வருத்தம் தெரிவித்துள்ளது. இதை-யடுத்து முதற்கட்ட வேலையாக தமது பணியா-ளர்கள் அனைவரையும் மீளப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

### எலியால் விபரீதம்

தமிழில் படங்கள் ஏதும் கிடைக்காம-லிருந்த சஞ்சிதா ரெட்டிக்கு என்னோடு விளையாடு எனும் படத்-தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்து-ள்ளது. இதில் ஒரு பாட்டிற்கு எலிகள் அங்குமிங்கும் ஓடித்திரிய இவர் நடனம் ஆட வேண்டுமாம். இதை ஆரம்பத்தில் பயத்தின் நிமித்தம் மறுத்தவர் பின்னர் ஒருவாறு நடனமாடியுள்ளாராம்.

### ஈழத்தமிழனாக "மாஸ்" சூர்யா

வெங்கட் பிரபுவின் இயக்கத்தில் சூர்யா நடித்த படமான மாஸ் நேற்றைய தினம் வெளியாகியுள்ளது. உலகம் முழுவதும் சுமார் 1000 இற்கும் மேற்பட்ட அரங்குகளில் வெளியிடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படத்தில் சூர்யா இரட்டை வேடத்தில் நடிப்பதாகவும் ஒரு வேடம் ஈழத் தமிழர் போன்று வருவதாகவும் தெரிய வருகின்றது.



### ரசிகர்களுக்கு "தல" தீபாவளி

வீரம் படத்தின் வெற்றிக்கு பிறகு சிறுத்தை சிவா மீண்டும் அஜித்துடன் இணைந்துள்ளார். வழக்கம் போல தலைப்பு வைக்காமலேயே இப்படத்தின் படப்பிடிப்பும் நடைபெற்று வருகிறது. ஜோடியாக ஸ்ருதிஹாசனும், தங்கையாக லட்சுமி மேனனும் நடித்து வருகின்றனர். இப்படத்தை தீபாவளிக்கு வெளியிட தயாரிப்பு தரப்பு தீவிரமாக செயல்பட்டு வருகிறதாம். இந்த வருடம் அஜித் ரசிகர்களுக்கு தல தீபாவளி தான்.



### தாணுக்கு ஜாக்பொட்

தமிழ் சினிமாவில் ஒவ்வொரு தயாரிப்பாளரும் சூப்பர்ஸ்டார் தங்கள் படத்தில் நடிக்கவைக்க ஆவலாய் இருக்கின்றனர். அதேபோல் இளைய தளபதி விஜய்யும் தான் பல தயாரிப்பாளர்களின் கனவாக உள்ளது. இப்படி இரு பெரும் நட்சத்திர நடிகர்களின் படங்களை ஒரே நேரத்தில் தயாரிக்கும் வாய்ப்பு பிரபல தயாரிப்பாளர் தாணுக்கு கிடைத்துள்ளது. ரஞ்சித் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படத்தையும், அட்லி இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்தையும் தயாரிக்கவுள்ளார். துப்பாக்கி படத்திற்கு பிறகு பெரிய படங்கள் எதையும் தயாரிக்காமல் இருந்தவருக்கு இது ஜாக்பாட்டாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 55

# அரட்டை அடித்தலும் விதண்டாவாதம் பேசுதலும்

(வி. என். சந்திரகாந்தி)





மனிதன் செய்வதில் பாதி கருமங்க-ளையாயினும் மிருகங்கள் பறவைகள் உட்பட ஏனைய உயிர்வாசிகளால் செய்ய முடியும். எம்மைப்போலவே குடும்ப வாழ்க்கை வாழ்கின்றன. நல்ல வேளையாக அவற்றால் செய்ய முடியாத காரியம் அரட்டை அடித்தலும் விதண்டாவாதம் பேசுதலுமாகும். அதனால்தான் காடுகள் இன்றுவரை அழியாமல் இருக்கின்றன!

மனிதன் உயிர்வாழ்வதற்கு எத்தனையோ அத்தியாவசிய தேவைகள் இருப்பினும் அவன் அன்றுதொட்டு இன்றுவரை அரட்டை அடிப்பதிலும் விதண்டாவாதம் பேசுவதிலும் அதிகளவு கண்ணும் கருத்துமாக இருப்பது ஆச்சரியமாக உள்ளது.!

அரட்டை அடித்தல் என்று கூறியதுமே நினைவுக்கு வருவது பெண்கள் தண்ணீர் சேகரிக்கும் குழாயடியே.

சொல்லப்போனால் பத்திரிகை படித்தல், தொலைக்காட்சி பார்த்தல் ஆகிய பொழுதுபோக்கு அம்சங்களெல்லாம் சுவையில் அரட்டை பேசுதலுக்கு கிட்டவும் வரமுடியாது. நீர் குழாயில் ஒன்று கூடும் பெண்கள் புதினங்களை ஏனையோருடன் வெறுமனே பகிர்ந்து கொண்டால் அது எந்த பிரச்சனையையும் கொண்டுவராது. அதுவல்ல அரட்டை என்பது. சம்பவங்களை ஊதிப்பெருப்பித்து கதைகள் கட்டுவதையே உண்மையான அரட்டை என கூற முடியும்.!

அரட்டை பேசுவதற்கு குழாயடி ஒன்றும் கட்டாயமில்லை. எங்கெல்லாம் ஒரு சாட்டுடன் ஒன்றுகூட முடியுமோ அங்கெல்லாம் அரட்டை பேச முடியும்.

தவிர அரட்டை பேசுவதற்கு பெண்களால்தான் முடியும் என்று ஒரு நிலையும் இல்லை. ஆண்களாலும் அரட்டை பேச இயலும். அவர்கள் அரட்டை பேசும் பிரதான இடங்களாக கள்ளுக் கொட்டில், மரண வீடுகள், சீட்டாடும் இடங்கள், அலுவலகங்கள் ஆகியவை அமையும்.

அரட்டை அடித்தலின் பிரதான இலக்கு பொழுதுபோக்கு தான். அரட்டை அடிப்பவர்களின் வாய்க்கு அவலாக இருக்கும் விடயங்கள் காதல் வலையில் விழுந்த கன்னிப்பெண்கள். உறவில் விரிசல் ஏற்பட்ட கணவன் மனைவி மற்றும் குடும்பச்சண்டைகள்.

ஒரு பெண்ணை மையப்படுத்தி பழி சொல்லி கதைப்பதுடன் கட்டுக்கதைகளை-யும் அவிழ்த்துவிடுவதால் ஈற்றில் அப்பெண் தற்கொலை செய்யுமளவில் முடிவதுதான் கவலை தருவதாகும். ஒரு பெண் பிள்ளையை வளர்த்து ஆளாக்க பெற்றோர் சகோதரர்கள் எவ்வளவு பொறுப்பு எடுக்கிறார்கள். ஆனால் அக்கறை எதுவுமின்றி ஒன்றை இரண்டாக்குவதால் பல விபரீதங்கள் ஏற்படுவதை அரட்டை அடிப்பவர்கள் பொருட்படுத்துவதில்லை.

அரட்டை அடிப்பவர்களின் பொறுப்பற்ற பேச்சுக்களால் காதலர்கள் மட்டுமல்ல பெற்றோர், சகோதரர்களும் ஆத்திரமூட்டப்-படுகிறார்கள். சாதி இன மத குரோதங்கள் இழுத்துப் பேசப்படுவதால் பகைமை உணர்வு வளர்வதுடன் பிரச்சனைகள் மனிதாபிமான அடிப்படையில் நோக்கப்-படாமல் கொலை செய்யுமளவுக்கு மோசமாகின்றன.

அடுத்து கணவன் மனைவி உறவென்பது தெய்வீகமானது. அவர்களிடையே ஏற்படும் ஊடல்கள் உறவை வளர்க்க பயன்படுமேயன்றி பிளவை கொண்டு-வராது. ஆனால் அரட்டை அடிப்பவர்களின் காதுக்கு கணவன் மனைவி சண்டை பற்றி ஒரு சின்ன செய்தி எட்டினால் போதும். அதை ஊதி பெருப்பித்து விடுவார்கள்.

கணவனுக்கு கள்ள தொடர்புகள் இருப்பதாகவும் மனைவிக்கு வேறு தொடர்பு இருப்பதாகவும் சம்மந்தப்பட்டவர்-களுக்கு அச்செய்தி போய் சேருமளவிற்கு செய்துவிடுவார்கள். அதனால் பல மணமுறிவுகள் நேர்ந்துள்ளன.!

அடுத்து கிராமங்களில் குடும்பங்-களிடையே சண்டை ஏற்படுவதும் சமாதானமாவதும் சகஜமான விடயங்களேயாகும். ஆனால் அவற்றை ஊதிப் பெருப்பித்து குடும்பங்க-ளுக்குள்ளான விரிசலை மேலும் வளர்ப்பது அரட்டை அடிப்பவர்களின் கைங்கரியமே.

மறுபக்கமாக அரட்டை அடிப்பவர்களின் நோக்கம் என்ன என்பது பற்றி நாம் தெரிந்துகொள்வதன் மூலம் பல சிக்கல்களில் இருந்து தப்ப முடியும்.

அரட்டை அடிப்பவர்கள் பிறர் மேல் குற்றங்களை சுமத்துவதன் மூலம் தமது பெருமையை நிலைநாட்டிக்கொள்வதை நோக்கமாக கொண்டிருப்பர். தமது சில தப்புக்களை மூடி மறைக்க பார்ப்பர். ஊரில் வதந்திகளை பரப்புவதன் மூலம் மக்களை அச்சுறுத்தி தமக்கு சாதகமான நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்வர். தமக்கு சாதகமில்லாத விடயங்கள் ஊரில் நடைபெறுவதை தடுப்பர். தமது பகையாளிகளை பழிவாங்க மற்றவர்களை தூண்டுவர்.

இந்திய தொலைக்காட்சி சேவையில் "நீயா? நானா? நிகழ்ச்சியில் இரு தரப்பினரை வருவித்து ஏறத்தாள அரட்டை அடிக்க வைக்கின்றனர்.

அண்மையில் கணவன்மார் ஒரு பக்கமும் மனைவிமார் ஒரு பக்கமாகவும் கலந்து கொண்ட "நீயா? நானா?" நிகழ்ச்சியில் இடம்பெற்ற ஆச்சரியம் என்னவென்றால் கணவன் மனைவி இருவரும் வீட்டில் தமக்குள் பகிர்ந்து கொள்ளாத பல விடயங்களை அந்த நிகழ்ச்சியில் போட்டுடைத்தார்கள்.

உதாரணமாக கணவன் தான் மனைவி-யுடன் வெளியே செல்லும் போது கவர்ச்சியாக உடையணிந்து அழகாக தோற்றமளிக்கும் பெண்களை மனைவிக்கு தெரியாமல் பார்ப்பதுண்டு என்ற உண்மையை போட்டுடைத்தார்!.

அதே போன்று மனைவி தான் தனது கணவர் யார் யாரைப் போல இருந்தால் நல்லது என தான் சிந்திப்பதை கணவனுக்கு கூறுவதில்லை என்ற உண்மையை போட்டுடைத்தாள்!. அவர்களெல்லாம் வீட்டில் எந்த முகத்துடன் சந்திப்பார்கள் என்று எண்ண ஆச்சர்யமாக உள்ளது.

"அரட்டையடித்தலின்" மற்றுமொரு உடன் பிறப்புதான் "விதண்டாவாதம் பேசுதல்" என்பது. உண்மைக்கு புறம்பான விடயம் ஒன்றை உண்மை என்று சாதித்தல்.

விதண்டாவாதத்தை நீங்கள் நேருக்கு நேர் சந்திக்க விரும்பினால் ஒரு நாள் பாராளுமன்ற அமர்வுக்கு செல்லுங்கள். அரசியல் வாதிகளுக்கு மத்தியிலேயே விதண்டாவாதம் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்குகின்றது!.

பட்டிமன்றங்கள் பல சந்தர்ப்பங்களில் தமது பக்க நியாயத்திற்கு வலு சேர்க்க விதண்டா-வாதத்தையே துணைக்கு அழைக்கின்றனர்.

சுமார் நாற்பது வருடங்களுக்கு மேல் என்று நினைக்கின்றேன். "ராஜ்" என்ற பெயராலும் "சக்கடத்தார்" என்ற பெயராலும் இலங்கையில் சிறந்த நகைச்சுவை நாடக நடிகர் என பெயர் பெற்றிருந்த எனது மாமனார் ராஜரட்ணம் அவர்களின் "ஆச்சிக்கு சொல்லாதே" நாடகத்தில், சிங்கள வேலைக்காரன் பாத்திரத்தில் தோன்றும் அவர் அவருக்கு உரித்தில்லாத காணி ஒன்றிற்குள் விழுந்து கிடக்கும் தேங்காய்களை எடுத்துச் சென்றுவிடுவார். காணி சொந்தக்காரியான ஆச்சி அவரை அதட்டி விசாரிக்கின்றார். "ஏன் என்ரை காணிக்கை தேங்காய் திருடுகிறாய்? வேலைக்காரனின் பதில் "தேங்காய் காலுக்கை கிடந்து தடக்குப்பட்டுது.... அதுதான் எடுத்துக்-கொண்டு போனனான்" ஆச்சி மீண்டும் அதட்டுகிறா. "காலுக்கை கிடந்து தடக்குப்-பட்டால் அதை ஒரு பக்கம் தட்டிப்போட்டு நீ போறதுதானே?" பதில், "அது மற்றவைக்கும் தடக்குப்படும் எண்டுதான் எடுத்துக்கொண்டு போனனான்". நகைச்சுவையில் கூட விதண்டாவாதம் பயன்படுகிறது என்பதை சற்று பாருங்களேன்.!

# "உரையாடல்கள்"

சஞ்சயன் செல்வமாணிக்கம்

மனிதர்களுடன் பேசுவது என்பது நினைப்பதைப் போன்று இலகுவானதன்று என்பதை இப்போது உணரக்கூடியதாகவிருக்கின்றது. உரையாடல் என்பது ஒரு பெரும் கலை.

திரும்பிப் பார்க்கும் போது சில மனிதர்களுடனான எனது பேச்சுவார்த்தைகள் மனக்கசப்புகளுடன், பிரிவுகளுடன், கைகலப்புடன், எதிரி என்றான நிலைகளுடன் முடிவந்திருக்கின்றன. இப்போதெல்லாம் முன்பைப் போலல்லாது என் மனது கடந்து வந்த பாதைகளில் எங்கெங்கே தவறு விட்டேன், தவறுக்கான காரணம் என்ன, எப்படி அச் சிக்கலைத் தவிர்த்திருக்கலாம் என்று சிந்திக்கிறது.


முன்பெல்லாம் பொதுவேலைகள், விளையாட்டுகள், சங்கங்கள் என்று ஓடித்திரிந்த காலங்களில் பல உரையாடல்களை நான் உரையாடலாகக் கொள்ளாமல் விவாதமாக - தர்க்கமாக மாற்றிக் கொண்டதனால் நட்புகளை மட்டுமல்லாமல் எனது நிம்மதியையும் இழக்க நேர்ந்தது என்பதை இந்நாட்களில் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

உரையாடுவதால் மட்டுமே மற்றைய மனிதர்களை எம்மால் புரிந்துகொள்ளமுடியும் என்பது மெல்ல மெல்ல புரிந்திருக்கிறது. உரையாடலுக்கும், வாதம் - தர்க்கம் என்பவற்றிற்கான வேறுபாடுகளை நாம் அறிவதன் முலமே அவற்றிற்கிடையிலான வேறுபாட்டையும், மனித வாழ்வில் உரையாடலின் முக்கியத்துவத்தையும் உணரலாம்.

முதலில் வாதம் - தர்க்கம் செய்யும் போது நாம் எவ்வகையான நோக்கங்களைக் கொண்டிருக்கிறோம் என்று பார்ப்போம்

- எமது கருத்து சரியானது என்பதை நிலைநாட்ட முயற்சிக்கிறோம்.
- அதற்கான காரணங்களைக் கூறி விவாதிக்கிறோம்.
- எதிராளியிடம் கருத்தில் உள்ள பலவீனங்களைத் தேடுகிறோம்.
- எதிராளி தனது கொள்கையில் கொண்டுள்ள நம்பிக்கையை தகர்க்க முயற்சிக்கிறோம்.
- அவர் தனது கருத்தை மாற்றிக் கொண்டால் அவர் பலவீனப்படுகிறார் எனக்கொள்கிறோம்.
- எமது உடல் மொழி மூலமாயும் ஆதிக்கம் செலுத்துகிறோம்.

உரையாடலின் போது நாம் எவ்வகையான நோக்கங்களை



கொண்டிருக்கிறோம் என்று பார்ப்போம்.

- எமது கருத்தினை விளங்கப்படுத்துவதன் மூலம் புரியவைக்க முயற்சிக்கிறோம்.
- எம்முடன் பேசுபவரின் கருத்தை நிதானத்துடன் உள்வாங்கிக் கிரகிக்கிறோம்.
- பேசுபவரிடம் உள்ள சிறப்புக்களை, திறமைகளை அவதானிக்கிறோம்.
- எம்முடன் பேசுபவருக்கு பாதுகாப்பான ஒரு உணர்வை ஏற்படுத்துகிறோம்.
- பேசுபவர் தனது கருத்தை மாற்றிக்கொண்டால் அதை அவரின் உயர்ந்த பண்பாகக் கொள்கிறோம்.
- எமது உடல் மொழி மிகவும் இனிமையானதாக, மற்றவருக்கு ஆறுதல் தருவதாக இருக்கும்படியாக நடந்துகொள்கிறோம்.

மேற் கூறிய இரண்டு மொழியாடல்களின் தன்மையையும் நாம் பார்க்கும் போது நமக்கு இவை இரண்டும், இரு வேறு திசைகளில் பயணிப்பதை அறியக்கூடியதாய் இருக்கிறது. நான் விவாதம் - தர்க்கம் தவறு என்று கூறவில்லை. அதற்குரிய சந்தர்ப்பங்களில் அவற்றை நாம் நாடலாம். மனிதர்கள் சக மனிதனை புரிந்துகொள்ள முயலும் போது தர்க்கம், விவாதங்களை விட உரையாடலே அவர்களுக்கிடையில் புரிந்துணர்வை அதிகரிக்கிறது.

நாம் ஒருவருடன் உரையாடும் போது உரையாடுபவர்களிடம் இருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்று நோக்குவோமானால் ஒரு உரையாடலை மேற்கொள்பவர் ஒரே கருத்துள்ளவர்களாக இருக்கவேண்டியதில்லை. ஆனால் அவர்களுக்கிடையில் சமத்துவம் இருக்கவேண்டும். இச் சமத்துவத்தின் மூலமாக பலவீனமானவர்களும் அவர்களின் கருத்தை முன்வைக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் அதே நேரத்தில் உரையாடல் ஒன்றில் அதிக ஆதிக்கம் செலுத்துபவரின் வாதம் செய்யும் தன்மை அற்றுப்போகிறது.

எவ்வாறு நாம் ஒரு உரையாடலை உருவாக்கலாம்?

மற்றவரின் கருத்தை மிக அவதானமாகக் கேளுங்கள். ஒரு உரையாடலுக்கு "கேட்டல்" என்பது இன்றியமையாதது. ஒருவரை புரிந்து கொள்வதற்கு மிக அவதானத்துடனான, புரிதலுடனான "கேட்டல்" முக்கியமானது.

எவரையும் உங்களை புரிந்து கொள்ளும்படி திணிக்காதீர்கள். உரையாடலின் நோக்கம் உரையாடு-பவரின் கருத்தை மாற்றியமைப்பதல்ல. உரையாடலானது கேட்டல், உணர்தல், மற்றவரின் கருத்தை நான் புரிதல் ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டது. உரையாடலின் மூலம் உங்கள் கருத்தை மற்றவர்கள் அவதானிக்கும்படி செய்யலாம்.

விமர்சனமின்றி மற்றவரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாதீர்கள். புரியாத விடயங்களை கேள்விகளின் மூலமாக தெளிவுபெற முயலுங்கள்.

ஒரு வளமான உரையாடலானது அவ்வுரையாடலில் பங்கு பெறுபவர்களின் மனத் துணிச்சலிலேயே தங்கியிருக்கிறது. இப்படியான சிந்தனைகள் தோன்றும் போது வாழ்வின் அனுபவங்களே அவற்றை கற்பித்துப்போகின்றன என்பதும் புரிகிறது.

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்குறிப்பு

# தீமையிலும் நன்மை

**- பாலையூற்றான் -**

"கஷ்டப்பட்டு உழைப்பதை விட இஷ்டப்பட்டு உழைப்பதே மேல்." என எமது மூதாதையர் அடிக்கடி கூறிவருவதை நாம் அறிவோம். சிலருக்கு உழைத்து வாழ்வதின் மேல் பெரும் அலர்ஜி. அதே வேளை இன்னுமொருவரின் உழைப்பில் தங்கி வாழ்வதில் பலருக்கு குஷி. மேலும் சிலருக்கு தட்டிப்பறித்து வாழ்வது பெரும் இன்பம். இவ்விதம் பல கோணங்களில் பகுப்பாய்வு செய்யலாம்.

அப்துல் தனது பெற்றோருக்கு விருப்பமில்லாத திருமணத்தை புரிந்ததால் குடும்பத்தில் எக்கச்சக்கமான குளறுபடிகள் வந்தன. அவன் தான் விரும்பிய ஒரு சிங்களப் பெண்ணை திருமணம் புரிந்து கொண்டதே அங்கு குளறுபடிகள் ஏற்பட முக்கிய காரணிகளாக இருந்தன.

அவனின் தகப்பனார் அக்குரனைப் பிரதேசத்தில் ஒரு பிரசித்த கட்டிட ஒப்பந்தகாரர். அரசியல் செல்வாக்கு மிகுந்த மாபெரும் மனிதர். அது மட்டுமல்ல இஸ்லாம் சமயத்திலும் மிக இறுக்கமான பந்தத்தினை கொண்டதால் மக்காவுக்கு சென்று வந்து அப்பகுதியில் ஹஜிராவும் பதவியை பெற்றுக் கொண்டார். அகில இலங்கை நீதவானாக நியமனம் பெற்ற அவர் அக்குரனைப்பகுதியில் பெரும் புள்ளியும் கூட, அப்படிப்பட்ட ஒருவரின் மகன் இனம் மாறி, மதம் மாறி திருமணம் புரிந்தால் தகப்பனாரின் கீர்த்தி, செல்வாக்கு என்பன என்னவாகும்?

அவனுக்கு தெரியும் அதற்குப் பின் தனது வீட்டில் உரிய மரியாதை கிடைக்காதென்று. அதனால் அவன் தனிக்குடித்தனத்திற்குரிய ஏற்பாடுகளை காலதாமதமின்றி செய்திருந்தான். அதாவது தனது மனைவியின் சொந்த ஊரான அம்பாறைக்கே அவன் சென்று விட்டான்.



குடும்பத்தில் அவனுக்கு மொத்தமாக ஒன்பது சகோதரர்கள் இருக்கிறார்கள். எனவே தனது பெற்றோர்கள் தனித்து விடுவார்கள் என்று ஒருபோதும் நினைத்ததில்லை. அவனது அந்த விருப்பத்திற்கு தகப்பனார் மாத்திரமே மாறாக இருந்தார். காரணம் அவர் ஊரில் பெரும் புள்ளி என்பதால், மற்றும்படி முழுக் குடும்பமும் அப்துலின் முடிவில் என்றுமே கோபப்படவில்லை.

அம்பாறை ஒரு விவசாயப் பிரதேசம். அவனது மனைவி கூட சாதாரண குடும்பத்தை சார்ந்தவள் அல்ல. அவள் கூட நல்ல வசதியாக குடும்பத்தில் பிறந்தவள் தான். மேலும் அப்துல்லை அவளது குடும்பத்தினர் மனமார ஏற்றுக்கொண்டிருந்தனர். அவன் ஒரு முஸ்லீம் என்று யாரும் அவனை ஒதுக்கி வைக்கவில்லை. அதுமாத்திரமல்ல, அவன் ஒரு கடும் உழைப்பாளி. அவன் விரும்பும் தொழில் விவசாயமே. மனைவியின் குடும்பத்தினர் விவசாயிகள் என்பதானால் மேலும் அவனை விரும்ப இன்னும் ஒரு முக்கிய காரணியாக அவனது தொழில் அங்கு அமைந்திருந்தது.

காலங்கள் கடந்தன. மூன்று ஆண் குழந்தைகளுக்கு தகப்பன் என்னும் உன்னத அந்தஸ்திற்கு உரித்தாளியானான் அப்துல். பிள்ளைகள் பௌத்த பாடசாலையிலேயே கல்வி கற்று வந்தனர். பிள்ளைகள் பௌத்த மதத்தையே தழுவி வந்தனர். அவன் தனது மதத்தை பின்பற்றி கொண்டே வந்தான்.

1990ம் ஆண்டு கலவரம் அக்குடும்பத்தில் சிக்கல்களை தோற்றுவிக்க தவறவில்லை. மனைவி வழியால் அவனுக்கு இரண்டு உழவு இயந்திரங்கள் கிடைத்திருந்தன. மேலும் அவனது கடும் உழைப்பால் இரண்டு லொறிகளை விலை கொடுத்து வேண்டியிருந்தான். அவன் முஸ்லீம் என்பதால் அந்த ஆயுதக் குழுக்கள் எந்த வித அச்சமும் இன்றி அவனது வாகனங்களை பட்டப்பகலில் பலவந்தமாக எடுத்துச் சென்றனர். அவன் அது தொடர்பில் எந்த வித முறைப்பாடும் செய்யவில்லை. மரண அச்சுறுத்தலே அதற்கு காரணமாக இருந்தது.

அன்று அவனின் நான்கு வாகனங்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. இருப்பினும் எப்படியோ காவல்துறையினர் வாகனங்களை கண்டு பிடித்து அம்பாறை நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்திருந்தனர். குறித்த வாகனங்கள் அம்பாறை நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு அடையாளம் காணுவதற்காக அப்துல் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்தான்.

உண்மையில் அந்த நான்கு வாகனங்களும் அவனுக்குரியது என வாகனப் போக்குவரத்து திணைக்கள ஆவணங்கள் ஊடாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டாலும் குறித்த வழக்கு பல தவணைகளை கடந்து சென்றது. "பிச்சை வேண்டாம் ஐயோ! நாயைப் பிடியுங்கோ" என்பதற்கிணங்க பலர் உண்மையில் நட்டப்பட்டாலும் பரவாயில்லை நீதிமன்ற பக்கமே தலைகாட்ட மாட்டார்கள்.

அன்று காவல்துறையினர் தமது கடமையை சரியாக செய்தாலும் அந்த ஆயுதக்குழுக்கள் அவனை விட்ட பாடில்லை. தொலைபேசி மூலம் "வழக்கை வாபஸ் பெறும்படி" அவனை அடிக்கடி மிரட்டினார்கள். உண்மையில் அந்த வழக்கை தாக்கல் செய்தவர்கள் காவல்துறையினரே. வழக்கிற்கும் அவனுக்கும் எதுவித சம்மந்தமுமில்லை. வாகனங்களுக்கு உரித்தாளி எனும் வகையில் அடிக்கடி நீதிமன்றம் செல்ல வேண்டி இருந்தது.

தனது மகனுக்கு ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டான நிலையிலிருந்து அவனை விடுவிக்க வேண்டும் என்பதற்காக சகலவற்றையும் மறந்து அவனுக்கு உதவி செய்ய முன்வந்தார். அவர் தனது அரசியல் செல்வாக்கை முற்றுமுழுதாக பிரயோகித்து அந்தச் சிக்கலில் இருந்து எப்படியோ அவனை காப்பாற்றி விட்டார். அன்றிலிருந்து ஆயுதக்குழுக்களின் தொலைபேசி அச்சுறுத்தல்கள் அவனுக்கு இருக்கவில்லை.

குறித்த வாகனங்களை தாம் திருடவில்லை எனவும் அவை பிரதேசத்தில் வைக்கப்பட்ட நிலையில் இருந்தமையால் உரிமையாளர்கள் யார் என்று தெரியாததால் அவற்றை தாம் பயன்படுத்தி வந்ததாக சந்தேகநபர்கள் மன்றில் தெரிவித்ததையடுத்து அவ்வழக்கு சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்து.

சந்தேகநபர்கள் எந்தவித நிபந்தனைகளுமின்றி முற்று முழுதாக விடுதலை செய்யப்பட்டார்கள். வாகனத்தை அப்துல் பொறுப்பேற்றுக் கொண்டான். "முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும்" என்பார்கள். குறித்த ஆயுதக்குழுக்கள் அன்றைய அரசின் பங்காளிகள் என்பதால் விடயம் அத்தோடு முடிந்து விட்டது. அப்துல்லின் திருமணத்தால் பிரிந்திருந்த அந்தக் குடும்பங்கள் இன்று ஒன்று சேர்ந்து விட்டன.

# வெளிநாடு செல்லும் தாய்மாரே - சிந்தியுங்கள்

*- தன்யா -*

கமலா மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது கணவனோ கூலி வேலை செய்யும் சாதாரண தொழிலாளி. அவர்களுக்கு மூன்று குழந்தைகள். மூத்தவனுக்கு 6 வயது, இரண்டாமவனுக்கு மூன்று வயது, மூன்றாவது பெண் குழந்தைக்கு 6 மாதங்கள்.

தன் குடும்ப சூழ்நிலையை இதற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாத அந்த தாய் கமலா கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி பணிப்பெண்ணாக வேலைக்குச் சென்றாள்.

தந்தையோ பொறுப்பற்றவர். நாள் முழுவதும் கூலித்தொழில் செய்து விட்டு அந்த அலுப்பை போக்கிக் கொள்வதற்காக தலை வரை மது அருந்திவிட்டு இரவிலேயே வீடு திரும்புவார். மீண்டும் காலையில் வேலைக்குச் சென்று விடுவார். சில வேளைகளில் மேசை மீது காசு வைத்து விட்டுச் செல்வார்.

எனில் பிள்ளைகள் மூவரும்?? முத்தவன் தனக்குத் தெரிந்த மாதிரி சோறு காய்ச்சி ஏதேதோ எல்லாம் செய்து தன் தம்பிக்கும் தங்கைக்கும் உணவு கொடுப்பான். வீடு பெருக்குதல் போன்ற வேலைகளை இரண்டாமவன் செய்வான். இருவரும் சேர்ந்தே தமது தங்கையை பார்த்துக் கொள்வர். காசில்லா நாட்களில் வெறுந் தண்ணீர் தான் அவர்களின் உணவாக இருக்கும்.

அருகிலேயே அவர்களது பெரியம்மா இருந்த போதிலும் அவரும் இக் குழந்தைகளைப் பார்ப்பதோ அல்லது உணவு கொடுப்பதோ இல்லை.

இதை எவ்வாறோ அறிந்த ஓர் சமூகப் பொறுப்புள்ளவர் இவ்விடயத்தை கருத்தில் எடுத்து சிறுவர் பராமரிப்பு நிலையத்துடன் தொடர்பு கொண்டு முதல் இரண்டு குழந்தைகளையும் அவர்களின் செலவில் விடுதிக்கு அனுப்பி அவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கையை ஆரம்பிக்க வழி சமைத்துக் கொடுத்தார்.

மூன்றாவது குழந்தையான 6 மாதக் குழந்தை குறித்து அவர்களது பெரியம்மாவிடம் கலந்துரையாடிதுடன் கமலாவுடனும் கதைத்து ஓர் சிறந்த முடிவினை மேற்கொண்டுள்ளார்.

அதாவது தாய் மாதா மாதம் கட்டாயம் அக்குழந்தையின் பராமரிப்புச் செலவுக்கான தொகையை பெரியம்மாவிற்கு அனுப்ப வேண்டும் எனவும், அதே வயதில் குழந்தை கொண்டுள்ள பெரியம்மாவிடம் அக்குழந்தையும் வளரும் எனவும். தாய் தன் நாட்டை அடைந்ததும் அக்குழந்தையை பொறுப்பேற்க வேண்டும் எனவும் தாய் மற்றும் தாயின் அக்காவினதும் சம்மதத்தின் பேரில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது அக்குடும்பம் ஓர் நிம்மதியான சூழலுக்குள் வாழ்கின்றது.



தந்தை தாயினது பொறுப்பற்ற நடவடிக்கைகளால் பிள்ளைகளே பிரச்சினைக்கு உள்ளாகின்றனர்.

## இப்படியும் நடக்கலாம்

- அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் 16 வயது நிரம்பிய மாலியாவை 50 பசுக்கள், 100 ஆடுகள் சீதனத்துடன் திருமணம் செய்துகொள்ள தயாராக உள்ளதாக கென்யாவைச் சேர்ந்த இளைஞர் தெரிவித்துள்ளமையானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எதிர்வரும் ஜுன் மாதம் கென்யாவுக்கு சுற்றுப்பயணம் செய்யவரும் ஒபாமாவை நேரில் சந்தித்து பெண் கேட்கப் போவதாக உறுதிபட தெரிவித்துள்ளார்

- உலகின் முதல் கொலை எப்போது நடந்தது என்பது குறித்து பிர்மிங்டன் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்நிலையில் ஸ்பெயின் நாட்டில் உள்ள அட்டாபௌரிக்கா மலை பகுதிகளுக்கு இடையில் உள்ள "எலும்புகளில் குழி" என்றழைக்கப்படும் இடத்தில் இருந்த ஒரு மனித எலும்பு கூட்டை கண்டுபிடித்துள்ளனர். சுமார் 4,30,000 ஆண்டுகளுக்கு முன்பு நேருக்கு நேராக நடந்த தாக்குதலில் இறந்தவரின் மண்டையோடு என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

- "டவுன் சிண்ட்ரோம்" குறைபாடுள்ள குழந்தைகளினால் சாதாரண பள்ளிகளில் படிக்க முடியாது. இப்படி அமெரிக்காவில் உள்ள பள்ளி ஒன்றில் படித்து வரும் டவுண் சிண்ட்ரோம் மாணவர் டெரன்ஸ் மற்றும் அவரது தோழி டிஸுவர் ஆகிய இருவரும் காதலித்து இணைந்துள்ளனர்.

- அவசரகால விடுதி ஒன்றுக்கு முன்னாள் ஆசிரியர் ஒருவர் சென்றுள்ளார். ஆனால் அங்கு வளர்ப்பு பிராணிகளுக்கு அனுமதி இல்லை என்பதால் தனது நாய்களுடன் தனியார் நிறுவனத்தின் கார் நிறுத்திவைக்கும் இடத்தில் தனக்கு சொந்தமான காரிலேயே வசித்து வருகிறார்.

- - உண்மை! உண்மையைத் தவிர வேறேதுமில்லை - -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாக்களைப் பாதுகாப்பது எப்படி?

**அரசியல் அலசல்**

அண்மையில் நினைவு கூரலுக்கான உரிமை என்ற கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக மனித உரிமைச் செயற்பாட்டாளரான ருக்கி பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரோடு மரிஷா எனப்படும் மற்றொரு மனித உரிமைச் செயற்பாட்டாளரும் வந்திருந்தார். அன்றிரவு யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களோடு நிகழ்ந்த ஓர் சந்திப்பின் போது மரிஷா கேட்டார் "படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைகள் தொடர்பாக அதிகரித்த அக்கறையைக் காட்டும் தமிழ்த் தரப்பானது தனது சமூகத்திற்குள் வாழும் குற்றவாளி-களால் மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைகளையிட்டு ஏன் அந்தளவிற்கு அக்கறைப்படுவதில்லை என்று?" அவருடைய கேள்வி அன்று பகல் யாழ். நூலகக் கேட்போர் கூடத்தில் நடந்த கருத்தரங்கில் எழுப்பப்பட்ட ஒரு கேள்வியின் தொடர்ச்சிதான். மேற்படி கருத்தரங்கில் கேள்வி கேட்ட ஒருவர் சரண்யாவின் கொலையைச் சுட்டிக்காட்டி அது போன்ற குற்றங்கள் தொடர்பாக அதிகம் அக்கறைப்படாத தமிழ்ச் சிவில் செயற்பாட்டாளர்கள் அதேசமயம் அரச படைகளால் இழைக்கப்படும் பாலியல் குற்றங்கள் தொடர்பில் பெருமளவிற்கு எதிர்ப்புக் காட்டுவது ஏன் என்ற தொனிப்பட கேள்வி எழுப்பியிருந்தார்.

அவரும் மரிஷாவும் கேட்ட கேள்விகளுக்கான பதிலை சரியாக ஒரு வாரத்திலேய தமிழ் மக்கள் வழங்கிவிட்டார்கள். வித்தியாவுக்காக புங்குடுதீவில் தொடங்கிய ஆர்ப்பாட்டங்கள் வேகமாகப் பரவி குடாநாட்டையும் தாண்டி தென்னிலங்கை, மற்றும் புலம் பெயர்ந்த நாடுகளிற்கும் விரிவடைந்துவிட்டன. மே 18 நினைவு கூரலுக்கான ஏற்பாடுகள் நடந்து-கொண்டிருந்த ஒரு காலச் சூழ்நிலையிலேயே வித்தியா சிதைத்துக் கொல்லப்பட்டார். அவருக்கு நடந்த கொடுமையானது ஒரு விதத்தில் மே 18 ஒட்டிய நினைவுகளின் பின்னணியில் கூடுதல் அழுத்தத்தைப் பெற்றுவிட்டது. அவருக்காக யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்கள் பெருமளவிற்கு தன்னியல்பானவை. ஒப்பீட்டளவில் அதிகம் உணர்வெழுச்சியானவை. அரசியல் ஆய்வாளரான ஜோதிலிங்கம் சொன்னார் "மாற்றத்தின் பின் யாழ் பல்லைக்கழக ஆசிரியர் சமூகம் ஒழுங்கு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தை விடவும் அதிகரித்த அளவிலான உணர்வெழுச்சியோடு தாமாக முன்வந்து மக்கள் இவ் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதாக".

சுன்னாகம் நீர் விவகாரத்தை முக நூலில் தொடக்கி வைத்து அதை ஒரு விவகாரமாக்கிய ஒரு விமர்சகர் முக நூலில் பின்வரும் தொனிப்பட கேள்வி எழுப்பியிருந்தார். "வித்தியாவிற்காக திரண்ட அளவிற்கு பொதுமக்கள் மே 18 இற்குத் திரளாதது ஏன்?" என்று. மற்றொரு எழுத்தாளர் பிரான்சில் இருந்து எழுதினார் "சரண்யாவிற்காக தெருவில் இறங்காத ஒரு சமூகம் வித்தியாவிற்காக ஏன் இவ்வளவு உணர்வெழுச்சியோடு தெருவில் இறங்கியது?" என்று.

உண்மைதான். கடந்த தசாப்தத்தில் வடக்கில் நிகழ்ந்த தன்னியல்பான ஆர்ப்பாட்டங்கள் எல்லாவற்றோடும் ஒப்பிடுகையில் உணர்வெழுச்சியோடு கூடிய ஆர்ப்பாட்டங்களாக இவை காணப்பட்டன. அதற்குக் காரணம் என்ன? மூன்று பிரதான காரணங்கள் உண்டு. ஒன்று உடனடியானது. மற்றது நீண்டகால அடிப்படையிலானது. மூன்றாவது இணையப் பெருக்கம்.

உடனடியான காரணம் ஆட்சிமாற்றம்தான். ஆட்சிமாற்றத்தின் பின்னணியில் வடக்குக் கிழக்கில் படிப்படியாக நிகழ்ந்து வரும் சம்பவங்களின் ஒரு கட்ட வளர்ச்சியே இவ்வார்ப்பாட்டங்கள் எனலாம். தமது குரல்வளையை நெரிக்கும் இரும்புக்கரங்களின் பிடி ஒப்பீட்டளவில் தளர்ந்திருப்பதாக சாதாரண சனங்கள் நம்பத் தொடங்கிவிட்டார்கள். இத்தகையதோர் பின்னணியில் யாழ். பல்லைக்கழக ஆசிரியர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மிகப்பெரிய ஊர்வலம் முதலில் நடந்தது. அதைத் தொடர்ந்து சுன்னாகம் நீர் விவகாரத்தை ஒட்டி போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதன் பின் அண்மையில் யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசியல் பரப்பில் அண்மைத் தசாப்தங்களில் நிகழ்ந்த ஒரு நூதனம் என்று வர்ணிக்கத் தக்க பகிரங்க விவாதம் ஒன்று இடம்பெற்றது. யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் சுமந்திரனுக்கும் கஜேந்திரகுமாருக்கும் இடையில் இடம்பெற்ற பகிரங்க விவாதமே அது. அச்சிறிய மாநாட்டு மண்டபம் தாங்க முடியாத அளவிற்கு பெருந்திரளானோர் அதில் கலந்து-

**தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் தமது மக்களுக்கு ஒரு புதிய அரசியல் தரிசனத்தைக் கொடுக்கத் தவறிட்டார்கள்**

கொண்டார்கள். தமிழ் அரசியல் பரப்பில் இது போன்ற பகிரங்க உரையாடல்கள் கடந்த சில தசாப்தங்களாக அரிதாகவே நிகழ்ந்திருக்கின்றன. தமிழ் அரசியலின் அகஜனநாயக வெளியானது ஆரோக்கியமான விதத்தில் அகன்று வருவதை இது காட்டுகின்றது. இப்பகிரங்க விவாதத்தின் பின் மே 18 வந்தது. 2009 இற்குப் பின் தாயகத்தில் மே 18 இந்தளவிற்கு நினைவு கூரப்பட்டது இதுதான் முதற்தடவை. சட்டத் தடைகள் போடப்பட்ட போதும்சிறிய அளவிலேனும் இறந்தவர்கள் நினைவுகூரப்பட்டார்கள். கத்தோலிக்கத் திருச்சபையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒரு நிகழ்வைத் தவிர ஏனையவற்றுள் பெரும்பாலானவை கட்சி நிகழ்வுகளே. கட்சிப் பிரமுகர்கள் தமது செல்வாக்குப் பிரதேசங்களுக்குள் ஓரளவிற்கு நினைவு கூரலைச் செய்தார்கள். எனினும் இது ஒரு நம்பிக்கையூட்டும் தொடக்கம்தான். இத்தகையதோர் அரசியல் சூழலில்தான் வித்தியா கொல்லப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சமூகம் செய்த ஊர்வலத்தில் இருந்து தொடங்கி படிப்படியாக மெதுமெதுவாக அகட்டப்-பட்டு வரும் சிவில் ஜனநாயக வெளிக்குள்ளேயே வித்தியாவுக்கான ஆர்ப்பாட்டங்களும் நடந்திருக்கின்றன. இதை இப்படி எழுதுவதன் மூலம் இக்கட்டுரையானது மாற்றத்தை மனோரதியப்படுத்துவதாக யாரும் நினைக்கக் கூடாது.

இரண்டாவது நீண்டகாலக் காரணம். 2009 இற்குப் பின்னிருந்து அமுக்கப்பட்டுவந்த உணர்ச்சிகளின் வெடிப்பே இது. இங்கு வித்தியா ஒரு பொறி மட்டுமே. ஏற்கனவே நீறுபூத்துக்கிடந்த கோபத்தின் மீது வெறுப்பின் மீதும் வீழ்ந்த ஒரு பொறி.

வித்தியாவுக்காக திருநெல்வேலிச் சந்தையில் முகப்பில் கட்டப்படிருந்த பதாதையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. "நேற்று கிருசாந்தி, இன்று வித்தியா? நாளை யார்?"

இக்கேள்விக்குள் இருக்கிறது மூலகாரணம். இதற்கு முன் நிகழ்ந்த இதுபோன்ற எல்லாச் சம்பவங்களினதும் ஆகப்பிந்திய ஒரு குறியீடாக வித்தியா மாறிவிட்டார். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் கைகளில் வித்தியாவின் ஒளிப்படம் இருந்தது. ஆனால் அவர்களுடைய மனங்களில் கிருசாந்தியினுடையதும், இசைப்பிரியாவினுடையதும் அதுபோன்ற எல்லாப் பெண்களினுடையதும் ஞாபகங்கள் நிறைந்திருந்தன. மே 18 ஐ பரவலாக நினைவுகூரமுடியாத சூழலில் தமது கூட்டுத் துக்கத்தை வெளிப்படுத்த முடியாததால் ஏற்பட்ட கூட்டுக் கோபத்தை வித்தியாவின் பெயரால் தமிழ் மக்கள் வெளிப்படுத்தினார்களா? என்றும் கேட்கலாம். இது ஒரு வெளிப்படையான அரசியலை முன் வைக்கும் ஆர்ப்பாட்டமாக இருந்திருந்தால் இந்தளவிற்கு பெருந்திரளானோர் குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினர் பங்குபற்றியிருந்திருக்கமாட்டார்கள். அந்தளவிற்கு தமிழ் மக்கள் மாற்றத்தை முழுமையாக நம்பவும் இல்லை.

முள்ளிவாய்க்காலை நினைவு கூர்வது என்பது ஒரு வெளிப்படையான அரசியல். அதில் றிஸ்க் எடுக்க நடுத்தர வர்க்கம் தயங்கியது. சரண்யா கொல்லப்பட்டபோது இப்போதிருக்கும் அளவிற்கு சிவில் வெளி அதிகரித்திருக்கவில்லை. எனவே. சரண்யாவுக்காகவும் முள்ளிவாய்க்காலுக்-காகவும், இசைப்பிரியாவுக்காகவும் கிளர்ந்தெழாத மக்கள் வெளிப்படையான அரசியலைக் கொண்டிராத வித்தியாவுக்காகத் தெருவில் இறங்கினார்கள்.

சில வாரங்களுக்கு முன்பு தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஒரு முக்கியஸ்தர் கேட்டார் "நாங்கள் முன்பு ஆர்ப்பாட்டங்களைச் செய்தபோது மிகச் சிலரே எங்களோடு நின்றார்கள். மிகுந்த ஆபத்தின் மத்தியில் நாங்கள் அவற்றைச் செய்தோம். ஆனால் இப்பொழுது நிறையப் பேர் முன்வருகிறார்கள்" என்று. ஆனால் அவ்வாறு முன்வருவோர் கூட நேரடியாக படைத்தரப்போடு மோதும் அரசியல் விவகாரங்களுக்காக போராடத் தயார் இல்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

மூன்றாவது காரணம் இணையப் பெருக்கம். அபிப்பிராயங்களை உருவாக்குவதிலும், கோபத்தையும் வெறுப்பையும பரப்புவதிலும் இணையம் பெரிய பங்காற்றுகின்றது. ஒரு புறம் நியாயமான கோபம் காட்டுத் தீயாய் பரவுகிறது. இன்னொரு புறம் உள்நோக்க-முடைய வதந்திகளும் குருட்டுத் தனமாகப் பகிரப்படுகின்றன.

மேற்சொன்ன மூன்று பிரதான காரணங்களின் விளைவாக வித்தியாவின் விவகாரம் வெடித்துக் கிளம்பியது. அதேசமயம் அரசியல் தரிசனமுடைய ஒரு கட்சியோ அல்லது செயற்பாட்டு இயக்கமோ மேற்படி ஆர்ப்பாட்டங்களுக்கு ஒட்டுமொத்த தலைமைத்துவத்தை வழங்கவில்லை என்பது அவற்றுக்குள்ள பிரதான பலவீனமாகும்.

தமிழ் மக்களின் கோபமும் வெறுப்பும் ஒரு வெகுசன சக்தியாக ஒரு அரசியல் ஆயுதமாகத் திரட்டப்படுவது என்றால் அதற்கு அரசியல் தரிசனமுடைய தலைமை இருக்க வேண்டும். இல்லையென்றால் அந்த வெறுப்பும் கோபமும் விரயமாகிவிடும். இது சில சமயம் போராட்டத்தின் நோக்கத்தையும் வீரியமிழக்கச் செய்துவிடும். புதன்கிழமை நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்களின் முடிவில் என்ன நடக்கக் கூடும் என்பதை செவ்வாய்க்-கிழமையே அனுமானிக்கக் கூடியதாக இருந்தது. செவ்வாய்க்கிழமையன்று பலாலி வீதியில் ஒரு சிறு குழு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. அவர்கள் வீதியின் ஓரம் வீடுகளில் காய்த்துக் குலுங்கிய மாங்காய்-களை மதில்களில் ஏறிப் பறித்தார்கள். இன்னொரு குழுவினர் நகரத்தில் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தும், பொது நிறுவனங்களை அச்சுறுத்தியும் நகரத்தை உறைய வைத்தார்கள். மறுநாள் அதாவது புதன் கிழமை இது அதன் அடுத்த கட்ட வளர்ச்சியை அடையக் கூடும் என்பதை மக்களின் நாடித்துடிப்பை உணரத்தக்க எந்தவோர் அரசியல் வாதியும் கண்டுபிடித்திருக்கலாம்.

வித்தியாவின் சாவீட்டுக்குச் சென்று துக்கம் தெரிவித்துவிட்டு தமது கட்சி அலுவல்களுக்கு திரும்பிச் சென்றுவிட்ட அரசியல்வாதிகளால் தமது வாக்காளர்களின் அடிமனதில் படிப்படியாகத் திரண்டு வந்த நெருப்பைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. புதன்கிழமை நிகழ்ந்த ஆர்ப்பாட்டங்களில் அவர்கள் பெருமளவிற்கு பார்வை-யாளர்களாகவே நிற்கவேண்டியதாயிற்று. அதாவது அண்மைக்காலங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் சிவில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் அரசியல்வாதிகள் ஓரத்திற்குத் தள்ளப்படுவதை காண முடிகிறது. அதேசமயம் அரசியல்வாதிகள் இல்லாத வெற்றிடத்தில் சிவில் எதிர்ப்புக்களுக்குத் தொடர்ச்சியாக தலைமை-தாங்கவல்ல மாற்று அமைப்புக்களையோ செயற்பாட்டு இயக்கங்களையோ அரங்கில் காண முடியவில்லை. இது எதைக் காட்டுகிறது?

கடந்த 6 ஆண்டுகளாக அரசியல்வாதிகளை அதிகளவில் உற்பத்தி செய்த ஒரு சமூகம் செயற்பாட்டு வீரர்களை உற்பத்தி செய்யத் தவறிவிட்டது. உள்ராட்சி மன்றங்களிலும், மாகாண சபைகளிலும், நாடாளுமன்றத்திலும் பிரதிநிதிகள் உண்டு. இவர்களில் யார் சொன்னால் மக்கள் அதைக் கேட்பார்கள்? மக்களை தமது கண்ணசைவிற்குள் வைத்திருக்கும் தலைவர்கள் எத்தனை பேருண்டு? அப்படியாரும் இருந்திருந்தால் அண்மைக்கால போராட்டங்களுக்கு நிச்சயமாக அவர்களால் தலைமையைக் கொடுத்திருக்க முடியும்.

சரி அரசியல்வாதிகளை விடுவோம். இவர் சொன்னால் மக்கள் அதைக் கேட்பார்கள் என்று சொல்லத்தக்க சமூக செயற்பாட்டாளர்கள் யாராவது உண்டா? அல்லது மதச் செயற்பாட்டாளர்கள் யாராவது உண்டா? கிராம மட்டத்தில் அல்லது நகர மட்டத்தில், அல்லது மாகாணமட்டத்தில் இவர் சொன்னால் பெற்றோரும் மாணவர்களும் கேட்டு நடப்பார்கள் என்று சொல்லத்தக்க கல்வியாளர்கள் எத்தனைபேர் உண்டு? அதிபர்கள் எத்தனைபேர் உண்டு? ஆசிரியர்கள் எத்தனைபேர் உண்டு?.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக படைத்துறை மயப்பட்டுவந்த தமிழ்ச் சமூகமானது அதன் உள்ளூர் தலைமைத்துவங்களை பெருமளவிற்கு இழந்துவிட்டது. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்ததன் பின்னரான கடந்த ஆறு ஆண்டுகளாக தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்கள் தமது மக்களுக்கு ஒரு புதிய அரசியல் தரிசனத்தைக் கொடுக்கத் தவறிவிட்டார்கள். உள்ளூர் அரசியல் தலைவர்கள் பிரமுகர்களாகச் செயற்படுவதற்குப் பதிலாக சமூகச்சிற்பி-களாக செயற்படத் தவறிவிட்டார்கள். தமிழ் மக்கள் அரசியல் தரிசனமற்ற, இலட்சியவேட்கை இழந்த ஒரு சமூகமாக தேங்கிப்போய் நிற்கிறார்கள். தமிழ் சமூகத்திற்கு ஓர் அரசியல் தரிசனத்தை, தெளிவான இறுதி இலட்சியத்தைக் காட்டும் ஒரு தமைமைத்துவத்துக்கே குறிப்பிட்ட அந்த அரசியல் தரிசனத்தை நோக்கி சமூகத்தை ஆற்றுப்படுத்து-வதற்குரிய தலைமைத்துவங்களை கட்டி எழுப்ப வேண்டிய ஒரு தேவை ஏற்படும். அவ்வாறு அரசியல் தரிசனமுடைய இலட்சியப்பாங்கான அல்லது குறைந்த-பட்சம் நீதிமான்களாகக் காணப்படும் ஊர் தலைவர்கள் இல்லாத ஒரு வெற்றிடத்திலேயே வித்தியா போன்ற-வர்கள் சிதைக்கப்படுகிறார்கள். கோஸ்டி மோதல்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

இப்பொழுது தண்டனைகளை இறுக்குவதன் மூலம் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தலாம் என்று ஒரு வாதம் முன்வைக்கப்படுகின்றது. அதில் ஓரளவிற்கு உண்மை உண்டு. குற்றவாளி-களைத் தண்டிப்பது உடனடியானது ஆனால் குற்றவாளிகளை உருவாக்கும் சமூகச்சூழலை மாற்றியமைப்பதே நிரந்தரமானது. சமூகத்தை அரசியல் தரிசனமுடைய சமூகமாக அல்லது இலட்சியப்பாங்கான ஒரு சமூகமாக கட்டி எழுப்பும் போதே விழுமியங்களை உருவாக்க முடியும். உள்ளூர் தலைமை-த்துவங்களால்தான் ஒரு புதிய பண்பாட்டை கீழிருந்து மேல் நோக்கி உருவாக்க முடியும்.

எனவே உள்ளூர் தலைமைத்துவங்களை கட்டி எழுப்பாதவிடத்து கோஸ்டி மோதல்களையும் நிறுத்த முடியாது. பெண்பிள்ளைகளை ஆள் அரவமற்ற தெருக்களில் தனியாகச் செல்லவிடவும் முடியாது.

புங்குடு தீவில் வல்லன் கிராமத்துப் பெண்கள் ஓர்மமானவர்கள், நெஞ்சுரம்-மிக்கவர்கள் என்று ஓர் அபிப்பிராயம் உண்டு. வல்லன் கிராமத்து பெண்ணில் கை வைப்பதற்கு மற்றவர்கள் அச்சப்படும் ஒரு காலமும் இருந்தது. ஆனால் இப்பொழுது அக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை அக்கிராமத்தவர்களும் சேர்ந்து அவரது வீட்டில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் வைத்து சிதைத்துக் கொன்றுவிட்டார்கள். எமது கிராமங்கள் அவற்றின் அப்பாவித் தனத்தை இழந்துவிட்டன. அவற்றின் தனித்துவங்களை இழந்துவிட்டன

புங்குடுதீவைச் சேர்ந்த கவிஞர் வில்வரத்தினம் கூறுவார் "சாவிலும் ஒரு வாழ்விருந்தது எமது கிராமங்களுக்கு" என்று. ஆனால் இப்பொழுது?

– –நிலாந்தன்– –

- www.globaltamilnet -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. செங்கோ முக்கோணி ஒன்றிலே ஒரு கோணத்தின் பருமன் 40 பாகை எனின் மற்றைய கோணத்தின் பெறுமதி யாது?

02. 2, 4, 8, 16 .......... என்னும் தொடரில் 6ம் உறுப்பைக் காண்க.

03. $x+3=7$ எனின், $3x+9$ இன் பெறுமானம் யாது?

04. படகு ஒன்று கிழக்கு நோக்கி 55கி.மீ தூரம் சென்று பின்பு தெற்கு நோக்கி 30கிமீ சென்று ஒரு துறைமுகத்தை அடைந்தது. இதனை பருமட்டான படத்தில் குறிக்க. துறைமுகத்தில் இருந்து படகின் ஆரம்ப நிலையத்தின் திசைகோள் யாது?

05. ஒரு மாதத்திற்கு 18வீதம் ஆன கூட்டு வட்டிக்கு ரூ5000 தைக் கடனாகப் பெற்ற ஒருவர் இரண்டாம் மாதத்தில் கொடுக்கவேண்டிய வட்டி, முதல் மாதத்தில் கொடுக்க வேண்டிய வட்டியிலும் பார்க்க எவ்வளவினால் அதிகம்?

06. 1.25 மீற்றரைச் சென்றிமீற்றரில் தருக.

**பகுதி 02**

01. மோகன் சுய தொழிலுக்காகப் பாதணிகளை உற்பத்தி செய்கின்றான். பாதணிச் சோடி ஒன்றின் உற்பத்தி விலை ரூ500 ஆக இருக்கும் அதேவேளை அதன் மூலப்பொருள்களுக்கான செலவும் வேலைக் கூலிக்குமிடையே உள்ள விகிதம் 3 : 2 ஆகப் பிரிக்கப்படுகின்றது. அவர் அப்பாதணிச் சோடி ஒன்றை ரூ 625 இற்கு விற்கின்றார்.

1. பாதணிச் சோடி ஒன்றை உற்பத்திச் செய்கையில் மூலப் பொருள்களுக்கான செலவையும் வேலைக் கூலியையும் தனித்தனியாக காண்க.

2. பாதணிச்சோடி ஒன்றை விற்பதன் மூலம் மோகனிற்குக் கிடைக்கும் இலாபச் சதவீதத்தைக் காண்க.

## பாடம் : வரலாறு

1. மிகவும் நுண்மையான சரிவுள்ள கால்வாய்களை அமைப்பதற்கு பண்டைக் கால நுட்பர்கள் திறமையுள்ளவர்களாக இருந்தனர். என்பதை நிரூபிக்க எடுத்துக் காட்டக் கூடிய மிகச் சிறந்த உதாரணம் பின்வருவனவற்றுள் யாது?
   1. அம்பன் கங்கையிலிருந்து பராக்கிரம சமுத்திரத்திற்கு நீரைக் கொண்டு செல்லும் அங்கமெடில்லக் கால்வாய்
   2. கலாவாவியிலிருந்து அநுராதபுர தீசா வாவிக்கு நீரைக் கொண்டு செல்லும் யோதஎல
   3. அநுராதபுர ரன்மசு உயனிற்கு நீரைக் கொண்டு செல்லும் நீர் வழி
   4. குட்டம் பொக்குணாவிற்கு நீரைக் கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட நீர்ழி

2. கி.பி 6ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் உருவாகிய பதினாறு குடியிருப்புக்களில் குடியரசுகளாக அல்லது கண இராச்சியங்களாகக் கருதப்பட்ட இரு இராச்சியங்கள்
   1. மகத, கோசல ஆகியன  2. அவந்தி, வத்ச ஆகியன
   3. வஜ்ஜி, மல்ல ஆகியன  4. குரு, பாஞ்சாலம் ஆகியன

3. இலங்கையின் வடக்குப் பிரதேசத்தில் மிக ஒழுங்கமைந்த மிசனரிக் கல்வி முறை பின்வரும் எம்மிசனரிக் கம்பனியினால் உருவாக்கப்பட்டது?
   1. லண்டன் மிசன்  2. வெஸ்லியன் - மெதடிஸ்த மிசன்
   3. அமெரிக்கா மிசன்  4. பப்ரிஸ்ற் மிசன்

4. போர்த்துக்கேயர் தளபதி பெரோ லசர்த்தா தலைமையில் மாயாதுன்னை மற்றும் 1ம் இராசசிங்கனை எதிர்த்து நடத்திய யுத்தம்
   1. பலண  2. முல்லேரியா  3. தந்துரே  4. கன்னொருவ

5. அனுராதபுர யுகத்தின் போது உத்தியன் என்ற மன்னன் தொடர்படும் விகாரைத் தொகுதியானது
   1. அபயகிரிவிகாரைத் தொகுதி  2. தூபராம விகாரைத் தொகுதி
   3. மிகிந்தலை அம்பஸ்தல விகாரைத் தொகுதி
   4. ருவான் வெலிசாயா விகாரைத் தொகுதி

## பாடம் : விஞ்ஞானம்

01. தாவர வளர்ச்சியைத் தூண்டும் ஒரு ஓமோன் எது?
   1. இந்தோல் அசற்றிக் அமிலம்  2. குரோத் ஓமோன்
   3. பொஸ்போரிக் அமிலம்  4. போமிக்கமிலம்

02. தாவர இலைகளில் காணப்படும் சில இசைவாக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அ. அவிழ்ந்த இலை வாய்கள் இருத்தல்
ஆ. மிகவும் மெல்லிய புறத்தோல் இருத்தல்
இ. மேற்றோல் மயிர்கள் இருத்தல்.

இவற்றில் ஆவியுயிர்ப்பு வீதத்தை குறைப்பதற்கு உதவும் இசைவாக்கங்கள் யாவை?
   1. அ, ஆ ஆகியன மாத்திரம்  2. அ, இ ஆகியன மாத்திரம்
   3. ஆ, இ ஆகியன மாத்திரம  4. அ, ஆ, இ ஆகிய எல்லாம்

03. மனிதக் குருதியில் கூடிய சதவீதத்தில் இருக்கும் வெண்குருதிச் சிறு துணிக்கை வகை யாது?
   1. இயோசீனாடி  2. மூலநாடி  3. ஒற்றைக்குழியம்  4. நடுநிலைநாடி

04. ஒளியின் மூன்று அடிப்படை நிறங்களாக கருதப்படுவன யாவை?
   1. சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகியன
   2. சிவப்பு, பச்சை, நீலம் ஆகியன
   3. சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகியன
   4. நீலம், பச்சை, மஞ்சள் ஆகியன.

05. கண்ணுக்குள் புகும் ஒளியின் அளவைக் கண்ணில் இருக்கும் பின்வரும் எப்பகுதி ஆளுகின்றது?
   1. கண்மணி  2. பிசிர்தசை  3. வில்லை  4. கதிராளி

06. பின்வருவனற்றில் எது இறப்பர்ப்பால் திரட்சியடைதலைத் தடுப்பதற்குப் பிரயோகிக்கப்படும் திரட்சி நிரோதியாக அமைவதில்லை?
   1. அமோனியாக் கரைசல்  2. போமிக்கமிலம்
   3. சோடியம் சல்பேற்று  4. சோடியம் காபனேற்று

07. இறப்பர் பாலின் மீது பற்றீரியா தாக்கம் புரிதனால் துர்நாற்றம் உண்டாகின்றது. இந்நிலைமை ஏற்படுவதற்கு ஏதுவான பற்றீரியாத் தாக்கத்திற்குத் தகுந்த ஊடகத்தை உருவாக்குவது அதில் இருக்கும்,
   1. புரதம்  2. கொழுப்பு
   3. திரட்சி நிரோதி இரசாயனப் பொருள்
   4. இறப்பர் பாலிலுள்ள கழிவுப்பொருட்கள்

08. சுண்ணாம்புக்கல் சலவைக்கல், நீறாத சுண்ணாம்பு நீறிய சுண்ணாம்பு ஆகிய எல்லாவற்றிலும் இருக்கும் மூலகம் யாது?
   1. காபன்  2. கல்சியம்  3. ஐதரசன்  4. பொற்றாசியம்

09. பின்வரும் விலங்குகளுள் எதில் நான்கு இதயவறைகள் காணப்படும்?
   1. நண்டு  2. ஓணான்  3. எலி  4. மீன்

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் எழுத்தியல்

**குற்றியலிகரம்**

குறுகி ஒலிக்கும் இகரம் குற்றியலிகரமாகும். குற்றியலிகரத்தைக் கொண்ட சொல்லைத் தொடர்ந்து யகரத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் சொல் வந்து புணருமாயின் உகரம் இகரமாக திரிந்து குறைந்து ஒலிக்கும். இது குற்றியலிகரமாகும். இதற்கும் மாத்திரை ½ ஆகும்.

எடுத்துக்காட்டு - வண்டு + யாது = வண்டியாது
நாகு + யாது = நாகியாது
காடு + யாது = காடியாது

- தற்காலத்தில் குற்றியலிகரம் அருகியே காணப்படுகிறது.

**ஐகாரக் குறுக்கம்**

சொல்லின் முதலிலோ இடையிலோ ஈற்றிலோ வரும் ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து குறைந்தொலிப்பது ஐகாரக் குறுக்கம் ஆகும். இதற்குரிய மாத்திரை 1 ஆகும்.

எடுத்துக்காட்டு - முதலில் வருதல் - ஐயர் ஐப்பசி
இடையில் வருதல் - கலைஞர் அமைச்சர்.
ஈற்றில் வருதல் - வாழை பனை

- ஐகாரம் தனி எழுத்தாகவோ ஓரெழுத்தொரு மொழியாகவோ வரும் போது குறுகாது.

**ஔகாரக் குறுக்கம்.**

சொல்லின் முதலில் வரும் ஔகாரம் தன் மாத்திரையிலிருந்து குறைந்தொலிப்பது ஔகாரக் குறுக்கம் ஆகும்.

எடுத்துக்காட்டு - முதலில் வருதல் - ஔவையார், வௌவால், சௌகரியம்

- ஔகாரம் தனித்து ஒலிக்கும் போது குறுகாது.



தமிழ் இலக்கியத் தொகுப்பு
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Ex 01: ***Write questions with how long and when.***

1. It's raining.
   (how long?) <u>How long has it been raining?</u>
   (when?) <u>When did it start raining?</u>

2. Kate is learning Italian.
   (how long / learn?) ..........................................
   (When / start / learn?) ..........................................

3. I know Martin.
   (how long / know?) ..........................................
   (When / first / meet) ..........................................

4. Bob and Alice are married.
   (how long?) ..........................................
   (When?) ..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 22

01. ஈரமணலில் புதைத்து வைப்பதன் மூலம் பாதுகாக்கக்கூடிய உணவாக அமையாதது?
 i. கருவாடு ii. தோடம்பழம் iii. எலும்மிச்சம்பழம்
 iv. இஞ்சிக்கிழங்கு

02. அம்பாந்தோட்டை பிரதேசக்கடலில் கலக்கும் நதி?
 i. ஜின்கங்கை ii. வளவகங்கை iii. நிலவளகங்கை
 iv. மாணிக்ககங்கை

03. உலகத் தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவது?
 i. ஒக்டோபர் -1 ii. ஒக்டோபர் - 6 iii. மே – 1
 iv. மே – 15

04. பின்வரும் ஊடாகங்களுள் அச்சு ஊடகம் அல்லாதது?
 i. நூல்கள் ii. பத்திரிகை iii. அரங்கு iv. சுவரொட்டி

05. உறக்கத்திலிருந்து எழுந்தவுடன் தினமும் முதலில் செய்ய வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்று
 i. காலை உணவு உண்டு குளித்தல்
 ii. முகம் கழுவி பல் துலக்குதல்
 iii. பல்துலக்கி முகம் கழுவுதல்
 iv. தலையணை, படுக்கைவிரப்பு என்பவற்றை உரிய இடத்தில் வைத்தல்

06. சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களைச்சமமாகக் கலப்பதன் மூலம் கிடைக்கும் நிறம்?
 i. இளம் சிவப்பு ii. கடும்பச்சை iii. பச்சை iv. செம்மஞ்சள்

07. பின்வரும் நிறங்களுள் முதன்மை வர்ணம்
 i. நீலம் ii. மஞ்சள் iii. பச்சை iv. சிவப்பு

08. நாற்றுமேடை அமைத்தும் புதிய நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளும் தாவரக்கூட்டம்?
 i. புகையிலை, கத்தரி ii. வெண்டி, பாகல்
 iii. வெண்டி, கத்தரி iv. பாகல், புடோல்

09. கிராம சேவையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியாத ஓர்சேவை?
 i. நன்னடத்தைச் சான்றிதழ் பெறல்
 ii. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் பெறல்
 iii. அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல்
 iv. கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தல்

**பகுதி – 02**

01. பொருத்தமான மரபுச் சொல்லை எழுதுக
 i. மாவின் உள்ளீடு சதைபோல தோடையின் உள்ளீடு : ...............................................
 ii. ஆட்டிற்கு இடையன் எனின் யானைக்கு : ...............................................
 iii. மாட்டின் மலம் சாணம் என்பது போல யானையின் மலம் : ...............................................

02. பின்வரும் சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக
 I. வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன் : ...............................................
 ii. அரசன், ஆசிரியர், தந்தை, தாய், தமையன் ஆகியோர் : ...............................................
 iii. ஒருவர் முழுப்பொருளையும் தனித்து அனுபவித்தல் : ...............................................

03. சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லைத் தெரிந்து வெற்றிடத்தில் எழுதுக
 i. அவன் ................................ கொண்டு மரத்தைத் தறித்தான்
 (கோடாலி / கோடரி / கோடலி / கோரி)



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு





## வலிமையும் சாதுர்யமும்


சிங்கமும் கழுதைப்புலியும் பசுவைப் பிடித்து வைத்திருந்தன. ஒரு நாள் சிங்கம் பசுவைக் கொன்றது. கழுதைப்புலி தன் குட்டியை சிங்கத்திடம் அனுப்பி தன் பங்கைக் கேட்டது. கழுதைப்புலியின் பங்காக பசுவின் குடலை மட்டும் கொடுத்து அனுப்பியது சிங்கம்.

கழுதைப் புலியோ, "நீ ஏன் குடலைக் கொண்டு வந்தாய்? அரைவாசிப் பங்குதானே நமக்கு உரியது?" என்று கேட்டது.

குட்டி கழுதைப்புலி சொல்லியது: நான் சின்னப்பயல். பெரியவர்கள் கொடுப்பதைத்தான் கொண்டு வர முடியும். நான் எப்படி சிங்கத்தோடு விவாதிக்க முடியும்".

அதைக்கேட்டு கோபமான கழுதைப்புலி அந்தக் குடலோடு சிங்கத்தைப் பார்க்கப் போனது. சிங்கம் உணவை உண்டு குகைக்குள் ஓய்வெடுத்துக் கோண்டிருந்தது. கழுதைப்புலி வந்ததைக் கண்டு கண்களை அச்சமூட்டும் வகையில் வைத்திருந்தது. "ஏன் இங்கே வந்தாய்?" - கர்ஜித்தபடி சிங்கம் கேட்டது.

பசுவில் பாதி கேட்க வந்த



கழுதைப்புலி தற்போது தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு பேசியது: "ராஜ சிங்கமே! நீங்கள் குடல் அனுப்பியதற்கு மிக்க நன்றி, ஆனால் அதனை உங்களிடமே சேர்க்க முடிவு செய்து விட்டோம்".

குடலை சிங்கத்திடம் கொடுத்து விட்டு திரும்பிய கழுதைப்புலியிடம் குட்டி கேட்டது: "பசுவில் பாதி கேட்கப்போன நீங்கள் குடலையும் கொடுத்து விட்டு வருகிறீர்களே?"


"மகனே! சிங்கம் மிகக் கொடூரமாக இருந்தது. அதைக்கண்டு நடுங்கி விட்டேன். எனவே எனது பங்கையும் கொடுத்துவிட்டுப் பாராட்டி விட்டு வந்தேன். எல்லாம் நன்மைக்காக" என்றது தாய் கழுதைப்புலி.

**- எம்மைவிட பலசாலிகளுக்கு விட்டுக் கொடுத்து செல்வதே சாலச் சிறந்தது -**

*லாவண்யா.மா*
*தரம் - 08.*



*கு.தனகேசினி*
*தரம் - 04*



**சிந்திக்க ...**

நீ சுமக்கின்ற நம்பிக்கை
நீ கீழே விழும் போது
உன்னை சுமக்கும்...

## பாடவா!

தம்பியோடும் தங்கை வா,
 தமிழில் பாட்டு பாட வா!
அம்புலியில் மூத்த நம்
 அழகு தமிழ் பாட வா!

குயிலைப் போலப் பாடவா,
 கூடிச் சேர்ந்து பாடவா!
மயிலைப் போல ஆடவா,
 மானைப் போல துள்ளிவா!

பத்துப்பாட்டைக் கொண்ட நம்
 பைந்தமிழைப் பாட வா!
முத்துப் போல மூன்றுள
 மூத்த தமிழ் பாடவா!

காட்டு விலங்கறியுமாம்
 கைக்குழந்தை யறியுமாம்!
பாட்டைப் பாம்பு மறியுமாம்!
 பாரதியார் சொல்கிறார்!

தாமரைத்தீவான்
சச்சந்திவு- கிண்ணியா

## பொது அறிவு – 24

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. உலக பணக்காரர் வீடுகளில் யாருடைய வீடு மிகவும் பெறுமதியானது?
 முகேஷ் அம்பானி

02. கொள்கை வட்டி வீதத்தின் தற்போதைய பெயர் யாது?
 துணைநில் வீத வீச்சு

03. ஆடைக் கைத்தொழில் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் சராசரி வருமானம் எவ்வளவு?
 $ 4.5 பில்லியன்


04. நேபாள நாடாளுமன்றத்தில் பேசிய இரண்டாவது வெளிநாட்டுத் தலைவர் என்ற பெருமையை பெறுபவர் யார்?
 நரேந்திர மோடி

05. 2014இல் 7 ஒஸ்கார் விருது பெற்ற திரைப்படம்? கிரேவிற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சிகை வெளியீட்டு விழா

நிலாவெளி றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த சஞ்சிகை "முகிழ்ப்பு" வெளியீட்டுவிழா 14.05.2015 அன்று பாடசாலையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக வலயக்-கல்விப் பணிப்பாளர் திரு.ந.விஜேந்திரன் அவர்களும், கௌரவ விருந்தினராக திரு கோ.செல்வநாயகம் அவர்களும், சிறப்புவிருந்தினராக நிலாவெளி புனிதவளனார் பங்குத்தந்தை அருட்தந்தை பா.ஜெயபாலன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.








## பாலையூற்று லூர்து மாதா - திருவிழா

பாலையூற்றில் அமைந்துள்ள சிறப்புமிக்க ஆலயமான லூர்து மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 22.05.2015 அன்று ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து பத்து நாட்கள் பூசைப்பலிகளில் இன்று சனிக்கிழமை மாலை சுற்றுப்பிரகாரம் இடம்பெறும். அத்துடன் நாளை 31.05.2015 (ஞாயிற்றுக்கிழமை) அன்று கொடியிறக்கம் இடம்பெறவுள்ளது. அருட்தந்தை மதுராங்கன் குரூஸ் அவர்களின் தலைமையின் கீழ் இவ்வாலய திருவிழா சிறப்புற நடைபெறுகின்றது.

நாளை மாலை மன்னா எனும் இசைத்தட்டு வெளியீட்டுடன் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறள்ளன.



ரஞ்சன்

## புத்தாண்டு கொண்டாட்டம்

2015 ம் ஆண்டின் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் கடந்த 07.05.2015 வியாழக் கிழமை அன்று ஞானசேகரா முன்பள்ளியனரால் கொண்டாடப்பட்டது . அவ்-விழாவினை முன்பள்ளியின் பிரதம ஆசிரியரான செல்வி.க.சிவனேஸ்வரி அவர்கள் தனது தலைமையின் கீழ் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின் போது பல்வேறு வகையான விளையாட்டுக்களும், பாடல்களும் இடம்பெற்றன. அத்துடன் மாணவர்கள் அனைவருக்கும் உணப் பொருட்கள் வழங்கப்பட்டன.



# இலங்கையின் ஆங்கில கல்வியும் அதன் சாத்தியமும்

இலங்கையை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்தனர் என்பது நாம் அறிந்த விடயமே. ஆங்கிலேயரால் ஆட்சிக்காலத்தில் மதத்தையும், ஆங்கில அறிவையும் பரப்புவதற்காக அன்று மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயம் ஆங்கிலம் கற்றோருக்கும், கிறிஸ்தவ மதத்தவர்களுக்கும் மாத்திரமே அரச பதவிகள் வழங்கப்பட்டு வந்தது. அதன் காரணத்தால் பலர் ஆங்கிலக்கல்வியையே அன்று கற்று பதவிகளை பெற்றுக் கொண்டனர். அதன் பின் அச்சூழல் மாறி தாய்மொழிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வந்தது.

இன்று இலங்கையை எடுத்து கொள்வோமாயின் எங்கும் ஆங்கிலக்கல்வி மோகமாகவே உள்ளது. பிள்ளைகள் பிறக்க முன்பே தமது பிள்ளைகளுக்கு வைக்கப்படும் பெயர்களில் இருந்து எவ்வாறு கற்பிக்கப்போகின்றோம் என திட்டமிட ஆரம்பித்து விடுகின்றார்கள். இதனை பிள்ளைகளின் பெயர்களில் இருந்து அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

நாம் கற்கும் காலங்களில் முன்பள்ளி என்பதில் விளையாட்டுக்கள், பாட்டுக்கள் மாத்திரமே இருந்தன. அதன் பின் தாய்மொழிக்கு முக்கியம் கொடுக்கப்பட்டு வந்த போதும் தற்காலத்தில் உலகமயமாக்கல் என்ற பதத்தின் அடிப்படையில் சர்வதேச மொழியான ஆங்கிலத்திற்கே முன்னுரிமையளிக்கப்பட்டு வருகின்றது. ஏனெனில் "ஆங்கிலம் இல்லையேல் எதிர்காலம் இல்லை." என்ற கருப்பொருள் எல்லோர் மனதிலும் உணர்த்தப்படுவதுடன் மக்களின் உலக நாடுகளை நோக்கிய நகர்விற்கும் ஆங்கில மொழி தேவைப்படுகிறது.

இன்று இரண்டு வயது சிறார்களும் Early Learning English என்று கற்க ஆரம்பிக்கத் தொடங்கி கலாநிதி பட்டம் பெறும் வரை ஆங்கிலத்திலேயே கற்க வேண்டிய தேவை உருவாகியுள்ளது. இதற்காக இலங்கையில் எங்கு பார்த்தாலும் International School கள் மூலைக்கு மூலை நாளாந்தம் முளைத்து கொண்டே தான் இருக்கிறன. அவர்களின் பிரதான நோக்கம் வேறாக இருந்தாலும் அடையும் இலக்கு என்னவோ ஆங்கிலக்கல்வியே ஆகும். இதற்காக பல உத்திகளையும் சந்தைப்படுத்தல் உபாயங்களையும் இலாபகரமாக செய்து வருகின்றனர் என்று சொன்னால் அது மிகையாகாது.

கொழும்பு நகரில் ஆரம்பத்தில் பல வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டது. இன்று அது ஏனைய நகரங்களுக்கும் பரவலாக்கப்பட்டுள்ளது. இதனால் அனைவரும் ஆங்கிலக் கல்வியை விரும்பிக் கற்கின்றனர். எனினும் ஆங்கிலக்கல்வி கிராமங்களுக்கு பரவலாக்கப்படவில்லை என்பது பாரிய இழப்பாகும் என்பதுடன் எமது நாட்டில் ஆங்கிலக்கல்வி வளர்ச்சியடைவதற்கு சகல பாடசாலைகளிலும் பயிற்றப்பட்ட ஆங்கிலகல்வி ஆசிரியர்கள் கட்டாயமாக நியமிக்கப்பட வேண்டும். 2015 ஏப்ரல் மாதம் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தின்படி ஆரம்ப பிரிவு பாடசாலைகளில் ஒரு ஆங்கில ஆசிரியர் கட்டாயமாக நியமிக்கப்படு-வதுடன் 1200 மாணவர்களுக்கு மேலாயின் 4 ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பாடசாலைகளில் மட்டுமன்றி அரச பாடசாலைகளிலும் ஆங்கிலக்கல்விக்கு முக்கியம் கொடுக்கப்பட்டு வருவதும் நாம் அறிந்ததே. இருந்தும் அது பெரிதாக வெற்றியளித்ததாக தெரியவில்லை. இதற்கு பிரதான காரணம் வளப்பற்றாக்குறை ஒரு பெரிய நெருக்கடியாகும் என்பதும் குறிபிடத்தக்கது.

எத்தனையோ "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற குறளிற்கு அமைய சர்வதேச பாடசாலைகள் எவ்வளவு அதிகரித்துள்ளதோ அதே போன்று தற்கால சமாதான சூழலில் தனியார் நிறுவனங்களும் தேசிய ரீதியில் ஸ்தாபிக்கப்பட்டு வருவதும் யாவரும் அறிந்ததே. இன்று பெரும்பா-ன்மையானோர் தனியார் நிறுவனங்களில் வேலை செய்வதை கௌரவமாகவும் உயர்வாகவும் நினைக்கின்றனர். அதற்கு பல காரணங்களை கூறிக்கொண்டே போகலாம். விசேடமாக அதிக சம்பளமும் கவர்ச்சியான ஆங்கில மோக ஆடைகளும் வழங்கப்படுகிறது. எனினும் தனியார் நிறுவனங்களில் ஆட்சேர்க்கும் போது ஆங்கில அறிவிற்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இன்று ஆங்கிலம் கற்பது என்பது ஒரு பெரிய விடயமாக தென்படுவதில்லை. ஏனெனின் தனியார் ஆங்கில கற்கை நிறுவனங்கள் பல இலகு நுட்பங்களை பிரயோகித்து விரைவானதும் தரமானதுமான முறையில் ஆங்கில அறிவை புகட்டுகின்றனர். இதற்கு கணனி தொழில்நுட்ப அறிவும் உலகமயமாக்கல்




மக்கள் முரசு

கொள்கையும் ஒரு முக்கிய காரணமாகும். இன்றைய உலகில் கணனி மயமாக்கலில் போட்டி போடுவதாயின் ஆங்கில கல்வி கட்டாயம் என்பதுடன் நாட்டிற்கு மிகவும் பொருத்தமானதாகும். இவற்றில் பல பாதகங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஏன் நாம் நல்லதை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

பல்கலைகழகங்களில் தாய்மொழியில் கல்வி கற்க முடிந்த போதும் தற்போது பரவலாக சகல உயர்கல்விகளும் ஆங்கிலத்திலையே நடைபெற்று வருகிறன. இதனால் மொழிப் பிரச்சனை தீர்க்கப்பட்டு எல்வோரும் ஒன்றாக கல்வி பயிலும் சூழலால் சமூக ஒற்றுமைக்கும் ஒரு பாலமாக அமைகிறது. அதே வேளை பட்டப்படிப்புக்களை வெளிநாட்டு பல்கலைகழகங்களிலும் மேற்கொள்வதற்கு வாய்ப்புகளாக அமைகின்றன.

ஆங்கிலக் கல்வியின் சந்தைப்படுத்தும் உபாயங்களாக தேசிய ரீதியில் போட்டிகள், பரீட்சைகள் வைக்கப்பட்டு புள்ளிகள், சான்றிதழ்கள், பதக்கங்கள், கேடயங்கள் வழங்குவதுடன் கூடிய புள்ளிகளை பெறுவோருக்கு அடுத்த கல்வி இலவசமாகவோ, குறித்த கழிவிலோ தொடர்வதற்கு ஊக்கப்படுத்தப்படுகின்றது. அதே போன்று சர்வதேச கல்வியை பெறுவதற்கும் புலமைப்பரிசில் கல்வி கற்பதற்கும் இது பெரிதும் வழிவகுக்கின்றது என்று சொன்னால் யாராலும் மறுக்க முடியாது என்பதுடன் தனியார் ஆங்கில கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு பல வெளிநாட்டு புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கு தனியார் ஆங்கிலக்கல்வி நிறுவனங்கள் வெகுவாக ஆர்வம் காட்டுவதிலும் முன்னெடுத்துச் செல்வதிலும் முன்னணியில் நிற்கின்றன. இவர்கள் தங்கள் பணியை மேலும் மேலும் வலுப்படுத்தி கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு தெரிந்தோ தெரியாமலோ அவர்கள் தலை மேல் வைக்கப்பட்டுள்ளது. இதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பு மிக ஏதுவாக எதிர்பார்க்கப்படுவதுடன் அதை உடையாமல் கொண்டு செல்வதே ஆங்கிலக்கல்வியின் சிறப்பாகும். இதே வேளை ஆங்கில கல்விக்கு முன்னுரிமையளிக்கும் பெற்றோர்கள் தமிழ்மொழியிலும் அக்கறை காட்டப்பட வேண்டும் என்பது திண்மமாகும்.

**அ.சர்வேஸ்வரன்**
**எம்.பி.ஏ மாணவர்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூர் காணி....

மீண்டும் இழுபறிநிலையை அடைந்துள்ளதையடுத்து இன்று முதல் விடுவிக்கப்பட்டதாக கூறப்படும் காணிக்குள் மக்கள் செல்வதை காவல்துறை தடுத்துள்ளது.

சம்பூர் காணிகளை மக்களிடம் கையளிக்கும் வர்த்தமானி அறிவித்தல் மீதான இடைக்காலத் தடையை உச்சநீதிமன்றம் தொடர்வதில்லை என்ற முடிவை அறிவித்ததுடன் மக்கள் மீளவும் குடியேறலாம் என்ற மாயை தோற்றுவிக்கப்பட்டது.

எனினும் மக்கள் மீள்குடியேறுவது தொடர்பாக காணிகளை ஒப்பந்தம் ஊடாகப் பெற்றுக் கொண்ட கேட்வே நிறுவனம் மீண்டும் ஒரு மனுவை தாக்கல் செய்ததை அடுத்து நீதியரசர் ஸ்ரீபவன் அம்மனு மீதான விசாரணைச் செய்துள்ளார். அவ்விசாரணை முடிவில் "ஜூன் 15ஆம் திகதிவரை இந்த விடயத்தில் வழக்குடன் தொடர்புடைய தரப்புக்கள், முன்னைய நிலைமையை கடைபிடிக்க வேண்டும் (அதாவது இந்த வழக்கில் இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை என்ற நிலைப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும்) என அறிவித்திருந்ததை மீறியுள்ளவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கினைத் தொடர முடியும்" என்ற தீர்ப்பை வெளியிட்டு-ள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனையடுத்து மக்கள் குறித்த காணிக்கு திரும்புவதை காவல்துறை தடைசெய்துள்ளது.

இதேவேளை வெட்டிய பற்றைகளை கொழுத்திய போது கேட்வே கம்பனியின் இரு கொள்கல இருப்பிடங்களுக்கு மின்விநியோகம் செய்த மின்வடங்கள் தீயில் எரிந்ததாக உரிய கம்பனி முறைப்பாடொன்றையும் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கிற்கு...

பெருமை சேர்த்துள்ளார்.

தேசிய கனிட்ட மெய்வல்லுனர் மோட்டிகள் அண்மையில் தியகமவில் உள்ள மகிந்த ராசபக்ச விளையாட்டரங்கில் நடந்தேறியது.

அப்போட்டிகளின் கனிட்ட பிரிவில் குண்டெறிதல் போட்டியில் நுஸ்ரத்பானு 8.36 மீற்றர் தூரத்திற்குக் குண்டெறிந்து வெண்கலப் பதக்கமொன்றை வென்றுள்ளார்.

இவ்வாண்டில் கிழக்கு மாகாணத்திற்காக கனிட்ட பிரிவில் வெல்லப்பட்ட ஒரேயொரு தேசிய பதக்கமாக இப்பதக்கம் உள்ளதை அவரது பயிற்சியாளர் திரு. உமாசுதன் தெரிவித்தார்.

தனது தடகள மாணவியின் பெறுபேறு தொடர்பாக அவர் கருத்தைத் தெரிவிக்கையில் சராசரியாக 7.11 மீற்றர் தூரத்திற்கு குண்டெறியும் ஆற்றலைக் கொண்டிருந்த இம் மாணவி கிரமமான பயிற்சியின் பேறாகவே 8.36 மீற்றர்கள் தூரத்திற்கு குண்டெறியும் ஆற்றலை வளர்த்துக் கொண்டிருந்தார் என்று குறிப்பிட்டார்.

திருகோணமலை ஸ்ரீசண்முகா பெண்கள் கல்லூரியின் மாணவியான இவரின் பெறுபேற்றை அப்பாடசாலை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் என நம்பிக்கை தெரிவித்துள்ள விளையாட்டு ஆர்வலர்கள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சும் இப்பெறுபேற்றை ஊக்குவிக்கும் என நம்புவதாகவும் தெரிவித்தனர்.

## தொண்டர் ஆசி....

தகவல் அளிக்கப்பட்டுள்ளதாக தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் திருமலைத் தலைவர் இரா.ஜெயமோகன் தெரிவித்துள்ளார்.

இச்சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் எதிர்வரும் 03.06.2015 முதல் கிழக்கின் ஆளுனர் செயலகத்திற்கு முன்பாகத் தாம் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளதையும் அப்போராட்டமானது தமக்கு நியமனம் வழங்கப்படும் வரை தொடரும் என்றும் தெரிவித்தார்.

தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்குவது தொடர்பாக கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் தற்போது வரை 4 தடவைகள் ஷாபிஸ் நஸீர் அகமட்டை சந்தித்ததுள்ளதாக கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்தினர் ஒவ்வொரு தடவையும் மாகாணக்கல்வி அமைச்சின் ஊடாக நியமனம் வழங்க உறுதிமொழிகளையே பெற்றுக் கொண்டதாக தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் திருகோணமலை தலைவர் ஜெயமோகன் தெரிவித்தார்.

மார்ச் மாதம் நாம் முதலமைச்சர் காரியாலயத்திறகு முன்பாக நடத்திய போராட்டத்தின் போது முதலமைச்சரும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சரான துரைராஜசிங்கமும் ஒரு மாதத்திற்குள் நியமனம் வழங்கப்படும் என உறுதியளித்தனர்.

அதையடுத்து நியமனம் வழங்குவதாக கூறி தகவல்களை திரட்டித் தருமாறு கோரினர். அதையும் செய்து ஏப்ரல் மாதம் அவர்களிடம் கையளித்தோம். ஆனால் கடந்த புதன் கிழமை முதலமைச்சரை சந்தித்த போது மேலும் இரண்டுவார கால அவகாசம் கேட்கின்றார். எமது விடயம் தொடர்பாக கல்வி அமைச்சரை சந்திப்பதால் பயன் ஏதுமில்லை எனத்தெரிவித்த ஜெயமோகன் போராட்டத்தைச் சுழற்சிமுறையில் முன்னெடுக்கப்போவதை உறுதிப்-படுத்தினார்

## ஆணைக்குழுவிற்கு....

நடத்தப்பட்ட அமர்வுகளின்போது சுமார் 2300 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

ஆணைக்குழுவிற்கு கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி வரை 16,179 முறைப்பாடுகள் முன்வைக்கப் பட்டுள்ளன. அவற்றுள் ஐந்தாயிரம் பாதுகாப்புத் தரப்பில் காணாமற் போனவர்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் ஆகும்

பதிவுசெய்யப்பட்டுள்ள சாட்சியங்-களை ஆராய்ந்து அவற்றுக்கான சட்ட நடவடிக்கைகளை குறித்து பரிந்துரை-களுடன் கூடிய அறிக்கையொன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கவுள்ள தாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## வாகரையில் ....

பிரதம ஆசிரியரும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கடந்த 26ம் திகதி நடைபெற்ற இக்கலந்துரையாடலில் காணிகளை மீட்பது தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

போரினால் இம்மக்கள் இடம்பெயர்ந்த போது கையகப்படுத்தப்பட்ட மேற்படி காணிகளின் உரிமையை அப்போதிருந்த சூழலில் அச்சத்தின் காரணமாக இராணுவத்தினருக்கு வழங்கித் தாம் ஒப்புக்கொண்டதாக மக்கள் சந்திப்பின் போது தெரிவித்தனர். ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதங்களில் தாம் கையெழுத்திட நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

காணிகளை மக்களுக்கு மீட்டுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மக்களும் தமிழ் தேசிய முன்னனியும் இணைந்து மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## எங்களைத்....

சந்தித்த போதே இந்த ஆதங்கத்தை மக்கள் வெளிப்படுத்தினார்கள்.

"நாங்கள் இன்று கையறு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இடைநடுவில் நிற்கின்றோம். கடந்த சில நாட்களாக கடுமையான வெய்யிலையும் பொருட்-படுத்தாது எமது காணியில் வளர்ந்திருந்த பற்றைகளைச் சுத்தம் செய்தோம். ஆனால் நாம் நாளை முதல் மீண்டும் பல நாட்களுக்கு எமது காணிகளுக்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவு தொடர்பாக ஏன் எங்களுக்குத் தெளிவான விளக்கம் தரப்படவில்லை? உண்மையான நிலையை எமக்குத் தெரியப்படுத்தியிருந்தால் நாங்கள் இன்று இடைநடுவில் நிற்கவேண்டிய தேவை இருந்திருக்காது'' என அம்மக்கள் பெரும் கவலையுடன் தமது நிலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

## காணாமற் போன...

எனினும் அவர்கள் வாங்கி விற்ற படகு எந்திரங்களில் களவு போன எந்திரங்களும் இருந்ததாக எழுந்த சந்தேகத்தை அடுத்து அவர்கள் குச்சவெளிக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்தமை பின்னர் தெரியவந்துள்ளது.

## ஊடகவியலாளர் சங்க...

நேயம் பத்திரிகை மூலம் செய்தியாளராக ஊடகத்துறையில் பிரவேசித்தார். தற்பொழுது சுடர்ஒளி பன்குளம் செய்தியாளராகவும் தமிழ் சி என்,என் இணையத்தளத்தின் திருகோணமலை செய்தியாளராக கடமையாற்றிவரும் இவர் கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் செயற்படுவதுகுறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்க நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 50வது....

வந்தனைக்குரிய கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் வருகை தரவிருப்பதைத் தெரிவித்த பங்குத் தந்தை அவர்கள் அன்றைய மாலைப் பொழுதில் விசேட பூசைகளும் கலைநிகழ்வுகளும் இடம் பெறும் எனவும் தெரிவித்தார்.

மாலைப் பொழுதுப் பூசைகள் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் பூசையாக அமையவுள்ளதுடன் அதிதிகளுக்கு இராப்போசனமும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்-பட்டுள்ளன.

மாலை 6 மணிக்குக் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகும் எனத் தெரிகின்றது.

## இறால்குழி....

இறால்குழி மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்றதை அடுத்து இம்முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

2009ம் ஆண்டின் பின்னர் உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதி உருவாக்கப்பட்ட போது இறால்குழி கிராமத்திற்கு சொந்தமான காணிகள் துண்டாடப்பட்டன.

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் போது வலப்புறமாகத் துண்டாடப்பட்ட இறால்குழி மக்களுக்கு சொந்தமான காணியே தற்போது நிலஅளவை செய்யப்பட்டு வேறு இன மக்களுக்கு குடியேற வழங்கப்பட போவதாக கிராமத்திலிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துண்டாடப்பட்ட இக்காணிகளுக்கு நில அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்த தமிழர்கள் இறால்குழி கிராமத்தில் இருப்பதாக தெரிகின்றது. இவ்விடயம் தொடர்பான திணைக்கள தகவல்களை பெற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

## கிழக்கு மாகாண சபையி...

அக்காலத்தில் கொள்வனவு மற்றும் விற்பனை விலைகள் தொடர்பாகவும் சங்கமே தீர்மானங்களை மேற்கொண்டி ருந்தது.

எனினும் சாதாரண சூழ்நிலை உருவாகியவுடன் பலலட்சங்களைக் கொடுத்து தனியார் கள்ளு விற்பனை உரிமத்தைத் தமதாக்கிக் கொண்டு-ள்ளதுடன் கட்டுப்பாட்டு விலைகளையும் தகர்த்து எறிந்துள்ளனர்.

தற்போது 750 மில்லிலீற்றர் கள்ளுக்கான கொள்வனவு விலை வெறும் 40 ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் விற்பனை விலை ரூபா 80ற்கு மேலாக உள்ளது.

அத்துடன் உற்பத்தியாளர் ஒருவரிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் கள்ளின் அளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் கள்ளை நிலத்தில் ஊற்ற வேண்டிய நிலைக்கு உற்பத்தியாளர்கள் தள்ளப் பட்டள்ளனர்.

இவ்விடயங்களை முன்நிறுத்திக் கிழக்கு மாகாணசபையில் விவசாய அமைச்சரால் கொண்டுவரப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட பிரேரணைக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி தமக்குத் தெரியாதென சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடனும் அடகு வைத்தலும்




நாம் நமக்குத் தேவையான பணத்தை அல்லது ஒரு பொருளை ஒருவரிடமிருந்து கடனாகப் பெறும்போது அதற்கு நம்பகமாக நாம் ஏதேனும் ஒன்றை கடன் தருபவருக்குக் கொடுத்து வைப்பதையே அடமானம் அல்லது ஈடுவைத்தல் எனக் கூறப்படும்.

கடன் தருபவர் நேரடியாக சாட்சிகளை நியமித்து எழுத்துபூர்வமாக எழுதி வைத்துக் கொண்டும் தரலாம். அல்லது கொடுக்கும் கடனுக்கு பெறுமதியான ஒரு பொருளை வாங்கி வைத்துக் கொண்டும் கடன் தரலாம்.

கொடுக்கப்படும் கடனுக்கு நம்பகத் தன்மையை ஏற்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும். இந்நோக்கத்தின் மூலம் கடன் கொடுப்பவர் மற்றும் எடுப்பவருக்கிடையே அன்பையும் சிறந்த உறவையும் கட்டியெழுப்பவே இஸ்லாம் முனைகிறது.

இதற்கு மாற்றமாக அடகு வைக்கப்படும் பொருளுக்கு வட்டியை அறவிடுவதை இஸ்லாம் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. இன்று பெரும்பாலும் அடகு வைக்கப்படும் நிலையங்களுக்குச் சென்று மக்கள் தங்களது பெறுமதியான நகைகளை அல்லது வீட்டுப் பத்திரங்களை அடகு வத்து வட்டிக்குக் கடன் பெறுகிறார்கள்.

குறித்த தவணையில் அந்த வட்டியை செலுத்தி நகைகளை மீட்க முடியாது போனால் நகைகள் அருதியாகி விட்டது, அதாவது அந்த வட்டிக்கு நகைகள் பறிமுதல் செய்யப்பட்டு விட்டது என்று கூறுகிறார்கள்.

ஒருவர் 10,000 ரூபா தேவை என்பதற்காக 30,000 பெறுமதியான நகைகளை அடகு வத்து 10,000 ரூபா பணத்தைக் கடனாகப் பெறுகிறார் என்றால், அதற்கு 10 வீதம் வட்டி

தொடரும் .. ..


– இம்தியாஸ் யூஸுப் –




# சோயா கட்லட்

**தேவையான பொருட்கள்**

சோயாமாவு - 50 கிராம், எலுமிச்சை சாறு - ½ தே.கரண்டி, மஞ்சள்பொடி - ¼ தே.கரண்டி, உப்பு - தேவைக்கேற்ப, அரிசி மாவு - 2 தே.கரண்டி, உருளைக்கிழங்கு – 2, வெங்காயம் - 1, கரட் - 1, இஞ்சி, பூண்டு - 1 தே.கரண்டி, கரம் மசாலா - ½ தே.கரண்டி, எண்ணெய் - 75 கிராம், கொத்துமல்லி - சிறிதளவு



**செய்முறை**

உருளை, கரட் இவற்றை வேக வைத்து மசித்துக் கொள்ளவும், எண்ணெயை தாச்சியில் விட்டு பொடிப்பொடியாக நறுக்கிய வெங்காயம், பச்சைமிளகாய் இவற்றைப் போட்டு வதக்கி அதனுடன் உருளை, காரட், மஞ்சள், உப்பு, இஞ்சி, பூண்டு

சேர்த்து வதக்கிய பின் பாதி சோயாமாவு, அரிசி மாவு சேர்த்துக் கலந்து திக்கானவுடன் இறக்கிக் கொள்ளவும். நன்றாக ஆறியபின் எலுமிச்சை சாறு சேர்த்து பின் மற்ற சோயா, அரிசி மாவை உப்பு கலந்து ரெடியாக தட்டில் வைத்துக் கொள்ளவும். கட்லெட் செய்ததை மாவில் போட்டு புரட்டி (உருட்டி) எடுத்து தாச்சியில் சிறிது எண்ணெயில் பொரித்து எடுக்க ருசியாக இருக்கும்.

# பாலைக் கொண்டு பட்டு சருமம் பெறுவோமா??

அழகு குறிப்பு

பாலில் பல சத்துக்கள் இருப்பதால், அவற்றை சருமத்திற்கு பயன்படுத்தும் போது சருமம் மென்மையாகவும், ஈரப்பதமுள்ளதாகவும் இருக்கிறது.



**பட்டுப்போன்ற சருமம் பெற சில டிப்ஸ்:**

2 மே.கரண்டி பால், 1 மே.கரண்டி மஞ்சள் தூள் மற்றும் 1 மே.கரண்டி எலுமிச்சை சாற்றை விட்டு கலந்து, முகம் மற்றும் கழுத்திற்கு தடவி, 20 நிமிடம் ஊற வைத்து, பின் சுத்தமான நீரால் கழுவ வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள இறந்த செல்களும் வெளியேறிவிடும்.

பாதாமை பாலுடன் சேர்த்து அரைத்து, சிறிது ஆலிவ் ஆயிலை விட்டு, பேஸ்ட் போல் செய்து கொள்ள வேண்டும். பின் அதில் ஆரஞ்சு தோலை அரைத்து, அதனுடன் கலந்து, முகம் மற்றும் கழுத்திற்கு தடவி, 20 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். பிறகு ஐஸ் கட்டிகளால் 3 நிமிடம் ஒத்தடம் கொடுக்க வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள தூசிகள் நீங்கி, சருமம் நன்கு பொலிவோடு காணப்படும்.

கொதிக்க வைத்துள்ள பாலை ஓரளவு ஆற வைத்து, காட்டன் துணியால் முகத்திற்கு 5 நிமிடம் தேய்க்க வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள அழுக்குகள் போவதோடு, சருமம் நன்கு அழகாகக் காணப்படும். இதனை தினமும் செய்து வந்தால், சருமம் நன்கு பளிச்சென்று சுத்தமாக காணப்படும்.

சரும வறட்சியை நீக்குவதற்கு, வாழைப்பழத்தை நன்கு மசித்து, பால் மற்றும் தேனுடன் கலந்து, முகத்திற்கு தடவி காய வைக்க வேண்டும். காய்ந்ததும், சிறிது பாலை தொட்டு, அதன் மேல் தேய்த்து மசாஜ் செய்து, பிறகு கழுவ வேண்டும்.

# கத்தோலிக்கம் ஒரு மேலோட்டம்

கடந்தவார தொடர்ச்சி .. ..



விண்ணரசின் திறவுகோல்களை உன் கையில் கொடுப்பேன் என்கிறார் இயேசு. பீட்டரைத் தொடர்ந்து வருபவர்கள் போப் எனப்படும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர்கள்.

யூத மதக் குருக்கள் இயேசுவை தெய்வ நிந்தனை (Plasphemy) செய்பவன் எனச் சொல்லி அவரை சிலுவையில் அறைந்து கொல்லும்படி உராமை (Rome) அரசை வலியுறுத்தி அதில் வெற்றி பெறுகின்றனர். சிலுவையில் அகால மரணமைடைந்த இயேசு மூன்றாவது நாள் உயிர்த்தெழுந்து சீடர்களுக்குத் தோன்றுகிறார். நாற்பதாவது நாள் "உலகெங்கும் போய் என் நற்செய்தியை அறிவியுங்கள்" எனச் சொல்லிவிட்டு வானகம் செல்கிறார். இவை அனைத்தும் மத்தேயு, லூக், மாற்கு மற்றும் ஜான் எழுதிய நற்செய்திகள் எனப்படும் Gospel களிலிருந்து பெறப்படும் விவரங்கள்.


இதற்குப்பின் அவரின் சீடர்கள் ஊர் ஊராகத்திரிந்து பல யூதர்களிடமும் யூதரல்லாதவர்களிடமும் இயேசுவின் போதனைகளை பரப்புகிறார்கள். பொது வழிபாடு என எதுவும் இல்லை எனினும், ஆதி கிறித்தவர்கள் தங்களது சொத்துக்களைக் கூட பொதுவில் வைத்து ஒன்றாய் வாழ்ந்ததாக "அப்போஸ்தலர் பணி" எனும் விவிலிய புத்தகம் சொல்கிறது. கிறித்துவ மதம், முழுவதுமாய் உருப்பெறாத இந்த நாட்களில் பல பிரிவினைகளும் கருத்து வேறுபாடுகளும் இருந்து வந்தன. கி. பி 50ல் ஒரு சங்கமமைத்து பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்த கால கட்டத்தில் புனித பால் கவனிக்கத்தக்கவராகிறார். பால் கிறித்தவர்களை கொன்றுபோடச் செல்லும் படைத் தளபதி. வழியில் அவருக்கு ஒரு தெய்வீகக் காட்சி கிடைக்கிறது.

தொடரும் .. ..

www.tamiloviam.com

# மூளைக் கட்டிகள்




மனித மூளையில் வளரும் அணுக்களின் வளர்ச்சி அசாதாரணமாக இருக்கும் நிலையே மூளை கட்டி எனப்படுகின்றது. இது இரண்டு வகைப்படும். அவை வீரியம் இல்லாதவை மற்றும் வீரியம் மிக்கவை ஆகும்.

வீரியமில்லாத கட்டிகள் பொதுவாக ஆபத்து குறைந்தவை. மேலும் இந்த கட்டிகளின் வளர்ச்சி மற்றும் பரவுதல் வேகம் குறைவாக இருக்கும். வீரியமுள்ள கட்டிகள் அல்லது புற்றுநோய் கட்டிகள் மிகவும் ஆபத்தானவை. பொதுவாக உடலின் மற்ற பாகங்களில் தொடங்கி மூளையில் பரவுவதே இந்த வகையில் அதிகமாக காணப்படுகின்றது. பொதுவாக மூளை கட்டி என்பது அனைத்து வயதினரையும் தாக்கும் ஒரு நோயாகும்.

**அறிகுறிகள்**

கடுமையான தலைவலி, உடல் வலிப்பு, தொடர் வாந்தி குமட்டல் மற்றும் சோர்வு ஏற்படுதல், ஞாபக மறதி மற்றும் மூளை சம்பந்தப்பட்ட வியாதிகள், பக்க வியாதி அல்லது உடலின் ஒரு பகுதியில் மட்டும் வலி ஏற்படுதல்

மேற்காணும் அறிகுறிகளில் ஏதேனும் ஒன்று தென்பட்டாலும் உடனடியாக மருத்துவரை பார்ப்பது நலம்.

# இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** :அனைவரிடமும் நட்புடன் பழகுவீர்கள். குடும்பத்தின் முக்கிய தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்** :சமூகத்தில் நற்புகழுடன் விளங்குவீர்கள். பணவரவு திருப்திகரமாகும். விரும்பிய ஆடம்பரப் பொருளை வாங்குவீர்கள்.

**சிம்மம்**: சுறுசுறுப்பாக செயல்பட்டு, பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வருமானம் அதிகரிப்பதால், பணக்கடன் தீரும்.

**துலாம்** : மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வருமானம் உயரும். உடன் பிறந்தவர்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு** : புதிய திட்டங்களை பரிசீலித்து செயல்படுத்தவும். தொழிலில் எதிர்ப்பை சமாளித்து, வெற்றி காண்பீர்கள். தொழிலில் சீரான வளர்ச்சியும், லாபமும் இருக்கும்.

**கும்பம்** :திட்டமிட்ட பணி நிறைவேற தாமதம் ஆகலாம். நண்பர்கள் விடயத்தில் நிதானம் தேவை. நிகழ் கால அனுபவம், புதிய படிப்பினை அளிக்கும்.

**ரிஷபம்** : செயல்களில் உரிய திட்டமிடுதல் அவசியம். வார்த்தையின் இனிமையால் நல்லவரின் நட்பை பெறுவீர்கள்.

**கடகம்** : மன உறுதியுடன் செயல்படுவீர்கள். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். உடன் பிறந்தவர்களுக்கு சுபநிகழ்ச்சி நடத்த யோகமுண்டு.

**கன்னி** : கடந்த கால நற்செயலுக்குரிய பலனை, தற்போது காண்பீர்கள். எதிரிகள் பலமிழந்து போவர். பணி இலக்கை நிறைவேற்றுவர்.

**விருச்சிகம்** :செயலில் முழு அளவில் வெற்றி உண்டாகும். குடும்பத்தில் சுபநிகழ்வு நடந்தேறும். உறவினர் மத்தியில் செல்வாக்கு கூடும்.

**மகரம்** : விலகிய உறவினரும் சொந்தம் பாராட்டுவர். பணியில் புத்துணர்வுடன் ஈடுபடுவீர்கள். வாகன பயணம் இனிதாக அமையும்.

**மீனம்** : பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். உடன் பிறந்தவர்களின் அன்பு, ஆதரவு கிடைக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்புப் பணி மேற்கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## உடற்பயிற்சி போட்டி

– கதிரவன்–

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சி போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை 24.05.2015 மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

உடற்பயிற்சி குழுவினரையும் அவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களையும், அதிபரையும் படத்தில் காணலாம்.



# விளையாட்டு முரசு

## கால்பந்தாட்ட தொடர் – மூதூர்

மூதூர் சந்தை வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் 2015ஆம் ஆண்டுக்குரிய மூதூர் கிண்ண கால்பந்தாட்ட போட்டியின் ஆறாம் நாள் நிகழ்வு கடந்த புதன்கிழமை மூதூர் பொது விளையாட்டு மைதானத்தில் சங்கத்தின் தலைவர் ஜனாப் சகாப்தீன் இர்பான் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கிருஸ்ணபிள்ளை துரைராஜசிங்கம், அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் தங்கவேல் ஆகியோர் கலந்து கொண்டனர். மிகவும் சுவாரஸ்யமான முறையில் இடம்பெற்ற இன்றைய போட்டியில் மூதூர் ப:.றியா மற்றும் இக்பால் அணிகள் மோதின.



## பெரிய கல்லாறு மத்திய கல்லூரி முதலிடம்

கிழக்கு மாகாண பாடசாலைகள் மட்டத்தில் குருக்கள்மடம் மகா வித்தியாலய உள்ளக அரங்கில் நடைபெற்றுவரும் விளையாட்டு போட்டிகளில் பூப்பந்தாட்ட போட்டியில் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியில் மட்டக்களப்பு, பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பெரியகல்லாறு மத்திய கல்லூரி முதல் இடத்தினைப்பெற்றுக்கொண்டது.

அத்துடன் 15வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான போட்டியில் இரண்டாவது இடத்தினையும் பெற்றுள்ளது. பெரியகல்லாறு மத்திய கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் வி.திருச்செல்வம் மற்றும் திருமதி.A.இராஜரத்தினம் ஆகியோரின் வழிகாட்டலில் பூப்பந்தாட்ட பயிற்சியாளர் ரி.புருசோத்தமனால் இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.



## முதலிடம்

2015ஆம் ஆண்டுக்கான மாகாண மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் மட். கல்லடி வேலூர் ஸ்ரீசக்தி வித்தியாலயம் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. வலயமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தெரிவாகி இருந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாகாண மட்ட (கிழக்கு மாகாணம்) உடற்பயிற்சிப் போட்டியிலும் இப் பாடசாலை முதலாம் இடத்தைப் பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

## ஓய்வு பெற வற்புறுத்த வேண்டாம்

மேற்கிந்திய தீவுகள் சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது. முதல் போட்டி ஜூன் 3ம் திகதி தொடங்கவுள்ளது. இத்தொடரில் மூத்தவீரர் சந்தர்பால் சேர்க்கப்படவில்லை. இதற்கு ஜாம்பவான் லாரா எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

இதுபற்றி சந்தர்பால் கூறுகையில், அவுஸ்திரேலிய தொடரில் எனக்கு வாய்ப்பு தாருங்கள் என்றும் ஓய்வு பெறும் முடிவுக்கு என்னை தள்ள வேண்டாம் எனவும் கூறியுள்ளார்.

## பச்சை குத்திய மனைவி



இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் டோனியின் மனைவி சாக்ஷி, அண்மையில் கொல்கத்தாவில் நடந்த ஐ.பி.எல் இறுதிப் போட்டியின் போது புகைப்படக்காரர்கள் புகைப்படம் எடுப்பதை தவிர்க்க தனது முகத்தை மூடிக்கொண்டார். அப்போது சாக்ஷி முகத்தை மறைக்கும் வகையில் தனது கையை வைத்து முகத்தை மூடிக் கொண்ட சமயத்தில் அவர் கழுத்தின் பின்புறத்தில் "மகி" என்று பச்சை குத்தியிருப்பது புகைப்படக்-காரர்களுக்கு தெரிய-வந்துள்ளது.

## மூவர் பணிநீக்கம் – புதிய முகாமையாளர் தெரிவு

இலங்கை தேசிய பெண்கள் கிரிக்கெட் அணியின் வீராங்கனைகள் மீது பாலியல் ரீதியிலான துன்புறுத்தல் இடம்பெற்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அறிக்கைகளின்படி, வீராங்கனைகள் மீது இரண்டு ஆண் அதிகாரிகள் பாலியல் துன்புறுத்தல்களை மேற்கொண்டமை உறுதிப்படுத்தப்பட்டதாகவும், இன்னோர் ஆண் அதிகாரி பொருத்தமற்ற நடத்தைகளில் ஈடுபட்டார் எனவும் தெரிய வந்துள்ளது. பெண்கள் அணியைக் கையாளுவதற்கு பெண்ணொருவரை நியமிக்காமை குறித்து இரு அறிக்கைகளும் கிரிக்கெட் சபையைச் சாடியுள்ளன.

எனினும், இவ்வாண்டு ஏப்ரலிலிருந்து, இலங்கை பெண்கள் அணியின் முகாமையாளராக முன்னாள் வீராங்கனை டீ சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## காலிறுதியில் சாய்னா

சிட்னியில் இடம்பெற்றுவரும் அவுஸ்ரேலிய ஓபன் பட்மின்டன் போட்டித்தொடரில் இந்தியாவின் சாய்னா நேவால், சீனாவின் சுன் யு-வை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். இப்போட்டியில் முதல் செட்டை 21-19 என்ற அடிப்படையில் சாய்னாவும் 2ஆவது செட்டில் 21 – 19 சுன் யுவும் கைப்பற்றினார்.

இதனால் வெற்றியை நிர்ணயிக்கும் 3ஆவது சுற்றில் இருவரும் போட்டி போட்டு விளையாடினார்கள். ஆனால் சாய்னாவின் அதிரடிக்கு சுன் யு-வால் ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால் சாய்னா மூன்றாவது செட்டை 21-14 என எளிதில் வென்று 2-1 என வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.



## நான் பதவி விலக மாட்டேன்

சர்வதேச கால்பந்து சம்மேளனமான பிபாவின் தலைமை அலுவலகம் சுவிட்ஸர்லாந்து நாட்டில் உள்ள சூரிச் நகரில் இயங்கி வருகிறது. உலகிலேயே மிகப் பெரிய விளையாட்டு அமைப்பு இதுதான். ஜோசப் பிளேட்டர் பதவியேற்றதில் இருந்து பிபாவில் ஊழல் மலிந்து விட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. எதிர்வரும் 29ஆம் திகதி பிபா தலைவருக்கான தேர்தலில் மீண்டும் தான் போட்டியிடப் போவதாக தற்போதைய தலைவரான ஜோசப் பிளேட்டர் அறிவித்திருந்தார்.

ஜோசப் பிளேட்டர் மீண்டும் தலைவர் பதவிக்கு போட்டியிட கால்பந்து ஜாம்பவான் மரடோனா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றார்.

## நேரம் கடத்தியமைக்கு அபராதம்


பாகிஸ்தான் - ஜிம்பாப்வே அணிக்களுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டித்தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. இத்தொடரின் போட்டியில் பந்துவீச கூடுதல் 3 ஓவருக்கு வீசக்கூடிய அளவு நேரத்தை அதிகமாக எடுத்துக் கொண்டதால் அணித்தலைவர் சிகும்புராவுக்கு 2 ஒருநாள் போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல அணியில் உள்ள வீரர்களுக்கு போட்டி கட்டணத்தில் 40 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 வது ஆண்டுக் கொண்டாட்டம் பாலையூற்று லூர்து அன்னை ஆலயம்





பாலையூற்று லூர்து அன்னையின் ஆலயத்தின் ஐம்பதாவது ஆண்டுக் கொண்டாட்டங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கடந்த 22ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இக் கொண்டாட்டங்கள் நாளை 31ம் திகதியுடன் நிறைவு பெறும் என ஆலயப் பங்குத் தந்தை வணக்கத்திற்குரிய மதுராந்தகன் குரூஸ் அவ்ாகள் தெரிவித்தார்.

நாளை நடைபெறவுள்ள பூசைகளைச் சிறப்பிப்பதற்காக திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி 17

## காணமற் போனவர்கள் காவல்துறையில்


மட்டக்களப்பு காவல்துறையில் காணாமற்போய் விட்டதாகப் புகாரளிக்கப்பட்ட இருவர் குச்சவெளி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்த சம்பவமொன்று நடந்தேறியுள்ளது.

மீன்பிடிப் பொருட்கள் மற்றும் படகு எந்திரங்களை வாங்கி விற்கும் இருவர் மட்டக்களப்பில் இருந்து திருமலைக்கு வந்த பின் அவர்களது தொடர்பாடல் அறுந்ததை அடுத்தே அவ்விருவரினதும் உறவினர்கள் காவல் துறையில் முறைப்பாடொன்றைப் பதிந்துள்ளனர். 17

## இறால்குழியில் குடியேற்றப்படப் போவது யார்? மக்கள் நிலஅளவைக்கு எதிர்ப்பு

இறால்குழி கிராத்திலுள்ள தமிழருக்குச் சொந்தமான பூர்வீக காணிகளில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்ற முயற்சியொன்று முறியடிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 27ம் திகதி காணி அளவீடுகளுக்கு வருகை தந்தவர்களை எதிர்த்து 17



## கிழக்கு மாகாணசபையில் கொண்டு வரப்படவிருந்த தீர்மானம் எங்கே?

கிழக்கு மாகாண சபையில் முன்மொழியப் படவிருந்த திருகோணமலை மாவட்ட தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் தீர்மானத்திற்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியாமலுள்ளது என அச் சங்கத்தினர் மலைமுரசிற்குத் தெரிவித்து-ள்ளனர்.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின் போது கள்ளு உற்பத்தியும் விற்பனையும் சங்கத்தின் கைகளிலேயே இருந்துள்ளது. 17

## ஆணைக்குழுவிற்குப் புதிய இரு ஆணையாளர்கள்

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் சனாதிபதி ஆணைக்குழுவிற்கு மேலும் இரு ஆணையாளர்களை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் காணாமல்போனோர் தொடர்பான சாட்சி விசாரணைகளை விரைவுபடுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

மனோகரி ராமநாதன் மற்றும் பிரியந்தி சுரஞ்ஜனா வித்தியாரத்ன ஆகியோர் மூவரடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஏனைய ஆணையாளர்-களாகும்.




தவிர வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் கடந்த காலப்பகுதியில் காணாமல்போனவர்கள் தொடர்பில் ஆணைக்குழுவினால் 17

## ஊடகவியலாளர் சங்கத் தலைவராக அப்துல் சலாம் யாசிம்



திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தலைவராக அப்துல் சலாம் யாசீம் தெரிவாகியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் பின் தங்கிய கிராமமான ரொட்டவெவ கிராமத்தில் பிறந்த அப்துல்சலாம் - பாத்தும்மா ஆகியோரின் புதல்வனான யாசிம் 2000ம் ஆண்டில் கிண்ணியா பிரதேசத்தில் முதல் வெளிவந்த 17




## மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்கள்


மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்களில் உங்களின் விபரங்களும் இடம்பெற வேண்டுமாயின் தகவல் அனுப்புங்கள். அனுப்புபவரின் அடையாள அட்டைப் பிரதி இணைக்கப்பட வேண்டும்.

## உடைந்து விழும் நிலையில் பாடசாலைக் கட்டடம்

தம்பலகாமம் பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றின் மாடிக்-கட்டடமொன்றில் ஏற்பட்டுவரும் விரிசல்களால் அக்கட்டடம் உடைந்து விழும் நிலையில் உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல விரிசல்களைக் கொண்டுள்ள இந்தக் கட்டிடமானது சுமார் 15வருட காலத்திற்குள்ளாகவே கட்டப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

கல்வித் திணைக்களத்தால் கட்டப்படும் தரமான கட்டிடங்களின் ஆகக் குறைந்த ஆயுட்காலம் 50 வருடங்கள் என தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 30.05.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.